
மிதக்கும்
திமிங்கலங்கள்
கோவி.மணிசேகரன்
கங்கை புத்தக நிலையம்

# முன்னுரை

இலக்கிய உலகில் அடியெடுத்து வைத்து ஐம்பது ஆண்டுகளாகின்றன. இலக்கியப் பொன் விழாவும் இனிது நிறைந்தது.

ஏராளமாக எழுதிக் குவித்தது போதும் என்கிற நெஞ்சத்துக்கு வந்துவிட்டேன். காலம் எதைச் சொல்லுமோ? சொல்லாதோ? ஆனால் உலகிலேயே அதிகமான சரித்திரச் சிறுகதைகளை எழுதியவன் என்கிற சிறப்பு நிற்குமானால் அதுவே போதும்.

இந்தத் தொகுப்பில் அடங்கி இருக்கும் சரித்திரச் சிறுகதைகள், புகழ்மிக்க பத்திரிகைகளில் வெளிவந்தவை யாகும்.

நூல் வடிவில் கங்கை புத்தக நிலையத்தார் வெளி யிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் என் இதயங்கனிந்த நன்றி.

வாசகப் பெருமக்களை என்றும் போல் வாழ்த்து கிறேன்; வணங்குகிறேன்.

சென்னை—93
02.05.1998

மிக்க அன்புடன்
**கோவி. மணிசேகரன்**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | மிதக்கும் திமிங்கலங்கள் | 5 |
| 2. | உதைக்கும் காலை.. | 18 |
| 3. | காக்கை பாடினி | 28 |
| 4. | இந்திரிகா | 42 |
| 5. | கறுப்புத் தாமரை | 51 |
| 6. | சுதந்திரக் கோட்டை | 61 |
| 7. | சோழகங்கம் | 75 |
| 8. | ஓவியப் பாவை | 86 |
| 9. | மகாகவிஞன் | 99 |
| 10. | நிலாக்குளியல் | 113 |
| 11. | நன்னூல் | 121 |
| 12. | பட்டுப்பூச்சி | 129 |
| 13. | மூங்கில் | 139 |
| 14. | வேட்டைவலம் | 148 |
| 15. | பாதமி | 158 |
| 16. | மாணிக்கக் கோபுரம் | 168 |

# மிதக்கும் திமிங்கலங்கள்

அமைதி நிலவும் மேலைக் கடல் நடுவில் புயலைக் கிளப்பியது அந்தப் போர். போரா அது? அது ஒரு பாயிரமே! இன்னும் அதிகாரங்களாய் நீளப் போகிறதே! அது ஒரு நெடுங்கதைக்கு ஒப்பானது.

பாயிரமே இதுவரை ஆயிரம் தலைகளைப் பந்தாடி விட்டது. நீலநிறக்கடல் செந்நிறமாய் அலைமோதியது. ஒருபுறம் கடம்பர் இனத்தைச் சார்ந்த கடல் கொள்ளைக் காரர்கள். மறுபுறம் சேரநாட்டு வில் வீரர்கள். ஆயிற்று பதினெட்டு நாட்கள். இன்னும் போர் ஓய்ந்தபாடில்லை.

கடம்பர் வரிசைக் கட்டி, மரக்கலங்களில் நின்று, வரிந்து கட்டிய தோரணையுடன் சேர நாட்டு வீரர்களைத் திக்குமுக்காடச் செய்கிறார்கள். அவர்களுக்கு உதவியாகக் கடற் கொள்ளை யவனர்கள் வேறு கலந்து கொண்டு புதிய புதிய உத்தியில் சேரர்களைப் புரட்டியடிக்கிறார்கள்.

திணறிப் போனான் திண்தோள் மறவனான சேரர் குலத் தானைத் தலைவன் வில்லவன் கோதை.

நீண்டகன்ற பெருத்த நாவாயின் மேல் நின்றவண்ணம் பார்வையிடுகிறான். கடம்பர்களுடைய நாவாய்களும் மரக்கலங்களும், தோணிகளும் மிதக்கும் திமிங்கலங்களாய்க் காட்சி அளிக்கின்றன. கடம்பர் எனும் கடற் கொள்ளைக் காரர்களே மிதக்கும் திமிங்கலங்கள்தாமே!

வில்லவன் கோதை மட்டுமா இவ்வாறு பார்வை யிடுகிறான்? கடம்பர்களின் அரசனான இந்திரேஸ்வரனும் முறுக்கிய மீசையுடனும் முரட்டுப் பார்வையுடனும் கவனிக்கிறான்.

''இவை தரையில் பலம் கொண்ட யானைகள்; நீரில் பலம் கொண்ட திமிங்கலங்களின் பலமறியாதவை'' என்று கெக்கலி கொட்டிச் சிரிக்கிறான் கடம்பர்குல காவலன்.

இடிபட்டு உடைந்த மரக்கலங்கள் பல, சுறாமீன்களால் மிதிபட்டுத் துண்டு துண்டாக மிதந்து கொண்டிருக்கின்றன. போரால் அழிந்துபட்ட மனித மதிப்புகள் மிதந்த சற்றைக்கெல்லாம் கடல் ஜீவன் வயிற்றுள் புண்ணியம் தேடிக் கொண்டதால் சடலங்கள் அவ்வளவாகத் தென்படவில்லை. அவர்கள் கட்டியிருந்த ஆடைகளும் பூண்டிருந்த ஆபரணங்களும் மட்டுமே மிதந்து 'இந்தப் போர் எனும் அரக்க வெறி என்றுதான் பூண்டோடு ஒழியுமோ?' என்று அரற்றிக் கொண்டன.

இந்தப் போருக்குண்டான காரணம்தான் என்ன?

**ம**ஞ்ஞைகள் உலகம் வஞ்சிமாநகர். மஞ்ஞை என்றால் மயிலென்பர். இங்கே மயிலன்ன மடவரையே மஞ்ஞை யென்றால் மிகையல்ல. திங்கள் முகம் கொள் பெண்கள் வாழும் நாடல்லவா சேரநாடு? மயிலன்ன சாயல்; குயிலன்ன குரல்; ஒயிலன்ன நடை! இவற்றால் வந்த வினை தானே இந்தக் கடற்போர்?

கடல் வாணிபக் கலங்களை வழிமறித்துக் கொள்ளையிட்ட போதெல்லாம் பொறுத்துப் பார்த்துப் போர் தொடுக்கலாம் என்றிருந்த வீரவேந்தன், கயல்விழி

மாதர்களைத் தலைநகருக்குள்ளேயே புகுந்து கொள்ளை யிடத் தொடங்கி விட்ட பிறகு..?

ஒருவரா இருவரா? இந்த ஆறு மாத காலத்தில் முந்நூறுக்கு மேற்பட்ட தென்றனைய இளந்தேவதைகளாகப் பார்த்துத்தானே கொள்ளையிட்டிருக்கிறார்கள். அதுவும் திட்டமிட்டு உளவு பார்த்துக் கன்னிப் பெண்களைக் களவாடிச் சென்றிருக்கிறார்கள்.

தமிழ் நாகரிகம் எங்கு கை வைத்தாலும் பொறுக்கும்; பெண்கள் மீது கை வைத்து விட்டால் கொதித்தெழுந்து விடுமே!

கொதித்தெழுந்து போர் முரசம் கொட்டும்படி வீரகர்ஜனை புரிந்தான் சரித்திரத்தின் ஒளி விளக்கான செம்மை சேர் சிங்கம் செங்குட்டுவ மாமன்னன். இமயத்தில் வரம்பு கண்ட இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் புதல்வனாயிற்றே! மீண்டும் ஓர் இமயப் போரைக் காணப்போகும் வீரமா புருஷனாயிற்றே!

இடையில் பேரமைச்சரான அழும் வேளார் தப்புக் கணக்குப் போட்டு விட்டார். பெண்களை மீட்க மாமன்னர் ஏன் புறப்பட வேண்டும்? தானைத்தலைவன் வில்லவன் கோதையே போதும் என்று கடம்பர்களின் வலிமை தெரியாமல் தப்புக் கணக்குப் போட்டு விட்டார். படை களையும் அதிகமாக அனுப்பி வைக்கவில்லை. அதன் விளைவு?

கடற்போரில் கதிகலங்கி நிற்கத் தொடங்கி விட்டான் வில்லவன் கோதை. மேலும் கடம்பர்கள் போர் நெறியைப் பின்பற்றாமல் அநாகரிகமாகப் போரிடத் தொடங்கி விட்டனர். இரவில், தீப்பந்தங்களுடன் புகுந்து

போரிட்டதில்தான் சேரர் படைகளுக்குச் சேதம் காணத் தொடங்கிவிட்டது.

வில்லவன் கோதை இரவில் பாதுகாக்கப் போரிட்டானேயொழிய, போர் என்று புகுவதற்கு முனைய வில்லை. எனவே விழி பிதுங்கி வீழும் நிலைக்கு வந்து விட்டான்.

ஒரு வார காலமாகப் போரிடாமல் தொலைவில் நாவாய்களையும் கலங்களையும் வரிசை கட்டி நிறுத்தி மன்னருடைய உத்தரவுக்காகக் காத்திருந்தான் வில்லவன் கோதை. மன்னரிடமிருந்து ஓலை வந்தது.

''போரை நிறுத்தி வை; நான் படைகளுடன் வந்து கொண்டிருக்கிறேன்!''

ஆ! மாமன்னர் செங்குட்டுவ பெருமானே படை களுக்குத் தலைமை தாங்கி வருகிறார் என்கிற உற்சாகம் சேர வீரர்களுக்கு! அதுவரை போரின்றி அமைதி காத்தனர். இது கடம்பர்களுக்குத் தெரிய வேண்டுமே! ஏதோ பயந்து தான் போர் தொடுக்காமலிருக்கிறார்கள் என்று தவறுதலாகக் கணக்குப் போட்டு விட்டனர். அவ்விதமானால் படைகள் பின் வாங்கிச் செல்ல வேண்டுமே! ஏன் நங்கூரம் பாய்ச்சிக் கலங்கள் அசைந்து கொண்டிருக்க வேண்டும்?

கொள்ளையர் தலைவன்தானே இந்திரேஸ்வரன்? அவன் நெஞ்சு முட்ட யவனத்தேறலை (ரோமாபுரி மது) மாந்தி, சேர நாட்டிலிருந்து கொள்ளை கொண்டு வந்த அழகு மயில்களின் தோகைகளில் இளைப்பாறத் தொடங்கி விட்டான்.

சேரநாட்டு நாவாய்கள் வெகு தொலைவிலிருக் கின்றன. என்ன செய்து விட முடியும் என்கிற அலட்சியம்.

நள்ளிரவுப் போது, நடுக்கடலில் இருட்டு நடம் புரிந்து கொண்டிருந்தது. வானில் முதுகு கவிழ்ந்த கூன் நிலவு, கடற்போரின் முடிவைக் காணச் சகியாது குப்புறப்படுத்துக் கொண்டதோ என்னமோ?

கடம்பர்த் தலைவன் இந்திரேஸ்வரன், சேர அழகிகளை, சேரர் மீது இப்போது ஏற்பட்டிருக்கும் எரிச்சலும் வெறுப்பும் பழிவாங்கச் செய்தன. நாவாயின் மேல் தளத்தில் அவர்களை ஆடை உருக்குலைந்து நாண வைத்துக் குதூகலிப்பது கண்டு குப்புற வீழ்ந்திருந்த கூன் நிலவும் 'மேகத் திரைகளே! ஓடி வாருங்கள்!' என்று நாணிக் கூவியது.

சேர அழகிகள் அப்படியே கடலில் குதித்துத் தற்கொலை செய்து கொள்ளலாம் என்று பலமுறை முயன்றும் அது முடியவில்லை. முடியவும் முடியாது. பாதுகாப்பு அந்த அளவுக்கு இருந்தது.

அப்போது..

கடம்பர் படைத் தலைவன் ஜயதேவன் ஓடோடி வந்தான். இப்படிப் பெண்கள் ஆடை உருக்குலைந்து நிற்கும் நிலையில் உள்ளே நுழையலாமா? இது அவர்களுக்குத் தேவையில்லாத அலசல்.

''என்ன ஜயதேவா!'' என்றான் அக்கிரமத்தின் தலைவாசலை ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருந்த இந்திரேஸ்வரன்.

கடற்காற்று சற்று அளவுக்கு அதிகமாகவே வீசிக் கொண்டிருந்தது.

ஜயதேவன் சொன்னான்.

''தலைவா! வஞ்சியிலிருந்து செங்குட்டுவனே படை திரட்டிக் கொண்டு ஏறத்தாழ இரு நூறு நாவாய்களுடன் புறப்பட்டு விட்டானாம்!''

''பூ! இதுதானா? வரட்டும் அந்த செங்குட்டுவன்! நமது கடம்பர்த் தீவுக்கு ஆளை அனுப்பு. மரக்கலங்கள் வந்து குவியும்! அந்த சேர நாயை ஓட ஓட விரட்ட வேண்டும் என்பதுதானே என் ஆசை! இத்தனை பெண்களையும் அவன் மீட்டு விடுவானா என்ன? அந்த நாயைக் கடலில் புதைக்கிறேன்.''

இப்படி இந்திரேஸ்வரன் கூறுகிற போது, மானத்தைக் காக்கக் கைகளால் உடைகளைப் பொத்திக் கொண்டிருந்த சேரக் கயல்விழிகள் கோபத்தால் சிவந்தன.

ஜயதேவன் சொன்னான்;

''இரவோடு இரவாக இந்த மரக்கலங்களைத் தீர்த்து விட்டால், செங்குட்டுவன் வந்ததும் சுலபமாகப் போரிடலாமே!''

''நல்ல யோசனைதான்! இப்போது நானிருக்கிற நிலை? எல்லோருமே மது அருந்தி இருப்பார்களே! உனக்கு அந்தப் பழக்கமில்லை. உற்சாகத்தோடு பேசுகிறாய்! எதற்கும் இன்னும் ஐந்து நாழிகைப் போது கழித்து கலங்களை நகர்த்துங்கள். விடிகிற போது அவர்கள் நல்ல உறக்கத்தில் இருப்பார்கள். கலங்களை எரித்து விடுவோம்!''

அப்போது சோவென்று சூறாவளி போல வந்த மேலைக் காற்று அந்த நாவாயை அசைத்துப் பார்த்து ஆடச் செய்தது.

சற்றைக்கெல்லாம் குடித்ததும் குளித்ததும் போதுமென்று, இந்திரேஸ்வரன், ஓய்வு கொள்ளத் தனது அறையை நாடிச் சென்றான்.

பெண்கள் விடுதலை கண்டு பக்கத்திலிருந்த பெரிய அறைக்குள் நுழைந்தனர். அது அவர்களது சிறை. அறைக்குள் நுழைந்தவர்கள் உறங்கச் செல்லாமல் ஏதோ கலந்துரையாடல் நிகழ்த்துவது போல் இரகசியமாய்ப் பேசத் தொடங்கினர். சதித் திட்டம் தீட்டுவது போன்ற ஒரு சலசலப்பு.

அந்த அறையின் வெளியே காவல் நின்றவன், என்ன மௌனமாக ஒரு சலசலப்பு கேட்கிறதே என்று சந்தேகப்பட்டு மரப்பலகையாலான அந்த அறையின் துவாரத்தில் கண்புதைத்துக் கவனிக்கலானான்.

வழக்கமாக இவை அறையினுள் நுழைந்தால் ஒரு குறை அழுது அடங்குகிற கட்டைகள், இன்று மாறாக இருக்கவே ஏற்பட்ட சந்தேகம்.

அந்தப் பெண்கள் கூட்டத்தில் ஒருத்திக்கு ஏற்பட்ட முடிவின் முடிச்சுக்கள் தாம் உள்ளே அவிழ்க்கப்பட்டுக் கொண்டிருந்தன. அந்த முடிவு, கடம்பர் தலைவன் இந்திரேஸ்வரனுடன் நின்றிருந்தபோதே மந்திரக்கோலாய் ஏற்பட்டு விட்டது. அந்தச் சிந்தனைக்குச் சொந்தக்காரி, அறையின் வேற்றுப் பக்கமாக வெளிப்பட்டு நேரே, கடம்பர் தளபதி ஜயதேவனைக் காணச் சென்றாள். தங்கள் மாமன்னன் செங்குட்டுவனைக் காத்தால், சேர நாட்டையே காத்தது போலாகும் என்கிற தியாக உணர்வுடன் ஏற்பட்ட சிந்தனை அது.

எப்போது ஐந்து நாழிகையாகுமோ என்கிற வெறியுணர்வுடன் நாவாயின் கிழக்கு விளிம்பு மரச் சட்டத்தின் மீது அமர்ந்திருந்த ஜயதேவனுக்கு எதிரே ஒரு

பெண் வந்து நிற்க அதிர்ந்து போனான். இவள் ஏன் இங்கு வந்தாள்? தன்னை விரும்பித் தப்பி வந்திருக்கிறாளா?

அவனுக்கு அப்படி ஒரு சபல நினைவு. இயல்புதானே? ஆண்டுக்கு ஒருமுறை அல்லது இருமுறை வீட்டைப் பார்க்கப்போவார்கள். மற்றபடி அவர்கள் வாழ்க்கை கடல்கொள்ளை, பெண்கள் கொள்ளை தானே?

''ஏய், எங்கு வந்தாய்?'' என்று அதட்டினான் ஜயதேவன்.

வந்து நின்றவள், தயங்காமல் சொன்னாள் ''ஐயா! உங்கள் தலைவரை நான் மனமாரக் காதலிப்பவள்! அவர் எப்படியோ எனக்குத் தெரியாது.''

''இப்போது அதற்கென்ன?''

''நூற்றுக்கணக்கான இந்தப் பெண்கள் தரைவரை ஒழித்துக் கட்டுவது எப்படி என்று திட்டம் தீட்டுகிறார்கள். அதுவும் விடிவதற்குள்! சேரன் செங்குட்டுவன் மாமன்னர் வந்து வெற்றி பெறுவதற்குள், இவர்கள் வெற்றிபெரு வெற்றியாக இருக்க வேண்டுமாம்!''

கடகடவென்று சிரித்தான் ஜயதேவன்.

''என்னது! எங்கள் தலைவனை இந்தப் பெண்கள் தீர்த்துக் கட்டுவதாவது? செங்குட்டுவன் வந்தால் வெற்றி பெறுவானா எப்படி இந்தப் பெண்கள் தீர்த்துக் கட்ட நினைக்கிறார்கள்?''

''தெரியாது!''

''கோழிக் குஞ்சுகள் கோபுரமேறி ராஜாவின் பறவையைத் தீர்த்துக் கட்டுவதாவது?''

பளீரென்று அடித்த காற்றில் நாவாய் சற்று அசைந்து நின்றது.

''நல்லது; இப்போது என்ன செய்ய வேண்டும்! எங்கள் தலைவன் மீது அக்கறை கொண்டே நீயே உபாயம் சொல்லலாம்!''

''வேறொன்றும் செய்ய வேண்டாம். அவர்களைப் பிரித்து ஒவ்வொரு மரக்கலத்து அறையில் போட்டுப் பூட்டி விடுங்கள்! போர் முடியும் வரை தனியறையிலேயே இருக்கட்டும். விளக்கு வெளிச்சம் தவிர வேறு எதுவும் அவர்கள் கண்களில் படக் கூடாது. வேளைக்கு உணவு அனுப்பி வையுங்கள். தலைவரும் போர் முடியும் வரை இந்த மோகலீலைகளை ஏறக் கட்டி வைக்கச் சொல்லுங்கள்.''

''நீங்க எங்களுக்குச் சாதகமாகத்தானே பேசுகிறாய்?''

அப்போது பெண்கள் அடைபட்டிருந்த அறைக் காவலன் அங்கு வந்து வணங்கி நின்றான்.

''நீ எங்கு வந்தாய்?''

''அந்தப் பெண் சொல்வது முற்றிலும் உண்மை தளபதியாரே! நானே கவனித்தேன்!''

எங்கு ஜயதேவன் ஒப்புக் கொள்ளாமல் போய் விடுவானோ என்றிருந்த பெண்ணுக்கு, அந்தக் காவலன் வந்தது பேருதவியாக இருந்தது.

**மீ**ண்டும் நள்ளிரவில் பேய்க் காற்று. நாவாய் அசைந்து நின்றது. ஜயதேவன் சற்று நேரம் ஆலோசித்தான். உடனே காவலன் வீரனை நோக்கிக் கட்டளையிட்டான்.

''இருக்கும் முக்கிய எழுபது மரக்கலங்களில், இந்தப் பெண்களைப் பங்கு போட்டு அடைத்து வையுங்கள். போர்

முடியும் வரை பூட்டியே வையுங்கள். விளக்கை ஏற்றிக்கொண்டே அறையில் அடைபட்டுச் சாகட்டும்.''

''நானுமா தளபதி?'' என்றாள், நடக்கப் போகிற திட்டத்துக்குச் சொந்தக்காரியான அவள்.

''நீ இங்கேயே இரு! எனது தலைவனுக்கு நீ ஒருத்தி போதும்!''

அவளுக்கு இந்த ஆணைதான் அச்சத்தையுண்டு பண்ணியது. ஐயோ, 'இந்தத் தியாகம் எனக்குக் கிடைக்காமல் போய் விட்டதே!' என்று மனத்துள் குமுறிக் கொண்டாள்.

காவல் வீரன் உத்தரவைச் செயல்படுத்த விரைந்து சென்றான்.

காற்று 'சோ'வென்று வீசிக் கொண்டிருந்தது.

தனித்துத் தளபதியுடன் நின்ற விட்ட அந்தப் பெண், ஐந்து நாழிகைப் போதை எதிர்பார்த்து நின்றிருந்த தளபதி ஜயதேவனைக் கவனிக்கிறாள்.

''பெண்ணே! உன் பெயர்?''

அவள் சொன்னாள்: பொன்வாணி!''

''நல்லது. நீ எங்கு வேண்டுமானாலும் சென்று ஓய்வெடுக்கலாம். உனக்குப் பூரண உரிமையுண்டு.''

விட்டால் போதுமென்று நகர்ந்தாள் பொன் வாணி.

**நா**வாய் ஒவ்வொன்றிலும் அடைக்கப்பட்ட பெண்கள், தங்கள் தியாகங்களைச் சுறுசுறுவென்று மேற்கொள்ள முனைந்தனர்.

அந்தச் சின்ன அறைகளில் மூன்று அல்லது நான்கு பேர் வீதம் அடைபட்டுக் கிடந்தனர். அவர்கள் தங்கள்

துணிமணிகளை ஒன்று சேர்ந்தனர். விளக்கெரியக் கொடுக்கப் பட்ட எண்ணெயை ஊற்றிப் புரட்டினர். தீ வைத்தனர். நன்றாக எரியும் மட்டும் காத்திருந்த அவர்கள், பின்னர் குச்சிகளால் ஏந்தி மரத்தாலான அறைத் தடுப்புகளில் வீசி எறிய, சற்றைக்கெல்லாம் தீப் பிடித்து எரியத் தொடங்கி விட்டன மரக்கலங்கள்! அறையினுள் அடைபட்ட பெண்கள் அப்போதே கருகித் தீய்ந்தும் போயினர்.

எழுபது மரக்கலங்களும் எரிகின்றன.

தலைவன் இந்திரேஸ்வரன் மது மயக்கத்தில் சாய்ந்து கிடந்தான். தளபதி ஜயதேவனோ பதறிப் போய் வீரர்களுக்குச் சப்தமிட்டுக் கத்துகிறான். மது மயக்கத்திலிருந்து விழித்த கொள்ளைக்கார கடம்ப வீரர்களும், யவன வீரர்களும் இங்குமங்குமாக ஓடித் தோணிகளில் குதித்துக் கடல் நீரை வாரி வாரி இறைக்கிறார்கள்.

இதற்குள் விழித்துப் பார்த்த தலைவன் இந்திரேஸ்வரனுக்குப் போதை தெளிந்து பேதலித்துப் போனான்.

வெகு தொலைவில் வரிசை கட்டி நின்றிருந்த சேர நாட்டு நாவாய்கள் விழித்துக் கவனிக்கின்றன. தானைத் தலைவன் வில்லவன் கோதைக்கு ஒன்றும் புரிபடவில்லை என்ன நேர்ந்ததென்று கடம்பர்களின் மரக்கலங்கள் எரிகின்றன?

இந்தச் சந்தடியைப் பயன்படுத்திக் கொண்டு, பொன்வாணி தப்பித்து ஒரு சின்ன தோணி மூலம், சேரர் படை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள். மரக்கலங்கள் தீப்பிடித்து எரியும் களேபரத்தில் யார் கவனிக்க முடியும்?

ஐந்து நாழிகைப் போதுக்குள் கடலே பற்றி எரிவது போன்ற காட்சி.

மாமன்னன் செங்குட்டுவனும் கடற்படை திரட்டிக் கொண்டு நெருங்கி வருகிற போது, 'ஐயகோ! நமது படைகள் தாம் கடம்பர்களால் எரியூட்டப்பட்டு விட்டனவோ? என்று மனத்தளவில் அலறிக் கவனித்தான்.

பொழுது பலபலவென்று விடிந்து கொண்டிருந்தது.

கடம்பர் தலைவன் இந்திரேஸ்வரனும் தளபதி ஜயதேவனும், மிஞ்சிய வீரர்களும் எஞ்சியிருந்த மரக்கலங்களிலும் தோணிகளிலும் தங்கள் தீவுகளை நோக்கி விரைந்து கொண்டிருந்தனர். ஆனால் மரக் கலங்கள் தீப்பற்றி எரிந்த மர்மம்தான் அவர்களுக்கு இன்னமும் புரியாமலிருந்தது.

எதிர்பாராது எளிதில் கிடைத்த இந்த வெற்றினூடே கடல் போல் கடற்படைகளுடன் வந்து கொண்டிருந்த மாமன்னன் செங்குட்டுவனை வரவேற்று மகிழ்ந்தான் தானைத் தலைவன் வில்லவன் கோதை.

''சேனாதிபதி! என்ன நேர்ந்தது?''

''மன்னர் பிரானே! எனக்கே புரியாத புதிராக இருக்கிறது.''

''நான் சொல்லுகிறேன்!'' என்றொலித்த பெண் குரல் கேட்டுத் திரும்பினர். அங்கே வந்து நின்றாள் பொன்வாணி.

அவள் கூறிய அந்தத் தியாகச் செய்தி கேட்டுத் திடுக்கிட்டுப் போனான் மாமன்னன் செங்குட்டுவன். அவன் கண்களில் மாலை மாலையாகக் கண்ணீர் முத்துக்கள்.

*வெகு நேரம் கழித்துச் சிந்தனையிலிருந்து விடுபட்ட சேரமாமன்னன் செங்குட்டுவன் கணீரென்று குரலை எழப்பிச் சொன்னான்:*

*''இந்தக் கடற்போருக்கு இது ஒரு பாயிரம்! இன்னும் அதிகாரங்கள் நீளப் போகின்றன! அந்த நெடுங்கதைதான் இந்த நெடும் பயணம். கடம்பர் தீவுகளையே அழித்துத் திரும்புவோம்!''*

*கடற்படைகள் வடக்கு நோக்கி வரிசை கட்டிப் பயணமாயின. விற்கொடிகள், 'முன்னம் சூரபதுமன் எனும் கடம்பனை முருகவேள் தளபதி அழித்தார். இன்று முருகப் பெருமான் உருவில் செங்குட்டுவன்' என்று படபடத்துக் குரல் எழுப்பிக் கொண்டிருந்தன.*

***'கல்கி' தீபாவளி மலர் 1991***

# உதைத்த காலை

செங்கதிரோன் கிழக்கு வானில் செக்கச் செவேலென்று தகத்தகாயமாய் உதயம் காண்கிறான்.

புள்ளினங்கள் புறநீர்மைப் பண்ணில் மாமல்ல நரசிம்ம மகா சக்கரவர்த்தியின் பல்லவமாப் புகழைப் பாடிப் பறைசாற்றுகின்றன.

மாமல்லபுரத்துக் கடற்கரையில் அலைகள். அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்த அரிய தவத்தை நுரைச்சிரிப்பில் மோதி முழக்குகின்றன.

அந்த மாமல்லபுரம், சிற்பிகளிடமிருந்து என்றுதான் ஓய்வு பெறுமோ? எப்போதும் சிற்றுளிகளின் 'நங்நங்' என்ற ஓசை. பெரிய மகாசக்கரவர்த்தியான மகேந்திர பல்லவர் காலத்தில் தொடர்ந்த சிற்பப்பணி, அருந்தவப் புதல்வராம் இப்போதைய மகாசக்கரவர்த்தியான மாமல்லர் காலத்திலும் தொடர்ந்து கொண்டிருந்தது. இன்னும் தொடருமோ என்னமோ? அந்தக் கடற்கரை அப்படிப்பட்ட பாக்கியத்தைச் செய்திருந்தது.

அன்றைக்குக் காஞ்சித் தலை நகரிலிருந்து சக்கரவர்த்தி நரசிம்மவர்ம பல்லவர் வருகிறார் என்கிற செய்தி, மாமல்ல புரம் மட்டுமல்லாது திருப்போரூர் திருக்கழுக்குன்றம்வரை பரவி இருந்தது.

மாதம் இருமுறை மாமல்ல சக்கரவர்த்தி மனைவியரைக் கவனிக்கிறாரோ இல்லையோ?

மாமல்லபுரத்துக்கு வந்து சிற்ப வேலைகளைக் கவனிப்பதி லிருந்து மட்டும் விடுபட்டாரில்லை. அத்துணைக்குச் சிற்பமோகம். சென்ற பிறவியில் சிற்பியாக வாழ்ந்தாரோ என்னமோ?

மாமல்லபுரத்துச் சிற்பப்பணிகளின் அப்போதைய தலைமைச் சிற்பியான பெருங்கல்தச்சன் மட்டும் மனத்தளவில் சக்கரவர்த்தி மாமல்ல நரசிம்ம பல்லவரை மதிப்பதில்லை. ஒரு வன்மம் அவருள் சுழன்று கொண்டே இருந்தது. ஆனால் எதிரே வருகிறபோது மரியாதைகளில் தவறுவதில்லை. அனைத்தும் போலியான மரியாதைகள். அந்த வன்மத்தில் அடங்கிய மர்மத்தை நினைத்துப் பார்க்கும் தோறும் தமது கால்கள் இரண்டையுமே தரையில் ஓங்கி யோங்கி உதைத்துக்கொள்வார்.ஏ,கால்களே......

'அடே மாமல்லா! உன்னை நான் எப்படிப் பழி வாங்குவேன்? வீரத்தால் பழிவாங்கும் சக்தி என்னிட மில்லை. விவேகத்தால் பழிவாங்க நான் ராஜதந்திரியல்லன். ஆனால்...ஆனால்...எனது கலை வல்லமையால் பழி வாங்குவேன்! உனது கால்களை உடைப்பேன்! உருத் தெரியாமல் அழிப்பேன்....'

இந்த முனகல் கனவிலும் பெருங்கல் தச்சனுக்கு உண்டு. மனைவி எவ்வளவோ எடுத்துச் சொல்வாள். இந்தச் செய்தியைப் பொறுத்தமட்டில் அவர் செவிடர்.

அப்போது அவர் செதுக்கிக் கொண்டிருந்ததும் மாமல்ல சக்கரவர்த்தியின் உருவம்தான்.

அத்யந்த காம பல்லவேச்சுர மெனும் மாடக்கோயிலின் பாறைச்சுவரில் சக்கரவர்த்தி மாமல்ல பல்லவருடைய உருவத்தை முழங்கால் வரை செதுக்கிக் கொண்டிருந்தார் பெருங்கல் தச்சன்.

கல்லில் அமைந்து வந்த பல்லவக் காவலர் நீண்ட முடியணிந்திருந்த பாங்கு கண்கவர் காட்சிதான். செவிகளில் அணிந்திருந்த குண்டலங்கள் தோள்களில் புரண்டன. மார்பிலே மணிமாலை. இடக்கரத்தை இடுப்பில் ஊன்றி யிருந்த பாங்கு முன் கோபச் சிந்தனையின் வெளிப்பாடு. வலக்கையைத் தொங்கவிட்டது ஏன்? பெண்மையின் நாணமோ?

கலைஞானமிக்க கலைஞர்கள்!

இன்றைய தருமராச ரதம்.

பெரும்பாலும் பெண்மையின் கவிதாமுகவரியைப் பெற்றிருப்பர் என்கிற அழகின் எதிரொலியோ?

இடுப்பில் பட்டாடை கல்லில் கனிந்து தெரிந்தது. போர்வையற்ற வெற்றுடம்பு என்ன! மாமல்லர் மார்பில் விழுப்புண்களா பெற்றிருக்கிறார் என்பதனைக் காட்டப் போர்வையற்றுச்சமைக்கிறாரோ? இல்லை, அணிந்த பூணூல் குலம் கோத்திரத்தை நன்றாகவே காட்டட்டும் என்று போர்வையை நீக்கிவிட்டாரோ? அதிலும் பூணூலை எவ்வளவுக்குத் தடிமனாகச் சமைத்திருக்கிறார்...

இல்லை; இப்படிச் சமைக்குமாறு மாமல்ல மகாசக்கரவர்த்தி இட்ட கட்டளை. பின்னாளில், பல்லவரைச் சேர, சோழ, பாண்டியரோடு சேர்த்துவிடக்கூடாது என்று நரசிம்மவர்மனே நாவசைத்த கட்டளை. பார்ப்பனன் என்பவன் வேதம் மட்டும் ஓதுவதற்குப் பிறக்கவில்லை; வீரவாள் ஏந்தவும் பிறந்தவன் என்பதைப் பலரும் அறியும் பொருட்டு, காஞ்சி மகாசக்கரவர்த்தியே இட்ட கட்டளை. இந்தப் பார்ப்பனர் எங்கோ வடக்கேயிருந்து நுழைந்து விட்டவர்களல்லர்; குமரிக்கண்டம் கண்ட நாகர்களான,

நாகா(தேவி) மொழி பேசி 'நாகரி'கம் கண்டவர்கள்; எதையும் 'பார்த்து'க் கொள்வான் என்று அரசர் நியமித்த பார்ப்பனர்கள் தமிழிலிருந்து உதயம் கண்டவர்கள்; தமிழ்ப்பல்லவர்கள்; வல்லவர்கள்; நல்லவர்கள் என்பதனைப் பலருக்கு அறிவிக்கவே பல்லவ சாம்ராஜ்யாதிபதி இட்ட கட்டளை.

வன்மம் ஆயிரமிருந்தாலும் தலைமைச் சிற்பியான பெருங்கல் தச்சனால் கட்டளையை மீற முடியுமா? ஆனால், வன்மத்தை இந்தச் சிற்பத்தில்தான் காட்ட வேண்டும் என்று முடிவு செய்து கொண்டான்.

அப்படி என்னதான் அந்த வன்மம்?

சில ஆண்டுகளுக்கு முன்...

அப்போது பெருங்கல் தச்சன் இளைஞனாக இருந்த காலம். தந்தை சிவகுருநாத ஸ்தபதியாருடன் சிற்பக்கலை பயின்று வந்தபோது ஏற்பட்ட எரிதழல் நிகழ்ச்சி அது.

பேரரசர் மகேந்திரபல்லவ மகா சக்கரவர்த்தி காலத்தவர் சிவகுருநாத ஸ்தபதியார், திருக்கழுக்குன்றத்தை வாழுமிடமாகக் கொண்டவர். அவரது சிற்பக்கலை வல்லாண்மை கேட்டு அழைக்காத தமிழ்ப் பேரரசர்கள் எவருமிலர். ஆயினும் கழுக்குன்ற முருகப் பெருமானை விட்டு நீங்க மனமில்லாமல் பல்லவ குலப்பேரரசர்கள் பணிகளை மட்டும் ஏற்றுச் செய்துவந்தார்.

மகேந்திர வர்ம பல்லவர் மறைவுக்குப் பிறகு மாமல்லசக்கரவர்த்தி அரியணை ஏறினார். அடித்தது கடல் மல்லைபுரத்துப் பகுதிக்கு யோகம்! சிற்பிகளின் சிற்றுளிகள், சிற்ப ராகத்துக்கான சுருதிகளைச் சேர்க்கத் தொடங்கின. கடல் மல்லையை மாமல்லபுரமாக்கினார் மாமல்லச் சக்கரவர்த்தி.

சிவகுருநாத ஸ்தபதியார் தலைமையில்தான் மாமல்லபுரத்துச் சிற்பவேலைகள் மஹோன்னதமான முறையில் நடந்து வந்தன.

தமது இந்தச் சிற்ப முயற்சி ஒரு மாபெரும் பகீரத முயற்சி என்பதை உலகுக்கு எடுத்துச் சொல்ல, பகீரதன், ஒற்றைக்காலில் தவம் செய்வது போலக் கல்லில் சிற்பம் செதுக்குமாறு நரசிம்மவர்மரான மாமல்லச் சக்கரவர்த்தி ஸ்தபதியார்க்கு ஆணை பிறப்பித்திருந்தார்.

எத்தனையோ ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத்தான் அந்தக் கடற்கரையோரமாகக் கொட்டிக்கிடந்தன பெரும் பெரும் பாறைகள். இயற்கையின் இந்தக் கற்பாறைச் சீதனங்கள் உலகில் பலபகுதிகளில் கடற்கரைகளில் கொட்டிக் கிடக்கின்றன. தோன்றும் சூரியனோ, மறையும் சந்திரனோ தனது பொற்கிரணங்களை இந்தப் பாறைகள் மீது வீசத்தான் செய்கின்றன. ஆனால் பாறைகளைக் கொண்டு ஒரு கலைச் சொர்க்கமாக்க வேண்டும் என்று மகேந்திர வர்ம பல்லவச் சக்கரவர்த்திக்குத்தானே தோன்றியது? சகலகலா வல்லவரன்றோ? அவரது கற்பனைகளை இப்போது மகன் நிறைவு செய்வதில் மூழ்கிவிட்டார். இது ஒரு பகீரதத்தவம் என்றே மகன் மாமல்லர் எண்ணினார். எனவேதான் பகீரதத்தவச்சிலையை அழகுறச் செதுக்க ஆணையிட்டு இருந்தார்.

ஸ்தபதியார் தமது கற்பனை வளத்தை பகீரதனுக்கு அபிஷேகித்து உளியை நர்த்தனமிடச் செய்தார். ஆ! இருகரங்களையும் மேலே உயர்த்தி பகீரதன் ஒற்றைக் காலில் தவம் செய்கிற மெய்ப்பாடு நிறைந்த கோலம்...

மாலை, மாமன்னர் நரசிம்மவர்மர் வந்து பார்வையிடப் போவதாகச் செய்தி வந்தது.

சிகுருநாத ஸ்தபதியாரும், பகீரதச் சிலைமீது பகீரதப் பிரயத்தனம் கொண்டு பார்வையிடுவதும், நுணுக்கமாகச் சில இடங்களைச் செதுக்கி மெருகிடுவதுமாக இருந்தார். அந்தச் சிற்றுளி எடுத்துக் கொண்ட அக்கறை, ஊழின் வலிமை போலக் கனத்ததாலோ என்னமோ பகீரதன் ஒரு காலை மடித்திருந்த இடத்தில் ஏதோ பிசிறு தெரிய, அதனை உளி கொண்டு செதுக்கப்போய், வலக்கையில் இருந்த சுத்தி, தவறி பாதத்தின்மீது பட்டுவிட, பாதம் உடைந்து கீழே விழுந்து விட்டது! பதறிப்போய்விட்டார் ஸ்தபதியார். ஆ! என்ன உற்பாத அறிகுறி இது?

மாலை மாமன்னர் நரசிம்மவர்ம பல்லவர் வந்ததும், இச் செய்தி கேட்டுப் பெரிதாக வேதனைப்பட்டுப் போனார்.

''ஸ்தபதியாரே! நன்றாக அமைந்த சிலையை நீங்கள் வேண்டுமென்றே பின்னமாக்கவில்லையே!'' என்று பல்லவ மாமன்னர் கேட்கிறபோது கண்கள் நெருப்புத் துண்டங் களாகத் தெரிந்தன.

பயந்துபோன சிவகுருநாத ஸ்தபதி, ''மாமன்னர் பெருமானே! தான் பெற்ற குழந்தையை எவராவது கழுத்தைத் திருகி எறிவதுண்டா?'' என்று கேட்டதுதான் நரசிம்ம வர்மனுக்கு மேலும் கோபத்தைத் தூண்டிவிட்டது. என்ன கர்வமான கேள்வி இது?

கோபம் சிந்தனையை மறைக்கும் என்பதுபோல, பல்லவ மாமன்னர் முன்பின் யோசிக்காமல் அத்தனை பேர் முன்னிலையில் ''இந்த எனது காலின் மீதுதானே உங்களுக்கு வஞ்சம்? உங்கள் வீட்டு விசேஷத்துக்கு நீங்கள் அழைத்த போது நான் வரவில்லை. என்ன சொன்னீர்களாம்! ''மன்னர் பாதம் படக்கூடிய மாடமாளிகையா இது?'' என்று உங்கள் வீட்டையும் குறை கூறினீர்களாம். ஊடே என்னையும்

குறைகூறிப் பேசினீர்களாம். நானறிவேன். அந்த வஞ்சத்தை பகீரதன் காலில் தீர்த்துக் கொண்டீர்கள். இல்லையா?'' என்று மாமல்லபுரமே அதிருமளவுக்குக் கர்ஜித்தார்.

ஸ்தபதியாரும் ''ஐயோ! மன்னா, நான் அதை எண்ணி இதைப் பழிவாங்கவில்லை'' என்று கூறிக் காலில் விழப்போக, அவரை எட்டிக் காலால் உதைத்த காட்சிதான், சிற்பக்குடும்பத்துக்கு கௌரவத்தையே தலைகுனியச் செய்து விட்டது.

என்னதானிருந்தாலும் கலைஞர்களை அரசு கௌரவப்படுத்த வில்லையானாலும் அவமதிக்கக் கூடாது. மாமல்லச் சக்கரவர்த்தி அவமதித்து விட்டார். சிற்பியின் குடும்பம் ஏழைமை மிக்கதாக இருக்கலாம். ஏளனமிக்கதாகச் செய்யக்கூடாதல்லவா?

மாமன்னரும் சிந்தியாமல் செயல்பட்டுவிட்டார். தனது சிற்பத் தவம் இந்த உற்பாதத்தின் காரணமாகத் தடைப்பட்டுப் போகுமோ என்கிற வெறித்தனத்தின் வேகம் பகீரதத் தவத்தையே இந்தச் சிற்பி கலைத்து விட்டானே என்கிற கோபத்தின் எதிரொலி.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, சிவகுருநாத ஸ்தபதியார் மனநோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையானார். அதற்குப் பின் அதிக நாள் உயிர் வாழவில்லை. ஒருநாள் அவர் கலைப்பதம் அடைந்தார்.

தந்தையார் விட்டுச்சென்ற சிற்பப் பணியினை மகனான பெருங்கல் தச்சன் பொறுப்புடன் தலைமையேற்று நடத்தி வந்தார்.

கடல்மல்லையான மாமல்லபுரம் சிற்பச் சொர்க்கமானது. கடலலைகளும்கூட இந்தப் பெருமையால்

ஓரடி அதிகமாகவே தலைதூக்கிப் படம் விரித்துப் பாய்ந்து ஓசையெழுப்பின.

பெருங்கல் தச்சனின் நெஞ்சில் மட்டும் தந்தையை அவமதித்த பல்லவ மாமன்னனைச் சரித்திரம் உள்ளளவும் பழிவாங்க வேண்டும் என்கிற வன்மம் மறையவில்லை.

அன்று தந்தை செதுக்கிய பகீரதன் சிலை, தனியானது. சிலையைத் தூக்கி எறிந்துவிட்டார்கள். அதற்கு மாறாக, படர்ந்த பாறையில் பெருங்கல் தச்சன், பிராயச்சித்தமாகப் பகீரதத்தவத்தைப் பழுதில்லாமல் செதுக்கி முடித்துப் பாராட்டையும் பெற்றுவிட்டார். ஆனால் இப்போது செதுக்கிவரும் மாமல்லச் சக்கரவர்த்தியின் சிலையில் பழிவாங்கப்போகும் சரித்திரம்!

தந்தை சிவகுருநாத ஸ்தபதியார் அடிக்கடி கனவில் வந்து எச்சரித்தார்.

''ஏ, மகனே! மாமல்லரைப் பழி வாங்காதே! மாமல்லச் சக்கரவர்த்தி, தமது தந்தையார் மகேந்திரவர்மரைப் போல ஆழச்சிந்திக்கும் பொறுமை கொண்டவரல்லர். முன்கோபி. ஏதோ யோசியாமல் நடந்து விட்டார். அரசப் பாவத்துக்கு ஆளாகாதே!''

இதுபற்றியதில் பெருங்கல் தச்சன் தந்தை உயிருடனிருந்து சொன்னாலே கேட்க மாட்டார் என்றால், கனவைத்தானா சட்டை செய்யப் போகிறார்?

அற்புதமாக-ஜீவனோடு அமைந்த மாமல்லச் சக்கரவர்த்தியின் உருவத்தைக் கவனிக்கிறார் பெருங்கல் தச்சன்.

ஆ! தத்ரூபமான ' சிலை. மன்னர் இச்சிலை வடித்தமைக்கு மிகப்பெரிய பரிசில் வழங்கப் போகிறார் என்று அந்தச் சிற்பக் கூடமே பேசிக் கொண்டது.

ஆனால் பெருங்கல் தச்சன்?

தந்தைக்கு நேர்ந்த அவமானத்தை மறந்துவிட வில்லையே! அன்று காலுடைந்த பகீரதன் சிலையைத் தூக்கி எறிந்து விட்டார்கள். இந்த மாமல்லச் சக்கரவர்த்தியின் சிலையைத் தூக்கி எறியமுடியாது. அப்படி எறிவதானால் இந்தக் குடவரைக் கோயிலையே எறிந்தாக வேண்டும். இந்தப் பாறைக் கோயிலை எறிவதும் சாத்தியமாகாது. மாடக் கோயிலான இந்த அத்யந்த காம பல்லவேச்சுரம் சரித்திர முக்கியத்துவம் பெற்றதாயிற்றே! இதை உடைப்பதன் மூலம் மாமல்லபுரமே மூளியாய் விடுமே! எனவேதான் இந்த இடத்தில் மாமல்லச் சக்கரவர்த்திக்கு உருவம் சமைக்கத் தொடங்கியது.

உச்சிமுதல் முழங்காலுக்குக் கீழ் வரை நன்றாகத் தத்தரூபமாக முடிந்திருக்கிறது. இனிப் பாதங்களைச் செதுக்க வேண்டும்.

ஆ! இந்தப் பாதகங்கள்தாமே எனது தந்தையை உதைத்தவை? இந்த உதைத்த காலையே பழிவாங்குவேன்...

'சோ'வென்று கடலலைகளின் ஓசை. 'வேண்டாமே பெருங்கல் தச்சா! இவை உலகளக்கும் பாதங்கள்!' என்று கடலலைகள் இரைகின்றனவோ?

உதைத்த காலை மன்னிப்பதாவது? உலகம் உள்ளளவும் இந்தப் பாதங்கள் இருக்கக் கூடாதவை. பாதங்களற்ற பேய் மாதிரியே இந்தக் கிரீடமணிந்த உருவத்தின் தோற்றமிருக்க வேண்டும். இனி எவரும்

பாதங்களைச் செதுக்கிப் பூர்த்தி செய்யாவண்ணம் பாறையின் மேடான பகுதியையும் செதுக்கிவிட வேண்டும்.

வெறிகொண்டு பாறையின் மேட்டளவைக் குறைக்கிறார் பெருங்கல் தச்சன். இனி எவருமே பாதங்களை உருவாக்க உளிபிடிக்கக்கூடாது.

வெறி தீர்த்துக் கொண்ட பெருங்கல்தச்சன். தந்தைக்கு ஏற்பட்ட பழி தீர்த்துக் கொண்ட பெருங்கல் தச்சன், மனைவி மக்களை அழைத்துக் கொண்டு வடக்கு நோக்கிப் புறப்பட்டு விட்டார். ஏற்கெனவே அவருக்கு ஆந்திர மன்னர் களிடமிருந்து அழைப்பு இருந்தது. அதை ஏற்கப் புறப்பட்டு விட்டார்.

ஆனால் மாமல்லச் சக்கரவர்த்தி? அற்புதமாக அமைந்த தமது உருவம் பாதங்களற்றுக் கிடப்பதைப் பார்க்க முடியாமல் தவித்தார். உருவத்தைச் சிதைப்பதும் அபசகுனம்.

ஓ... தந்தைக்கு ஏற்பட்ட தலைகுனிவை மகன் சரித்திரத்தில் வஞ்சம் தீர்த்துவிட்டான். உதைத்த காலை உருப்படாமல் செய்துவிட்டான். கலையேருழவர் பகை காலத்துக்கும் நீடிக்கும் என்பது இதுதானே?

இன்றைக்கும் அந்த மாடக்குகைக் கோயிலில் (தருமராசரதம்) மாமல்லச் சக்கரவர்த்தி முழங்காலுக்குக் கீழே பூர்த்தி இல்லாமல் புலம்பிக் கொண்டிருப்பதைக் காணலாமே!

அறிவோடு மோதுகிறபோது ஆழ்ந்து சிந்தித்து மோத வேண்டும் என்பதற்கு இது ஓர் அடையாளம்!

**அமுதசுரபி தீபாவளி மலர் – 1990**

# காக்கை பாடினி

**கா** கா...

கா கா

கா கா...

சுபச் சொல்லைச் சுந்தரமாகக் கூறும் பறவைகளில், காக்கை தலை சிறந்த பறவை என்று கருதினாளே, நாமணக்கும் தமிழ் பாடும் நங்கையர்க்கினியாள் நச்செள்ளை.

கா, கா...

என்னைக் கா.. என்னைக் காப்பாற்று என்று சுயநலமாக இவை அழைக்கவில்லை. அவ்வாறெனில், இரைந்து கரைந்து இனத்தைச் சேர்ப்பானேன்?

காலையில், இளங்கதிர் அலகில் சோதியாய்க் கீழ்வானம் சிவக்க ராஜோதயம் காண்கிற போது இந்தக் காக்கைகள் 'கா கா' என்று திருப்பள்ளிப் பாடுவானேன்?

இந்த உலகைக் 'கா கா' -காப்பாற்று என்று பொதுநலப் பண்புடனல்லவா வருகை கூறி கரைகிறது; இனத்தைச் சேர்த்து மகிழ்கிறது! சே! இதுவா சுயநலப் பறவை?

நச்செள்ளையில் காதல், காகத்தின் பால் பட்டது ஒரு நனி சிறந்த பண்பாகும். எனவே அந்த இனத்துடன் கரைந்து, உரைந்து, மகிழ்ந்து வாழ்வது கண்கொள்ளாக் காட்சியாக அவளுக்குத் தெரிந்தது போலும்!

செம்பரிதி உச்சியில் நெருப்புத்தாண்டவம் புரியத் தொடங்கும் நேரம் வந்தால் போதும்...

நெய்யிட்ட சோற்றை ஏழு கலங்களில் கொண்டு வந்து, வீட்டு வாசலில் வைத்து, அருமைத் தோழியர்களை உதவிக்கு அழைத்து 'கா கா' என்று விருந்துபசாரக் குழைவுடன் கூவியழைப்பாள் நச்செள்ளை.

அவள் அழைக்க வேண்டுமா என்ன?

அந்த நேரம் வந்து விட்டால் கிராமத்தில் ஒரு காகம் அங்கு, இங்கு நகர்ந்து செல்ல வேண்டுமே! சுற்றுப் புறங்களில் ஆயத்தமாக அமர்ந்து காத்திருக்குமே!

நச்செள்ளை சோற்றுக் கலங்களுடன் வெளிப்பட்ட மறுக்ணமே...

ஒரே 'கா கா' இரைச்சல்தானே?

எனினும் நச்செள்ளை வழக்கம் போல் இனிதாகக் கூவியழைக்கத்தான் செய்வாள்!

போவோர், வருவோர் இப்போதெல்லாம் இதனை ஓர் அதிசய வேடிக்கையாகவே கவனிப்பர். முன்பெல்லாம் 'சரியான காக்கைப் பைத்தியம்' என்று சொல்வது போலச் சொல்வதில்லை. காக்கை மீது கவிதையே பாடி மகிழ்கிற செய்திதான் தொண்டித் தலைநகரம் அறிந்த செய்தியாயிற்றே! செய்தியைச் செவி சாய்த்த சேர நாடாம் பொறை நாட்டு மன்னன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்கூட நீண்ட நாட்களாக இந்தக் காக்கைக் கவிதா சிரோமணியைக் காண வேண்டும்; கண்டு மகிழ வேண்டும்; மகிழ்ந்து கவியின்பம் துய்க்க வேண்டும் என்றுதான் விழைகிறான். அதற்கான நேரம் அவனுக்குக் கிடைக்கவில்லை போலும்!

இந்தக் காக்கைகளுக்குத்தான் என்ன யோகம்?

இப்படி ஒரு தமிழ்ப் புலமைமிக்க மகளா? கலம் கலமாகச் சோறு வடித்துப் போடுகிறாள்! நெய்யுடன் கலந்த சோறா?

செல்வந்தர் குடும்பத்தில் பிறந்துவிட்டால்தான் என்ன? சோறு வடித்துப் போட ஆட்களா இல்லை? இது என்ன காக்கைப் பைத்தியம்? தமிழ் பாடுவதும் காக்கை; சோறு போடுவதும் காக்கையா? சென்ற பிறவியில் காகமாய்ப் பிறந்திருப்பாளோ?

நச்செள்ளை, காக்கையைப் போலக் கறுமை நிறம் கொண்டவளேயானாலும், கறுமையில் ஒரு நளினமிக்க கவிதையழகு அவளுடைய தோற்றத்தில் மிளிரும். கரிய பெரிய கண்களில் காந்தத்தின் ஈர்ப்புச் சக்தியுண்டு. இவளைப் பெண் கேட்டுப் பல செல்வந்தர்கள் 'நீ நான்' என்று போட்டியிட்டும், நச்செள்ளையின் நகம்கூட அவர்களை ஏற்க மறுத்தது.

தந்தையார்க்குக்கூட இது குறித்து வருத்தம். எனினும் மகளுடைய கருத்துக்கு அவர் குறுக்கே நிற்கவில்லை.

''தந்தையே! இவர்கள் என்னை அனுபவிக்க மணக்க விரும்புகிறார்களேயொழிய, என் தமிழை அனுபவிக்க வல்லவர்களா? பின்னால் இக்காக்கைத் தொண்டுக்குக் குறுக்கே நிற்பார்களேயானால்?''

நச்செள்ளையின் இந்தக் கேள்விக்கு அவள் தந்தையால் எந்த மறுமொழியும் கூற முடியவில்லை. பின் அவளது விருப்பத்துக்கு விட்டுவிட வேண்டியதுதானே?

இந்த நச்செள்ளையை எப்படியாவது அடைந்து, அனுபவிக்க வேண்டும் என்பதில் பக்கத்து ஊர் செல்வந்தன்

மகன் குறியாகக் கிடந்தான். எத்தனை முறை பெண் கேட்டும் எடுத்தெறிந்து பேசுகிறாளாமே, இந்தக் கறுப்பழகி நச்செள்ளைக் காக்கை?

செம்மலை என்கிற அந்தச் செல்வகுமாரன், தன் எடுபிடி நண்பர்களைக் கூட்டி, கலந்து ஆலோசித்தான்.

ஆலோசனையின் வெடிப்பில் கிளம்பிய வெளிச்சம்...

'நச்செள்ளையைக் கடத்திக் கற்பழித்து விட்டால், வேறு வழியின்றி மணந்து தீரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விடும்!'

ஓ... எவ்வளவு பயங்கரமான முடிவு இது?

அன்று நச்செள்ளை, மாளிகையின் முற்றத்தில் அமர்ந்து காக்கையைப் பற்றிய ஒரு கவிதை எழுதிக் கொண்டிருந்தாள்.

கையில் ஓலைநறுக்கு; எழுத்தாணி.

எங்கிருந்தோ ஒரு காகம் பறந்து வந்து முற்றத்தில் அமர்ந்து கரைகிறது. வழக்கமாக அவளது அன்பிற்குரிய காகம் இப்படிக் கரைவதுண்டு. இது வழக்கத்துக்கு மாறாக வந்து கரையும் அண்டங்காக்கை. ஏன் இப்படி விழுந்து விழுந்து, வாலையுயர்த்தி அடித்தொண்டையில் கரைய வேண்டும்? பகல் சோறுகூடப் போட்டாய் விட்டதே! இது சாப்பிடவில்லையோ?

உச்சிப்பகல் கரைந்து இரு நாழிகைப் போது கடந்திருக்கும். அப்போதுதான் காகங்களுக்குச் சோறு போட்டு, அவளும் உண்டு முடித்து அமர்ந்திருந்தாள்.

இன்னமும் அந்த அண்டங்காக்கை கத்திக் கொண்டே இருந்தது.

எழுந்து சென்று பானையில் இருந்த இரு பிடி அன்னத்தைக் கொண்டு வந்து மரத்தடியில் வைத்தாள். ஆனால் அந்த அண்டங்காக்கை?

சோற்றுப் பருக்கைகளைத் தொடாமல் கத்திக் கொண்டே இருந்தது.

ஓ... நெய் கலக்கவில்லையோ?

நெய்யூற்றிப் பிசைந்து காட்டினாள். சட்டை செய்ய வேண்டுமே! அது பாட்டில் அலறிக் கொண்டே இருந்தது.

அப்போது பார்த்து தோழிப் பெண் வர, அவளிடம் செய்தி கூற அவளும் அந்த அண்டங்காக்கையைக் கவனிக்கிறாள்.

''செள்ளை! முன்பு நீ ஒரு பாட்டு பாடினாயே! தலைவன் வருகையை முன்கூட்டி அறிவித்த காக்கைக்கு நன்றி சொல்ல வேண்டும் என்று. அதுபோல இது உனக்கு வரப்போகிற தலைவன் வருகையை அறிவிக்கிறதோ?''

''போடீ! அதுவும் அண்டங்காக்கையா?''

''ஏன்? அது என்ன செய்தியைத் திரித்தா சொல்லும்?''

இவர்கள் பேசியதைக் கேட்டுப் புரிந்து கோபப் பட்டோ என்னவோ, அந்த அண்டங்காக்கை பறந்து சென்று விட்டது.

''செள்ளை! நம் தோழி அயிரைக்கு உடல் நலமில்லை. நான் போய்ப் பார்த்து விட்டு வரலாம் என்று புறப்பட்டேன். நீ வருவதானால் உன்னையும் அழைத்துச் செல்லலாமே என்று வந்தேன்.''

''என்ன அவளுக்கு?''

''திருமணம் நிச்சயமாகி விட்டது. அதனால் ஏற்பட்ட அதிர்ச்சிக் காய்ச்சல்.''

''அப்படி ஓர் அதிர்ச்சிக் காய்ச்சல் வருமா என்ன?''

''என்னைக் கேட்டால்? நானே அயிரையைக் கேட்க வேண்டுமென்றிருக்கிறேன். இருவருமே கேட்போமே?''

''கேட்போமே!''

நச்செள்ளையும் புறப்பட்டாள்.

அன்னையிடம் சொல்லி விட்டுத் தோழியுடன் அயிரை வீட்டை நாடி நடந்தாள்.

கிராமம் சேர நாட்டுக்கே உரிய அழகுடன் இருந்தது.

அருவிக்கரை கண்வாயைக் கடந்து அவர்கள் நடந்து கொண்டிருந்தார்கள்.

அப்போது...

பக்கத்துக் கிராமத்துச் செல்வந்தர் மகன் செம்மலை, வழிமறித்தான்.

''நச்செள்ளை!''

நாகத்தின் சீற்றம் போலக் கவனித்த நச்செள்ளை, யார் நீங்கள்'' என்றாள்.

''செம்மலை, ஓயாமல் பெண் கேட்டுத் தூது அனுப்பும் காதல் பைத்தியம். நீ காக்கைப் பைத்தியமாக இருப்பது போல!''

''பண்பற்றவன்; வழி விடு.''

"வழிவிடவா வழிமறித்தேன்?"

என்று கூறிய செம்மலை, நச்செள்ளையின் கரத்தைப் பற்ற, உடனிருந்த தோழிப் பெண், பளீரென்று ஓர் அறை விட்டாள். அதற்குள் செம்மலையின் தோழர்கள், தோழிப்பெண்ணைக் கடத்த ஓடிவர, நச்செள்ளை பயந்து போனாள். ஓ... இன்று பெண்ணுக்கே உரிய கண் பறிபோகப் போகிறது..!

எவரைத் துணைக்கு அழைப்பாள்? அழைத்தால்தான் அங்கு யார் வருவர்?

செம்மலை மிருகத்தனமாக நச்செள்ளையை இழுத்து ஒரு மரத்தடியில் தள்ள, அப்போது ஒரு காகம் மரத்தில் துள்ளிப் பறக்க, ஓ... என் காகம்! என் காகங்கள்...!

காப்பாற்ற வருமா?

என்ன பைத்திய எதிர்பார்ப்பு!

கா, கா, கா, கா, கா, கா.

நச்செள்ளை உரக்கக் கத்துகிறாள். தொண்டை கிழியக் கத்துகிறாள். செம்மலையோ பலாத்காரம் செய்கிறான்.

ஆனால் அந்தக் குரல்.. மந்திரக்குரல்.. கா, கா என்ற தாரக மந்திரச் சொல்...

காப்பற்றவே புறப்பட்டு விட்டன போல, ஒரு காகம் கரைய...அடுத்த கணம் ஒன்றிரண்டாய், நூறு நூறாய்..

காக்கைப் பந்தலே போல...

வட்டமிட்ட காகங்கள், செம்மலையைக் கூரிய அலகுகளால் கொத்து கொத்தென்று கொத்த, ரத்தம் பீரிடுகிறது...

கத்துகிறான் செம்மலை...

நண்பர்கள் ஓடிவிட்டனர்

செம்மலை கண்கள் சிவந்த நீரில் இருண்டு போயின.

உடல் முழுவதும் ரத்த ஒழுக்கு! எங்கும் அலகுகளின் கொத்தல் கண்கள் ரத்தத்தை வழியச் செய்கின்றன.

கீழே மயங்கி விழுந்த செம்மலை உயிருடன் போராடிக் கொண்டிருந்தான். ஊர் மக்களே அதற்குள் கூடிவிட்டனர். என்ன அதிசயம் இது!

நச்செள்ளை காக்கப்பட்டாள்.

ஒரு வாரத்துக்குப் பிறகு...

கேள்விப்பட்ட சேர மன்னன் ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் அந்தக் கிராமத்துக்கு வருகை தரும் செய்தி பரவியது.

தன்னைப் பார்க்க மன்னர் வருகிறாரா? தவித்துப் போனாள் தமிழின் தங்கப் புதல்வி நச்செள்ளை.

அந்தக் கிராமமே அதற்குரிய மக்களின் உழைப்புக் கேற்ப அலங்காரம் பூண்டு மகிழ்ந்தது.

சேர மன்னர் ஆடுகோட்பாட்டுச் சேரலாதர், இந்தக் கிராமத்துக்கு எழுந்தருளுவதாவது? எல்லாம் நச்செள்ளை பிறந்த பேறு; அவள் படித்த தமிழ் தந்த பேறு! எல்லாவற்றையும்விட அவள் காகங்கள்பால் அன்பு பூண்டு காட்டும் விசித்திரப் பரிவின் விநோதகூத்தே மூலகாரணம்.

சரியான உணவு நேரத்தில் சேரமன்னர் கிராமத்துக்கு வருகை புரிந்து விட்டார். அவருக்கும், அவருடைய பரிவாரங்களுக்குமான உணவு வகைகள் ஆயத்தமாகி இருந்தன. நச்செள்ளையின் தந்தையின் மேற்பார்வையில் இவை யாவும் தடபுடலாக நடைபெற்றிருந்தன.

கிராமத்தையடைந்ததும் நேரே நச்செள்ளையார் வீட்டை நாடி வந்து ரதத்தில் இறங்க, நச்செள்ளை, ஒரு பருவமடைந்த பெண் என்று நாணாது துணிவாக வெளியே வந்து தந்தையுடன் வரவேற்றாள். இதில் நாணப்பட என்ன இருக்கிறது? அவளது பருவம் மட்டுமேயானால் கதவிடுக்கில் நிற்கும். அவளது தமிழுணர்வு நிமிர்ந்ததில் வியப்பதற்கு ஒன்றுமில்லையே! ஆனாலும் பண்பு நாணியே தலைகுனிந்து வரவேற்றது.

காக்கைகள் ஒன்றன்பின் ஒன்றாக வருகைதர ஆரம்பித்தன. அவற்றுக்குரிய நேரமும் அதுதான்.

காக்கைகளுக்குத் தாமதம் ஏற்பட்டு விடக் கூடாதே!

மன்னரை வீட்டினுள் அழைத்துச் சென்று அமரச் செய்தாள் நச்செள்ளை. அவளது இளமை விளையாடும் கறுப்பழகும் மன்னரைக் கொஞ்சம் கிறங்கச் செய்தது. காரணம் ஆடுகோட்பாட்டுச் சேரலாதர். இளம் பெண்கள் விளையாட்டில் இணையற்ற மன்மதர். இது நச்செள்ளை யறியாத ஒன்று. ஆனாலும் தமிழிடத்தில் என்றுமே தகாத எண்ணம் கொண்டவரல்லர் சேரலாதர். வணங்குக்கூடிய தமிழை வணங்கியே தீருவார்.

''மன்னர் பெருமானே! பொறுத்தருள வேண்டும். என் அன்பிற்கினிய காகங்கள் காத்து நிற்கின்றன. அதுவரை தந்தையாரிடம் பேசிக்கொண்டிருங்கள். அவற்றுக்குச் சோறு

படைத்து விட்டுத் திரும்புகிறேன்'' என்று பணிவுடன் கூறினாள் நச்செள்ளை.

சேரலாதர் மகிழ்ச்சியுடன் சிரித்துக் கொண்டே, ''நச்செள்ளை! நான் வந்ததே இரண்டைக் கண்டு களிக்க. ஒன்று உனது தமிழ்ப் புலமை; இரண்டு காக்கைகள் உன்னிடம் காட்டும் பரிவு. முதலில் காக்கைகளை நானும் வந்து பார்க்கிறேனே!'' என்று கூறி எழுந்து கொண்டார்.

வெளியே வந்த நச்செள்ளை, வரிசை கட்டிருந்த கலங்களிலிருந்த சோற்றை நெய்யிட்டு, காகங்களுக்குப் படைக் கிறாள். உடன் அவளது தோழியர்களும் உதவுகிறார்கள்.

ஆ! காக்கைகளா? சேர நாட்டு ஒட்டு மொத்தமான காக்கைகளே இங்குதான் குடியேறி விட்டனவா? சில இடங்களில் பலிச் சோறு படைக்கிற போது காங்களையே காணவில்லை என்று முறையிட்டுக் கொண்டார்களே! இங்கே காங்கள் குடியேறிவிட்டதன் பஞ்சமோ?

சேர மன்னர் இக்காட்சியைக் கண்டு இவ்விதமாக வெல்லாம் எண்ணிக் கொண்டார்.

காக்கைகள் நூற்றுக் கணக்கில் நச்செள்ளை மீது விழுந்து பரண்டு பறந்தன. ஒரு நாழிகைப் போதில் ஏழு கலங்களில் இருந்த சோறு தீர்ந்து விட்டது. காக்கைகள் வயிற்றுக்குத் தேவையானதை மட்டுமே உண்டு விடை பெற்றன. இலவசமாகக் கிடைக்கிறது என்று சில மனிதர்கள் வயிறு படைக்க உண்டு அவதிப் படுவார்களே.. அவ்வாறு இல்லாமல் போதுமென்ற நெஞ்சமுடன் உண்டு, மகிழ்ந்து சென்றன.

சேர மன்னர் ஆடுகோட்பாட்டுச் சேரலாதர் வியந்த வியப்புக்கு எல்லையே இல்லை. இவள் என்ன காக்கையைப் பாடுகிறாள் என்றுதானே அதிகமாகக் கேள்விப்பட்டோம்.

காக்கையையே நேசிக்கிறாளே! இல்லை, இல்லை காகங்கள் இவளையல்லவா நேசிக்கின்றன!

காக்கை விருந்துக்குப் பிறகு, காவலன் விருந்து நடந்தது. நச்செள்ளை பக்கலில் அமர்ந்து விருந்துண்ணுவது ஒரு நற்பேறாகவே விற்கொடி வேந்தன் விழைந்து போற்றிக் கொண்டார்.

அன்று மாலை நச்செள்ளையுடன் நடந்தே அந்தக் கிராமத்தைப் பார்வையிட்டார் மன்னர் சேரலாதன்.

நச்செள்ளையைக் கற்பழிக்க முயன்ற அருவிக் கரையைப் பார்வையிட்டார்.

''நச்செள்ளை! அந்த அதர்மன் செம்மலை என்னவானான்?'' என்றார் மன்னர்.

''பிழைத்துக் கொண்டான்.''

''பிழைத்துக் கொண்டானா?'' சிலிர்த்து நின்று கவனித்தார் சேரமன்னர். உடனே மரண தண்டனை விதிக்கிறேன் என்பது போல இருந்தது அந்தப் பார்வை.

''ஆனால் காகங்கள் அவனை நடமாட விடவில்லை. மீண்டும் அலகுகளால் குத்தியே சாகடித்து விட்டன.''

''ஓ.. எனக்கே பயமாக இருக்கிறது.'' -உண்மையிலேயே பயந்து போனார் சேரலாதன்.

நச்செள்ளை நளினமாகச் சிரித்துக் கொண்டாள்.

அருவிக்கரை கண்வாயின் மேல் அமர்ந்தார் சேரலாதன்.

''மன்னா!''

துடித்துப் போய் விட்டாள் நச்செள்ளை.

''நச்செள்ளை! நீ பிறந்த இந்த மண்ணில் எங்கும் மகத்துவம் உண்டு. எங்கு அமர்ந்தாலும் அது தமிழ்ப்பீடமே!''

நச்செள்ளை மேலும் நாணத்தால் தலைகுனிந்தாள்.

''நச்செள்ளை! உன்னிடம் தனிமையில் தமிழ்க் கவிதை குறித்துப் பேசலாம் என்றுதான். வீட்டிலும் பேசலாம். ஆனால் இந்த இடம் சுகமாக இருக்கிறது.''

''நன்றாகப் பேசலாம் சேரநாயகா!''

''நீ ஏதோ காக்கையைப் பற்றி நிறைய பாடியதாகக் கேள்விப் பட்டேன்.''

''நிறைய பாடவில்லை. ஏதோ கொஞ்சம். இனிநிறைய பாடுவேன்.''

''ஒன்றை நான் கேட்டு மகிழலாமா?''

''ஆகா!''

அவள் ஒரு பாட்டை இனிமையாகப் பாடிக் காட்டுகிறாள்...

* 'திண்டேோர் நள்ளி கானத தண்டர்
பல்லாப் பயந்த நெய்யின் தொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெண்சோறு
எழுகலத்தேந்தினும் சிறிது என் தோழி
பெருந்தோள் நெகிழ்ந்த செல்லற்கு
விருந்து வரக கரைந்த காக்கையது பலியே!'

நச்செள்ளையின் இப்பாடலைக் கேட்டு மெய்சிலிர்த்துப் போனான் சேரலாதன்.

* குறுந்தொகை

''ஆ! காதலன் வருகையைக் காக்கை சொன்னது.. விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே! இந்த நன்றிக்கு எந்தப் பலி ஈடாகும்? நச்செள்ளை! எனது அரண்மனைக்கு வந்து புலவர் பீடத்தில் அமரலாமே!''

நச்செள்ளை ஒரு கணம் கண் மூடிக்கண் திறந்தாள்.

''மன்னா! நள்ளியும் இவ்விதமே அழைத்தார். மறுத்து விட்டேன்.''

''ஓகோ! அதுதான் நள்ளியை மறவாது பாடினாயோ?''

''மறவாது என்பதில்லை. நன்றியோடு. நன்னிற்குரிய பாடல் அல்லவா இது? ஏன்? தொண்டித் தலைநகரையும் மறாவது பாடி நம் நாட்டை உயர்த்தி இருக்கிறேனே!''

''கவனித்தேன் நச்சசெள்ளை!''

''இருட்டி வருகிறது; புறப்படுவோம்!''

சேரலாதன் எழுந்து கொண்டார்.

''நச்செள்ளை! ஒரே ஒரு கருத்து. இந்த இடத்தில் செம்மலை பகல் போதில் தவறாக நடக்கவே காகங்கள் வந்து உதவின. இதுவே இவரில் நிகழுமாயின்?

''நள்ளிரவிலும் இந்த நச்செள்ளைக்காக அவை வந்து உதவும். இப்பபோது இருட்டி விட்டது. வரவழைக் கட்டுமா?''

''ஐயோ! வேண்டாம். நான் ஒரு பாவமும் அறியாதவன்.

நச்செள்ளை முதல் முறையாகக் கல கலவென்று சிரித்து விட்டாள். அந்தச் சிரிப்பிலும் தமிழினிமை தெரிந்தது.

இருவரும் வீடு நோக்கி நடந்தனர்.

அன்றிரவு முழு நிலவாதலால், அரச பரிவாரங்களுடன் அரசனும், நச்செள்ளையும் கிராமத்து வெட்டவெளியில் அமர்ந்து நிலாச் சோறு உண்டு மகிழலாயினர்.

இரவு கழிந்து பொழுது புலர்ந்தது.

மன்னர் சேரலாதன் புறப்பட்டார். அப்போது...

''நச்செள்ளை! நீ என்றைக்கு எனது அரண்மனை நாடி வருகிறாயோ, அன்றுதான் மீண்டும் மகிழ்வேன்.''

''நிச்சயம் வருவேன். இப்போதே மகிழ்ச்சியுடன் புறப்படலாம்.

''மகிழ்ச்சி நச்செள்ளை''

மக்களை நோக்குகிறார் சேரலாதன்; எங்கும் மகிழ்ச்சி நிறைந்த வாழ்த்தொலிகள்.

என்ன எண்ணினாரோ, இளமையின் திருக்கோலம் பூண்ட சேரலாதன்.

மக்களை நோக்கி உரத்த குரலில் சொன்னாள்:

''கிராமத்துப் பெருமக்களே! நச்செள்ளை இங்கு பிறந்ததால் நீங்கள் உயர்ந்து இருக்கிறீர்கள். இன்று முதல், காக்கைகள் விசுவாசிக்கும் இந்தக்கிராமத்துக்குக் 'காக்கையூர்' என்று பெயரிடுகிறேன். காக்கைகளைப் பாடி மகிழ்வதில் ஆனந்தம் கொள்ளும் நச்செள்ளைக்குக் 'காக்கை பாடினி' என்ற சிறப்புப் பட்டம் வழங்குமாக!''

கிராம மக்கள் மேலும் வாழ்த்துக் குரல் எழுப்ப, சேரலாதன் காக்கை பாடினி நச்செள்ளையிடம் அன்புடன் விடைபெற்று, தலைநகர் நோக்கிப் பயணமானார்.

காக்கையூர் மக்கள், தங்களைப் பெருமைப்படுத்திய காக்கை பாடினியை வாழ்த்தி மேலும் மகிழ்ந்து கொண்டனர்.

**கலைமகள்- தீபாவளிமலர்- 1998**

# இந்திரிகா

''வெளிச்சத்துக்கு வேலி போட நீ யார் சாணக்கியனே? உன் வெளிச்சம் என்பது அழகின் பேரொளி; கலையின் வெளிப்பாடு! எனது காற்சதங்கையில் அவை, பிரகாசமாய், சப்தமாய், மகத சாம்ராஜ்யத்தின் மௌனத்தைக் கலைத்துக் கொண்டிருக்கின்றன! சந்திரகுப்த மகா சக்கரவர்த்தியே தயக்கம் காட்டுகிறார் எனில் நீ யார் சாணக்கியனே?''

சலங்கையொலியிலும் கர்ஜனையுண்டு என்பது போலக் கலகலவென்று சிரிக்கிறாள் இந்திரிகா.

'நீ'.....

என்ன கர்வமாக ஒருமை போட்டுப் பேசுகிறாள், இவள்?... என்னிடம் சிஷ்யையாக வர ஆசைப்பட்டவளா இவள்?...

'மௌரிய பிஸ்மார்க்' எனும் மலையன்ன புகழ் கொண்ட ராஜதந்திரியான சாணக்கியர் மருண்டு நோக்குகிறார். அர்த்த சாஸ்திரத்துக்கா இந்த அதிர்ச்சி?

''இந்திரிகா! உன் முடிவும் போக்கும்....?

''மூச்சைத் திணற வைக்கின்றன; அல்லவா?''

இந்திரிகா இந்திரியங்களை ஒருமுகப்படுத்தி நோக்குகிறாள்.

பன்முக சாணக்கியர் பலமிழந்து கவனிக்கிறார்.

புன்னகையின் நாவில் புயல் குந்துகிறது: ''சாணக்கியனே! நானே ஒரு சாதாரணக் குடிமகளாக இருந்திருப்பின், என்னைப் பிழிந்து சாறெடுத்து உனது மதுக்குவளையில் ஊற்றி, மனப்பற்கள் நறநறக்க அருந்தி, ஏளனச் சிரிப்பில் ஏப்பம் விட்டிருப்பாய்; நான் இந்தத் தேசத்துப் புகழ்கமிக்க ராஜநர்த்தகியாக இருப்பதால், உனது சூழ்ச்சி பலிக்கவில்லை.''

அகங்காரத்து உச்சியில் அமர்ந்துவிட்ட காணக்கியர், அடலேறு நிமிரல் கண்டு எழுந்துகொண்டார். ஏன் வந்தோம் என்றாய்விட்டது. எல்லாம் புகழ்ப்போதையால் வந்த வினை.

அப்போதைய பாடலிபுத்திரத்துச் சரிதத்தை எழுதி வந்திருந்தான் கிரேக்க அறிஞனான மெகஸ்தனிஸ். அவனுக்குக் கிரேக்க மொழியில் நன்கு பயிற்சி பெற்ற ஓர் உதவி தேவைப்பட்டது. இந்திரிகா அம்மொழியில் வல்லபி என்பதால், தம்மைப் பற்றியும் தமது சாம்ராஜ்ய பெருமை களைப் பற்றியும் எழுத வந்த மெகஸ்தனிஸ் என்பானுக்கு ராஜோபசாரம் நடந்ததோடல்லாது, அவளை உதவியாக நிற்கவும் ஆணையிட்டார் சந்திரகுப்த மகாசக்கரவர்த்தி. பேரழிகியும் ராஜநர்த்திகியுமான இந்திரிகாவே தனக்கு உதவி யாகக் கிடைக்கவே மெகஸ்தனிஸ் கிரேக்க கலைதேவதை யான அத்தீனாவே கிடைத்துவிட்டது போன்ற பெருமயக்கம் கண்டான்.

ஆனால், இந்த நாவலநீதியின் இணையற்ற பேரறிஞரான சாணக்கியர்? எங்கே தம் பெயர் காணாமல் போகுமோ என்று இடிவிழுந்து போனார். உதவியாக இருப்பவள் ஒரு சமயம் தம்மால் உதாசீனமாகக் தூக்கி யெறியப்பட்ட இந்திரிகா. அவளது கர்வத்தின் உச்சிக்கு இதுதானே காரணம்! எனினும் இழிதரும் நானம் மறந்து,

பழிதரும் சொல்லோயாயினும் வழிதரும் கால்போக்கில் வருகை தந்தார்; வாய் திறந்தார்; வரலாற்று விசாலத்தில் தமது புகழ் விலாசத்துடன் மட்டும் நிற்காமல், விகாசமாகவும் இடம் பெற வேண்டிக் கொண்டார். வந்த பிறகுதான் தெரிந்தது. விலசம் கூட இடம் பெறுமா என்று!

இந்திரியங்களை வென்றவள் போலச் சிரிக்கிறாள் இந்திரிகா. ஒருவிதத்தில் இது சரியுங்கூட; அவள், அன்று முதல்-சாணக்கியர் ராட்சஸ நோக்கோடு குரு தட்சிணை கேட்டாரே அன்று முதல்-குளிக்கிறபோது விட்டத்தை நோக்கியே குளிப்பாள். சித்தரங்களே வெட்கும் தனது ஜீவ சித்திரமான, கழுத்துக்குக் கீழ்ப்பட்ட இளமை பாகங்களைப் பாராது தேய்த்துக் குளிப்பாள். ஏ, சாணக்கியனே! உன்னைப் பழிவாங்காது என்னை நான் நிர்வாணமாகப் பார்ப்பதில்லை.

அப்படி என்ன நடந்துவிட்டது?

ராஜநர்த்தகியான இந்திரிகாவின் மீது, சந்திரகுப்த மகா சக்கரவர்த்தியே மோகம் கொள்ள பயந்தபோது, சாணக்கியர் கொள்ளலாமா?

எழுதிய அர்த்த சாஸ்திரம் நகல் இறக்காமல் இருக்கக் கண்ட இந்திரிகா, அதனை நகல் இறக்குவதன் மூலம் ராஜதந்திரப் பயிற்சியும் பெறலாம்; சாணக்கியரைக் குருவாகவும் ஏற்கலாம் என்று முன் வந்தாள்; கழல் பனிந்தாள்; கருத்தை வெளியிட்டாள்.

காணக்கியருக்கே உரிய திமிர், கர்வம், அகம்பாவம்...

மோகத்திலும் புயல்மோகம் உண்டுபோலும்!

''இந்திரியா! இதனை நீ நகல் இறக்கி எனது சிஷ்யையாக விரும்பியதற்கு என்ன குருதட்சிணை தெரியுமா?''

''சொல்லுங்கள் கௌடலீயமே! நீங்கள் பூஜ்யர்!''

''பூஜ்யத்தைக் கண்டுபிடித்தவனேயானாலும் பூஜ்யமாக எதையும் கேட்டுவிடமாட்டேன். பூரணமாகவே கேட்கிறேன்.''

''என்ன பூரணம் அது?''

''நிர்வாண பூரணம்!''

''புரியவில்லை!''

''நீ இவற்றை நகல் இறக்குகிறபோது, நிர்வாணமாக அமர்ந்து பணிபுரிய வேண்டும்.''

''நீங்கள் எதிரில் இருப்பீர்களா?''

''இருந்தால் என்ன? உனது பெயருக்கேற்ப இந்திரியங்களையடக்க இதுவே சிறந்த மார்க்கம்.''

''இதன் அவசியம்-''

''நீ அர்த்த சாஸ்திரமாவதுமல்லாது, இந்த அர்த்தமுள்ள சாஸ்திரனுக்கும் உரியவளாகிறாய். சந்திரகுப்தன் உன்னைத் தொட நான் விரும்பவில்லை!''

சுயநல வேர் பிடிப்பதில் இப்படி ஒரு நிர்வாண நிபந்தனை, சினந்து எழுந்தது அந்தச் சிருங்கார ரதம்!

''ராஜகுருவே நீங்கள் ராஜ்யத்துக்கு மட்டுமே குருவாக இருங்கள்! எனக்குக் குரு எனது இந்திரியங்கள். அவற்றை நான் அடக்கி, உங்களைப் பழிவாங்க வெகுநேரம் பிடிக்காது. சக்கரவர்த்தி மூலம் இதனைச் சாதித்தால் உங்களுக்கும் எனக்கும் வித்தியாசமில்லாமல் போய்விடும். சந்தர்ப்பம் வருகிறபோது சாதித்தே காட்டுகிறேன்.''

அந்தச் சந்தர்ப்பம்...

இதோ நிகழ்ந்து கொண்டிருக்கிறது. விதியினும் பெருவிநோதம் ஏதும் இல்லை என்று விதித்தவர்தான் சாணக்கியர்!

''புலிக்கு ஒருகாலம் வந்தால், எலிக்கும் ஒரு காலம் வரும் என்கிற சின்ன ராஜதந்திரத்தைச் சிந்திக்க மறந்து விட்டாய் சாணக்கியனே! நிர்வாண குருதட்சிணை! எத்தனை பெரிய ராட்சஸ ஆசை! இப்போது நான் உன்னை ஒரு தட்சனை கேட்பேன் தரச் சம்மதமா?''

''என்ன?''

''எனது சலங்கை கட்டும் கால்களில் சாஷ்டாங்கமாக விழு! உனது பெரும்புகழ் கெமஸ்தனிஸ் வரலாற்று நூலில் சாஷ்டாங்கமாக இடம் பெறும்!''

சாணக்கியர் சண்டமாருதமாய்க் கர்ஜிக்கிறார்: ''இந்திரிகா!''

அவளும் சளைக்காமல் சர்ஜனையாய்ச் சரிக்கிறாள்.

''ஏனிந்த இடியோசைக்குரல், சாணக்கியனே? இவள் இப்போது இந்திரியங்களை வென்று கொண்டிருக்கும் இந்திரிகா; இந்தத் தட்சிணையே இப்படிச் சிலிர்த்தெழச் செய்யுமானால், உனது குருதட்சிணை என்னை எப்படி யெல்லாம் கூனிக்குறுகச் செய்திருக்கும்? காலில் விழுகிறீர்களா? இல்லை கதவைத் திறந்து கொண்டு வெளியேறுகிறீர்களா? எது சௌகரியம்?''

வெருண்டுபோன சாணக்கியர், வெடித்த மலையென வெளியேறினார். அப்போதும் அவள் விடவில்லை. நெருப்பு நாவு மீண்டும் நீண்டது.

''சாணக்கியனே! அர்த்தசாஸ்திரத்தின் தொடக்கத்தில் 'வேதத்ரயீ' என வேதங்கள் மூன்றினை மட்டும் குறிப்பிட்டு

எழுதியிருப்பதாக அறிகிறேன். நான்காம் வேதமான அதர்வம் என்ன பாவம் செய்தது? வேதங்களில் வலிமை மிக்கது அதுவென்றால், அதுவே நான். நினைவிருக்கட்டும்.''

ஆடிப்போனது அர்த்தசாஸ்திரம்.

மகத மன்னின் நிலவை, மௌரியக் காற்று தாலாட்டிக் கொண்டிருந்தது.

''இன்டிகா; இந்த நிலவு...''

''ஐயோ, என் பெயர் இந்திரிகா!''

''இன்டிகா!''

''நாக்கை தர்ப்பையில் வழித்தாலும் திருந்தாது!''

மெகஸ்தனிஸ் சிரித்துக்கொண்டான். பேசியது கிரேக்கமொழி.

''இன்டிகா! இந்த நிலவு எங்கள் கிரேக்கத்திலும் தெரியும்!''

''அங்கேயும் அது தேய்கிறது.''

''எங்கேயும் அது தேயும்!''

''எங்களைப் போல!''

மெகஸ்தனிஸ் மருண்டு நோக்க, இந்திரிகா கலகலவென சிரிக்கிறாள். பெண்ணியத்தை இவள் கண்ணியமாகச் சொல்லிவிட்டாள் என்றெண்ணி வியந்துபோனான் மெகஸ்தனிஸ்.

''இன்டிகா! நீ என்னுடன் கிரேக்கத்துக்கே வருவது நான் செய்த பாக்கியம்''

''அங்கே மன்னன் செல்யூக்கஸ் என்னை நிர்வான நிவேதம் செய்ய ஆசைப்படமாட்டானே?''

''பிறகு செல்யூகஸ் சரிதமே இராது!''

இந்திரிகா இனிதாகச் சிரித்து வைத்தாள்.

''இன்டிகா! நீ என்னுடனேயே இறுதிவரை இருக்கப் போகிறாயா?''

''கிரேக்கர்களுக்கே சந்தேகம் அதிகம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்''

''அதனால்தான் அங்கே அறிஞர்கள் நிறையவே தோன்றுகிறார்கள்.''

இந்திரிகா ஏதும் கூறவில்லை; அவளைப் பொறுத்த வரை அதற்கு அவசியமுமில்லை. அவளது நோக்கம்; இந்த நூலில் சாணக்கியன் இடம்பெறக்கூடாது. இந்த நூலுக்குத் தனது பெயரை இடச் செய்ய வேண்டும். அதே நேரத்தில் தன்னைப் பற்றிய குறிப்புகளும் இதில் இருக்கத் தேவை யில்லை. இருப்பின், இதுவே பல செய்திகளை இழுத்து வரிக்க ஏற்பாடு செய்துவிடும்.

நாளைய காலை மகத மண்ணைவிட்டு பிரியப் போகிறோமே என்கிற மனக்கவலையே அப்போதைக்கு மேலோங்கி நின்றது.

**பு**வனத்தில் ஏகபோக சக்கரவர்த்தியான பிரகாச சூரியன், கி.து.375-லும் அதே பிரகாசத்துடன் உதயமாகிக் கொண்டிருந்தான். ஆனால் அதில் ஒரு சரித்திரம் மேலும் பிரகாசத்தைத் தந்து கொண்டிருந்தது. அது: உலகம் வியக்கப்போகும் கௌடலியம் எனும் அர்த்தசாஸ்திரம். இது இந்திரிகாவுக்குப் புரிய நியாயமில்லை. மெகஸ்தனிஸ் எழுதும் வரலாற்றுக் குறிப்புகளில் சாணக்கியனை மறைத்துவிடலாம்; மகா ராஜதந்திரச்சிரோன்மிணியான சாணக்கியனையே மறைத்துவிட முடியுமா என்ன? அதோ

உதயமாகும் சூரியனைத் தனது சேலைத் தலைப்பால் மறைத்துக்கொள்வதால், அவள் வரை சூரியன் இல்லை; அவ்வளவே!...

மௌரிய குலத்து மகுடாதிபதியும் மகதப்பேரரசின் மகா சக்கரவர்த்தியுமான சந்திரகுப்தன் தேரோட்டியாய் அமர்ந்து ரதத்தைச் செலுத்திவர, உள்ளே கிரேக்க அறிஞன் மெகஸ்தனிஸும் இந்திரிகாவும் அமர்ந்திருந்தனர். தன்னிடமிருந்து விடை பெறும் அறிவுக்கும், கலைக்கும் அவன் தரும் கௌரவம் அது.

கங்கைக் கரையில் பயணத்துக்கான படகுகள் காத்திருந்தன.

ரதத்தை விட்டிறங்கிய இந்திரிகா சுற்றும் முற்றும் கவனிக்கிறாள். வழிகூட்டியனுப்ப ஏராளமானவர் வருகை தந்திருந்தும், சாணக்கியரைக் காணோம்.

நல்லறிவு புரைதீர் நன்மைக்குச் சற்றே தலை வணங்கலாம். நெடுஞ்சாண்கிடையாக விழுந்துவிடாதே! -சந்திரகுப்தன் எண்ணிப் பார்க்கிறான்.

மெகஸ்தனிஸை பார்த்து கிரேக்க மொழியில் இந்திரிகா சொன்னாள்: ''மெகஸ்தனிஸ்! சாணக்கியனைப் பற்றி வருத்தப்பட்டீர்களே! பார்த்தீர்களா; அந்தத் திமிர் பிடித்தவன் உங்களை வழிகூட்டியனுப்ப வரவில்லை...''

''இருந்த வருத்தம் கிழிந்து போனது!''

சந்திரகுப்த மகாசக்கரவர்த்திக்கு ஒன்றும் புரிய வில்லை. பேசுவது சாணக்கியரைப் பற்றியது என்பது மட்டும் தெரிந்தது.

படகுகள் ஆயத்தமாகத் துணைவர்களுடன் காத்து நின்றன.

காலைப்போதின் காற்று, கங்கையைத் தழுவி, இதமான கவிதை சொல்லிக் கொண்டிருந்தது.

மெகஸ்தனிஸ் கரம்கூப்பி விடை கேட்கிறான். இந்திரிகாவின் இமைகளில் நீர்த்திவலைகள்.

''இந்திரிகா! ஒரு சின்ன விஷயத்துக்காக நீ மகதத்தை விட்டுப் பிரிகிறாய்!''

''சின்ன விஷயமல்ல சக்கரவர்த்தி! பெரிய சரித்திரம்! சாணக்கியன் என்னை மட்டும் இழிவுபடுத்தவில்லை. அர்த்தசாஸ்திரத்திலும் பெண்களை இழிவுபடுத்தி இருக்கிறான். எனது இந்தப் பிரிவு, ஒரு பாடம்!''

அவர்கள், பெரிய நாவாயில் ஏறியமர்ந்தனர்.

இந்திரிகா சொன்னாள்; ''பிரியதர்சன! சாணக்கியன் கேட்டால் சொல்லுங்கள்; இந்த நூலுக்கே பெயர் 'இந்திரிகா' என்று!''

பிறகு மெகஸ்தனிஸை நோக்கிக் கேட்டாள்; ''மெகஸ்தனிஸ்! இந்த நூலுக்கு என்ன பெயர்?''

அவன் புன்முறுவலுடன் சொன்னான்; ''இன்டிகா!''

கங்கையலைகள், கிரேக்கமொழி மாற்றம் கேட்டுக் கொல்லென்று சிரிக்க, படகுகள் நகர்ந்தன.

(மெகஸ்தனிஸ் எழுதிய நூல் 'இன்டிகா! சந்திரகுப்த சாம்ராஜ்யத்தைப் பேசும் மெகஸ்தனிஸ், ஏன் சாணக்கியரை மறந்தார் என்கிற கேள்விக்குறியே, கற்பனை வடிவம் தந்திருக்கிறது. சாணக்கியர், சந்திரகுப்தர் காலத்துக்குப் பின்னரும் வாழ்ந்தவர் என்பது வரலாறு)

- 1994

# கறுப்புத் தாமரை

ஒவ்வொரு பிறையைப் பார்க்கும் தோறும் பெற்ற வயிற்றைத் தொட்டுக் கண்ணீரில் சோகமாய் கலங்கி நிற்பாள் உஞ்சியார் கற்பூரப் பிள்ளை. தேவரடியாள்களுக்கு இப்படி ஒரு பிள்ளைப் பட்டம் உண்டு.

திருப்புலிவனத்து இறைவனை நோக்கிக் குமுறுவாள். இப்படி ஒரு கன்னங்கரேலென்ற கறுப்பு மகளைப் பெறவா நூறு பிறைகள் உண்ணா நோன்பு நோற்றேன்?

இறைவி! அமிர்தணாம்பாளே! நீ திருவீதி உலா வருகிறபோது எனது மரபுப்படி எத்தனை சந்துமுனைகளில் எவ்விதமாகவெல்லாம் நாட்டியம் ஆடியிருப்பேன்!

அவள் கதை முடிந்து அந்தக் கோயிலில் அவளுடைய மகள் சீரடியாள் கதை தொடங்கவேண்டும். குலமுறைப்படி இறைவனுக்கு அவள் பொட்டுக் கட்டிக் கொள்ள வேண்டும். தாய்விட்ட தொழிலை இறைவனும் இறைவியும் பிரபையிட்டுத் திருவீதி உலாவருகிறபோது சந்துக்குச் சந்து நின்று சதிராடவேண்டும்.

'ச்சீபோ!' என்று மறுத்து விட்டாள் சீரடியாள். இந்தக் கரியவளுக்குப் பொட்டுக்கட்டி நாட்டியம்தான் கேட்கிறதா? பிறகு வருவோர் போவோர் பொன்னையும் மணியையுமா வாரி வழங்கப் போகிறார்கள்? இவள் கறுப்புக்குக் காற்பொன் காசு போதாதா என்று கேட்டானே இவ்வூர் நாட்டாண்மை! கால்காசு பொன்னுக்கு ஓரிரவு கட்டிலா? தூ!...'

சீரடியாள் மறுப்புக்குத் திருப்புலிவன ஊரே எதிர்த்தது. அவள் நேரே தூங்கானை மாடக்கோயிலான அதன் கருவறைக்கே சென்று நின்றாள்; 'ஏ, திருபுலிவன நாதா! என் அன்னை செய்த நூறு பிறைதவத்திற்கு இப்படியா ஓர் அமாவாசை இருட்டுமகள்? உனக்கே நான் பொட்டுக் கட்ட வேண்டும்; பொழுதுக்கும் நிவேத்தியத்தின்போது நாட்டிய மாடவேண்டும்! பிழைப்பு எப்படி? கால்வயிறும் அரைவயிறுமா?

நீ என்னைப் பழிவாங்கிவிட்டாய்! ஆனால் நான் உன்னைப் பழிவாங்கிவிடவில்லை. மாறாக உன் கோயிலைச் சொர்க்க புரியாக்கப் போகிறேன். பாழடைந்து ஒருவேளை கற்பூரத்துக்குப் பஞ்சமாகி இருக்கிறாயே.. என் தாய் கற்பூரத்தின் மீது ஆணை! காஞ்சிக்கு செல்கிறேன். திரும்பினால் உன் திருத்தலத்தைச் செப்பனிடுவேன்; இல்லை, இந்த உருத்தலத்தைப் பிணமாக்கி உன் எதிரிலேயே புதைக்கச் சொல்வேன்!'

வஞ்சின வல்லியாகக் காஞ்சி நோக்கிப் பயணமானாள் சீரடியாள்.

கி.பி.பதின்மூன்றாம் நூற்றாண்டின் இடைப்பகுதி. கொடிகட்டிப் பறந்த சோழநாடும், காஞ்சியும், மாவீரச் சுந்தரபாண்டிய மாமன்னரால், இடிபட்டு, திருப்புலிவனத்துக்குக் கோயிலைப் போல் இன்னலுற்றுப் பாழடைந்து போயின. ஏதோ பெயருக்குச் சோழநாட்டை யாண்டு வந்தான் மூன்றாம் ராஜேந்திர சோழன். காஞ்சியை ஆண்டவர்கள் கால்தெறிக்க ஓடிப்போயினர். ஹொய்சலரும் காகதீயரும் குடியேறியதால் காஞ்சிமா நகரமே களையிழந்து போனது. தொலைவில் சேந்தமங்கலத்தை மட்டும்

பெயருக்கு ஆண்டுவந்தான் கோப்பெருஞ்சிங்கன். இந்தக் கால கட்டத்தில்தான் விலைமகளான சீரடியாள், அண்மையிலிருக்கும் காஞ்சியில் குடியேறி, வாஞ்சைமிகு இளமைக்கு வசீகரம் தேட முனைந்தாள்.

அன்னை ஈட்டிய பொருள் கொண்டு ஊர்கோடியில் அழகிய மாளிகையொன்றை வாங்கினாள். அன்றாடம் அந்த மாளிகையில் அகில்மணம் மட்டுமே கமழ்ந்தது. அது ஏகாம்பரீச்சுரர் கோயில்வரையிலும் எட்டி மணத்தது. காஞ்சியில் எழுந்தது கனத்த கேள்விக்குறி. யார் இந்த சீரடியாள்?

திருப்புலிவனத்துத் தேவரடியாள் இந்த சீரடியாள் என்கிற செய்தி, காஞ்சியை வளைத்து, அதற்கு அப்பாலும் பரவியது.

குட்டிக் கவிராஜர்களை மாளிகையில் அனுமதித்து, கொட்டிய பொற்காசுகளின் மூலம் குட்டியே கவிபுனைய ஆணையிட்டாள். சொல்ல வேண்டுமா?

ககனத்திலிருந்து பூமியைப் பார்க்கும் கறுப்புத் தாமரை என்று பாடினான் ஒருவன். பூமியிலிருந்து வானை நோக்கும் செந்தாமரையின் முகங்கள், பொறாமையில் மேலும் சிவந்து கறுத்துப் போயின என்றான் மற்றொருவன்.

பிரமனானவன், 'இரும்பில் சிலைவடித்து, இறுமாப்பை இளமையாக்கிக் கரும்பில் சாறெடுத்த கவிதைகளை மாப்பில் வைத்து, அரும்பு வெடித்த கறுப்புமுல்லை, அமரர்க்கோன் மயங்குமுல்லை, துரும்பர்கள் நாடவொண்ணா துறக்கத்து வாசல் இது!' என்று

*அப்போதைய காஞ்சி அகத்தியன் குள்ளமாய் இப்படிப் பாடிவைத்து விட்ட பிறகு...*

அகில் மணக்கும் வாயிலில் அடியெடுத்து வைக்க வேண்டிய அருகதைகளை ஆராய்ந்தனர் மூக்கில் வியர்க்கும் கழுகுச் செல்வந்தர்கள்.

பேரம் நடக்கிறது.

*சீரடியாளின் சீரான கட்டளைகள்...*

திங்கள்தோறும் மூன்றாம்பிறை இரவுமட்டுமே என்னை ஒருவன் பிறந்தமேனியில் அனுபவிக்க முடியும். ஏனைய இரவுகள் எவருக்கும் சொந்தமில்லை. அவை திருபுலிவனநாதருக்கே சொந்தம்.

இந்த அற்புதசுகம் வாழ்நாள் முழுவதுமல்ல; நூறு பிறைகளுகுகு மட்டுமே! நூற்றியோராவது பிறையிரவில் இந்த சீரடியாள் தேவரடியாளல்லள்; துறவுக்குப் பேரடியாள்.

## நிபந்தனைகள்;

எக்காரணத்தை முன்னிட்டும் விலையேற்றம் இறக்கம் இல்லை. கூட்டத்தில் இருப்பது திருப்புலிவனநாதர் உண்டி. அதில் அறச் சிந்தனையுடன் நூறு பொற்காசுகளைப் போட வேண்டும். எனது சொர்க்க விலாச அறையினுள் நுழைகிற போது நூறுபொற்காசுகள்! அகூயை பிடித்த நோயாளிகளுக்கு அனுமதியில்லை. முன்னுரிமை பெறுபவர்களுக்கே முதுலுரிமை. ஒருவரே எத்தனை பிறைகளை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம் அட்டியில்லை.

விசித்திரமான நிபந்தனைகளைக் கண்டு வியந்தன தொண்டை, சோழ, பாண்டிய மண்டலங்கள். செல்வ

முதலைகள் நான் முந்திய யார் முந்தி என இளமைத் தடாகத்தில் நீந்த போட்டியிட்டன. சொல்லப்போனால் ஒரே மாதத்தில் ஐம்பது பிறைகளுக்கு மேல் பலர் உரிமை பெற்று விட்டார்கள். இதில் வயதென்ன, வாலிபமென்ன? மீசையுள்ளவன் முறுக்கிக் கொள்ளட்டும்; தாடியுள்ளவன் தடவிகொள்ளட்டும்.

அடுத்து வந்த ஒவ்வொரு பிறையிலும் அகில் மணத்தது, அழகு மணத்தது; துகில் மணத்தது; துடிப்புகள் மணத்தன.

அன்று நூறாவது பிறை.

வரவிருப்பவர் சிவநேயன். பட்டியலின் கடைசிப் பெயர் அதுவாகத்தானிருந்தது.

விளக்குகள் கண்விழித்ததும் பல்லக்கில் வந்திறங்கியவர் ஒரு சிவனடியார்.

சீரடியாள் மருண்டு மலைத்துப் போனாள். பொதுவில் சிவனடியார் கோலத்தில் வந்தால், தேவரடியாள் இன்பத்தை இலவசமாக வழங்கவேண்டும். இப்படி ஓர் எழுதாத சட்டம் இதயமுள்ள இன்பங்களிடம் இருந்து வந்தது.

இதயத்தைத் தூக்கியெறிந்தாள் சீரடியாள். கறுப்பை விமர்சித்த கால் பொற்காசு சமுதாயம் இது! எனினும் இன்முகம் காட்டி ''வாருங்கள்!! என்று வரவேற்று கூறினாள்.

''சிவோகம்!''

''மன்னிக்கவும், இது பிறைபோகம்!''

''இதன் அர்த்தம்?''

''சிவன் உண்டிக்கு நூறு பொன்; இந்தச் சீரடியாள் உண்டிக்கு நூறு பொன்! இலவச உதயம் இங்குதான்''

''நான் மறுத்தால்''

''அடுத்தவர ஆயிரம் முகவரிகள்''

''நான் சிவன்''

''நெற்றிக் கண்ணைக் காட்டினால் அதற்கும் நூறு பொற்காசு! ஏனெனில் இன்று எனது விரதம் பூர்த்தியாகிற நாள்''

''இது விரதமா?''

''விரதமெனில் என்ன? இதுவும் ஒருவித புனித விரதமே!''

மலைத்துபோன சிவனடியார், மறுகணமே தனது காஷாயக் கோலத்தைக் கலைந்து, ''புதிய விரதம்! போற்றுகிறேன் சீரடியாள். நான் கோப்பெருஞ்சிங்கண்! என்றான்.

''கேந்தமங்கலத்துச் சிங்கமா?''

''கறுப்புத் தங்கமே! உனது விரதத்தைப் பூர்த்தி செய்யவே நான் வந்தேன்!''

சீரடியாள் அதுவரை கலகலத்துச் சிரித்தறியாள். நூறாவது பிறை என்பதாலோ என்னவோ முழுநிலவாய் கலகலத்தாள்.

''ஏணிந்த சிரிப்பு''

''நீங்கள் அரசர். எண்ணியிருப்பின் திருப்புலிவனக் கோயிலைப் புதுப்பித்து, தேர்வடித்து, திருவிழா

நடத்தலாமே! இந்தத் திருவிழாக்காக இளமைப் பிச்சை யெடுக்கும் எனது உண்டியை நிரப்ப வந்திருக்கத்தேவையே இல்லையே!''

சீரடியாள் எந்த அளவுக்குச் சிரித்தாளோ, அந்த அளவுக்குக் கோப்பெருங்கன் கண்களில் நீர் கலகலத்தது; பெண்ணே! நான் அரசனேயொழிய ஏழையிலும் படு ஏழை! ஏதோ பெயர் சொல்லிக் கொண்டிருக்கிறது சேந்தமங்கலம். சுந்தரபாண்டியன் என்கிற சூறாவளி என்னை எப்போது சூன்யமாக்கப் போகிறதோ என்கிற எதிர்பார்ப்பு ஆனானப்பட்ட சோழப் பேரரசே வீழ்ச்சிக்கண்டு விட்டது.

சோழன் ராஜேந்திரன் கப்பகத்தின் மூலம் சொப்பனம் கண்டு வருகிறான். ''உனது இந்த எவரும் காணாத விரதத்தை, உன்மத்தன் ஒருவன் பூர்த்தி செய்வதைவிட நான் பூர்த்தி செய்யலாமே என்றுதான் சிவனடியார் கோலத்தில் பிராயச்சித்தமாக வந்தேன்.''

கோப்பெருஞ்சிங்கன், பொற்காசுகளைப் போட்டான்; இளமை உண்டியையும் நிரப்பி விரதத்தை நிறைவு செய்தான்.

மறுநாள் பொழுது மன்மதனை விழுங்கிய பொன்மதமாய் புலர்ந்தது.

திருப்புலிவனக் கோயில் திருத்தமுறச் சீரமைந்தது கண்டு பொங்கிப் பூரித்துப் போனாள் சீரடியாள். ஊர் மக்கள் அவளை தேவதையாக எண்ணி மனத்தில் பூஜித்தனர். இதுதான் ஊர்; இவர்கள்தாம் மக்களோ?

கோயில் சீரமைந்து, பொன்னாலும் வெள்ளியாலும் பூசனைக்குரியவற்றைச் செய்து வைக்கவே, உண்டிப்பண முழுவதும் செலவாகிப்பேயின. ஊர்மக்களோ,

தேரில்லையே என்று குறைபட்டுக் கொள்கிறார்களே! என்ன செய்வது?

தனக்கெனச் சேர்த்த சொத்துக்களைத் தாரைவார்ப்ப தன்றி வேறு வழியில்லை. எடுத்து வஞ்சினம் எழுச்சியுற இருக்கட்டுமே!

தேரும் சமைந்தது. திருவிழாவும் எழுந்தது. திருப்புலிவனமே கோலாகலமாக விளங்கியது.

எங்கு நோக்கினும் வாழை, கழுகு, தோரணங்கள்தாம். திருப்பலிவனநாதரும், அமிர்தணாம்பாளும் நேரில் அமர்த்து பவனிவர இருக்கிறார்கள்.

அந்த நேரத்தில்தான் இந்த அதிசயத்தைத் திருப்புலிவன நாதன் திருவிளையாடலாக நிகழ்த்தினான்.

இப்படி ஓர் அரிய செய்தியைக் கேள்விப்பட்ட சோழமன்னன் மூன்றாம் ராஜேந்திரன், பரிவாரங்களுடன் வருகிறான். ரதம் வேகவேகமாக வந்து கொண்டிருக்கிறது. அரசத் தேரை எதிர்பார்த்து ஆண்டவன் தேர் நின்று கொண்டிருந்தது.

அதோ! சோழத்தேர் புலிக்கொடியுடன் புலிவனத்துள் புகுகிறது. வெகு தூரமாய் விலகிப்போய் நின்று நடுங்கிப் போனாள் சீரடியாள்.

எங்கும் சோழமன்னனை வாழ்த்திய பெருங்குரல்கள். சோழமன்னன் விழாவைக் கண்டு மகிழவந்தானா? மறுக்க வந்தானா? உடம்பை விற்று இப்படி ஓர் உற்சவமா என்றால்?

சீரடியாளனின் கேள்விக்குறி இதுதான்.

வெள்ளோட்டத்துக்கு ஆயத்தமாக இருந்த தேரில் அமர்ந்திருந்த அண்மையப்பனைத்தரிசித்து வணங்குகிறான் ராஜேந்திர சோழன்.

''அரசபெருமானே வந்து விட்டார். முதல் ஆரத்தி செய்யலாமே?'' என்றார் தேரின் மீது இருந்த குருக்கள். ஆனால் ராஜேந்திரச் சோழன்?

''எங்கே அந்தப் பிறைநூறு கண்ட சிரடியாள்? என்று கர்ஜிக்கிறான்.

தொலைவில் நடுங்கி வெடவெடத்து நிற்கும் சீரடியாளைக் காட்டுகிறார் குருக்கள். ஓ.. அந்தக் கறுப்பழகியா? உற்று நோக்கிய ராஜேந்திர சோழன், ''அடீ, கரிய நம்பிராட்டி! ஏன் நடுங்குகிறாய்? என் முன்னே வரலாமே!''

புலிக்கொடி நாவே ''நம்பிராட்டி' என்று அழைத்துவிட்ட பிறகு, சீரடியாள் சீராக அடியெடுத்து வைத்து அருகே வந்து நின்றாள்.

'நீலமணிச்சிலையே! செல்வ முதலைகள் செய்ய வேண்டிய செயலை உனது புதுவிதமான அறச்சிந்தை செய்து முடித்திருக்கிறது! பிறை நூறு என்பதே அந்தப் பிறைசூடியன் மீது யோட்ட பழியா? இப்போது உன்கையில் மிச்சமென்ன இருக்கிறது?''

''சோழபெருமானே! இப்போது நான் பிச்சைக்காரி! இன்பத்தையே துறத்திவிட்ட இரவலள்! வீட்டுக்கு ஒரு பிடிசோறு பிச்சையளித்தால்தான் இந்த உண்டி(வயிறு) நிறையும்.!''

நின்ற தேரினும் நெருந்தேராய்ச்ச சமைந்துபோனான் நெருமுடிதரித்த சோழமன்னன். கண்களில் திவலைகள் இரண்டு திரைச் செய்தன.

''பிறை நூறு சீரடியாளே! இன்றே ஆணைப் பிறப்பிக்கிறேன்! இவ்வூர் நீர் நிறைந்த நிலங்களெல்லாம்

உனக்கே சொந்தம்! புலிவணத்துத் தேர்வலம் புறப்படட்டும்! முதல் ஆரத்தி மரியாதை உனக்கே வழங்கட்டும்! அது மட்டுமல்ல; ஏறடிப் பெண்ணே, அந்தத்தேர் சப்பரத்தில்! ஏறியமர்ந்து கொண்டு வீதிவலம் வருவாயாக! இன்று மட்டுமல்ல; நீ இருக்கும் வரை, ஒவ்வோர் உர்சவத்திலும் உனக்கு இந்த மரியாதை நடக்க வேண்டும்.''

அவள் தயங்கினாள்

''தயக்கமேன் பிறைமகளே! இவனைத் தேரில் அமர்த்துங்கள்''

பிறைநூறு கண்ட சீரடியாள், பெருமையோடு தேரில் அமருகிறாள். மரியாதை நடக்கிறது. அலங்காரத் தேர் அசைந்து நகரத் தொடங்கியது.

சீரடியாளின் சிறப்பு சரித்திரத்தில் கனத்து நின்றது.

(உஞ்சியார் கற்பூரப் பிள்ளையின் மகள் கரியநம்பிராட்டி எனும் பிறை நூறு சீரடியாள். தேவரடியாள். திருப்புலிவனக்கோயிலைச் சீரமைத்தாள். தேர்சமைத்தாள். சப்பரத்தில் அமரும் மரியாதை கிடைத்தது. நீர் நிலங்களைத் தானமாகப் பெற்றாள். இதுதான் கல்வெட்டு சொல்லும் செய்தி. அது என்ன பிறைநூறு? இதுதான் எனது கற்பனை சொன்ன கதை).

-1994

# சுதந்திரக் கோட்டை

ஆங்கிலக் கும்பினி தளபதி மேஜர் பானர்மேன் பேயிரைச்சலாகக் கத்துகிறான்.

''கோட்டையை இடித்து துகளாக்குங்கள்! தரைமட்ட மாக்குங்கள்! இனி எதிர் காலத்தில் இந்தக் கோட்டையை எவனாவது பார்த்து, இது சுதந்திரக்காகப் போராடியவன் கோட்டை என்று சுட்டிக் காட்டக் கூடாது; பேசவும் கூடாது. இடியுங்கள்: துகளாக்குகங்கள்!''

''ஒண்ட வரும் பிடாரிகளுக்கு இடம் கொடுத்ததன் பயன் ஊர் பிடாரியை விரட்டுகிறது'' என்று மெல்லக் கூறிக் கொண்டான் தொலைவில் வேடிக்கை பார்த்த மக்களுள் ஒருவன்.

''தமிழன் அன்றைக்கும் எல்லாருக்கும் இடம் கொடுத்தான்; அழிந்தான்: இன்றைக்கு கொடுத்தான்: அழிகிறான்: என்றைக்கும் இடம் கொடுத்து இந்தியாவில் அழியப் போகிற முதல் இனம் தமிழ் இனம் தான்!'' என்று பதிலளித்தான் மாறு வேடத்தில் ஒளிந்து கவனித்த ஊமைத்துறை என்கிற துரைச்சிங்கம். அவனது வயிறு பற்றி எரிந்துகொண்டிருந்தது. அவன் வாழ்ந்த கோட்டையல்லவா? அவனது உடன் பிறந்த சகோதரனல்லவா வீரபாண்டிய கட்டபொம்மன்!'

ஊமைத்துறை இவ்விதம் சொன்னதும், பக்கத்தி லிருந்து அவனது இதயத்தோடு இதயமாகக் கலந்து விட்ட

அன்புக்காதலி கறுத்தாயி சந்நதம் வந்தவளே போன்று சந்தர்ப்பம் அறியாமல் கூச்சலிட்டு விட்டாள்!

''ஏ, மேஜர் பானர்மேன்! உன்னைக் கொன்று, உன் குடலைப் பிடுங்கித் துண்டு துண்டாக நறுக்கிக் கழுகுகளுக்கு இரையாக்குகிறேன் பார்!''

கறுத்தாயி போட்ட கூச்சல், கோட்டையை இடித்துக் கொண்டிருந்த பானர்மேன் செவிகளை அறுத்தது.

''என்னமேன், ஒரு பெண் கூச்சல் போடுகிறாள்? என்ன சொல்கிறாள்?''

ஓர் ஆங்கிலம் தெரிந்த கைக்கூலித் தமிழன் மொழி பெயர்த்து விட்டான். அவ்வளவு தான்.

''ஷூட் தெம் ஆல்!'' எல்லாரையும் சுட்டு வீழ்த்துங்கள் என்று வெறியனாக ஆணை பிறப்பிக்கிறான் மேஜர் பானர்மேன்.

குண்டுகள் சரமாரியாகப் பறக்கின்றன. கூட்டம் அல்லோலக் கல்லோலப்பட்டுச் சிதறியோடுகின்றன. ஏன் தான் உணர்ச்சி வயப்பட்டு விட்டாளோ கறுத்தாயி என்று பொறுமியவனாய் அவளை இழுத்துக் கொண்டு ஓடித் தலைமறைகிறான் ஊமைத்துரை, உடன் உதவி புரிகிறான் இளையவன் சிவத்தையா.

அரை நாள் பொழுதுக்குள் கட்டபொம்மன் கட்டியாண்ட கோட்டை கழுதைகள் மேயும் இடமாகிப் போயிற்று.

மாலை நோக்கிச் செல்லும் சூரியக் கரங்கள், அதுவரை தழுவி ஆனந்தித்த கோட்டை, எங்கே எங்கே என்று துழாவுகின்றன.

கோட்டைக்குரிய சூரியனே மறைந்துவிட்ட பிறகு, சூரிக்கரங்களுக்குத்தானா கோட்டை தேவை?

**சு**தந்திர வீரப் பெருமைபெற்ற அந்தக் கோட்டை, இருந்த இடமே சூன்யப் பிரதேசமாகி விட்டதில் கவலைப் படாதார் யார்? மறவர்ச் சீமையில் வாழ்ந்த மருதுச் சகோதரர்கள் கூட மனக்கலகம் கண்டனர். இன்று கட்டபொம்மன்: நாளை இந்த மருது பாண்டியர்களுக்கும் இந்நிலை ஏற்படாது என்பது என்ன நிச்சயம்?

இந்தியாவின் முதல் சுதந்திர வீராங்கனையாக ராணி வேலு நாச்சியார் ஏற்றிய தீபம், தமிழகத்திலிருந்து தான் இமயம் நோக்கிச் சென்றது என்றால் வரலாறு ஒப்புக் கொள்கிறது. வாழ்கிறவர்கள் மறுக்கிறார்களே! பின்னால் நடந்த வேலூர்ப் புரட்சியையே 'ஒத்திகை' என்று சொன்னவர்கள் தாமே?

வீரபாண்டிய கட்டபொம்மன் வீழ்பட்டுப் போனதற்கு பிறகு, பாஞ்சாலங்குறிச்சியே பாழ்பட்டுப் போனது. அந்தப் பகுதியையே இரண்டாகப் பிரித்து இருவேறு பாளையக்காரர்களிடம் ஒப்படைக்க முனைந்தான் தளபதி பானர்மேன். அது மட்டுமல்ல; பாஞ்சாலங் குறிச்சி என்ற பெயர் கூட எவரும் உச்சரிக்கக் கூடாது: எந்த ஏட்டிலும் இடம் பெறவும் கூடாது என்பது நெருப்பனைய ஆணை!

இக்கட்டத்தில் தான் மக்கள் நெருப்பானார்கள். அக்கினித் தியாகத்தில் இறங்குவது என்று சுநத்திர வெறி கொண்டனர். அதன் விளைவாகத் தீவிரமாக முனைந்து எந்தச் சுதந்திரக் கோட்டை வீழ்ந்துபட்டதோ அதே கோட்டையை மீண்டும் கட்டி மேஜர்பானர்மேன் முகத்தில் கரிபூசுவது

என்கிற திடமான வைராக்கியம் கொண்டனர். தங்கள் வைராக்கியத்தை, கயத்தாற்றில் தூக்கில் தொங்கிச் சுதந்திரத் தியாகம் செய்த வீரபாண்டிய கட்டபொம்மனின் வீரத்தம்பியாம் ஊமைத்துரையிடமும் எடுத்துரைத்து ஒப்புதலையும் பெற்றுக் கொண்டனர்.

பொழுது விடிந்தால் கோட்டை எழுச்சி, அன்றிரவே ரகசியமாக எல்லா ஏற்பாடுகளையும் கவனிக்க பாஞ்சை மக்கள் சுறுசுறுவென்றியங்கினர்.

அடர்ந்த தோப்பில் ஒதுக்குப்புறமாக மக்கள் சந்தடி நிலவாத இடத்திலிருந்து அந்தப் பொத்தல் குடிசை, அதுதான் ஊமைத்துரையின் இருப்பிடம். ஒன்று சுதந்திர வேள்வி நடத்தி வெள்ளையனை வெளியேற்ற முயல்வது: இல்லை அந்தத் தீயில் கருகி மாள்வது என்கிற முடிவுடன் கட்டபொம்மனின் தம்பி ஊமைத்துரை ஒளிந்து கொண்டிருந்தார். அவருடன் அவருக்குப் பாதுகாப்பாக கறுத்தாயி. கட்டிய மனைவியாவது? பெற்ற பிள்ளைகளாவது? பானர்மேன் வெடித்த குண்டுகளுக்குப் பலியானோர் பலர். சிதறுண்டு ஓடி எங்கு ஒளிந்தனரோ? எங்கு ஒழிந்தனரோ?

''ராஜா! நாம இந்தப் போராட்டத்திலே தப்பிப் பிழைக்கணும்'' -என்றாள், ஊமைத்துரையின் வீரமார்பில் சாய்ந்த வண்ணம் கறுத்தாயி.

''ஏன் கறுத்தாயி இந்தச் சந்தேகம்?''

''இந்தக் கோட்டையைப் புதுசா எழுப்பணும் என்கிற ஆவேசம் எனக்கும் இருக்கு! ஆனா, வீராப்பான ஆவேசம். அதைவிட....''

''அதைவிட...''

''பேசாம மறவர் சீமைக்குப் போய் மருதுராஜாக் களுடைய கரங்களை வலுப்படுத்தலாம்! இங்கே நாம் செய்வது நம் உணர்ச்சியைக் காட்றது! நம்ம வாழ்க்கையை உயர்த்தறது இல்லே!''

இரண்டாண்டுகளுக்கு முன்பு தான் கறுத்தாயிக்கும் ஊமைத்துரைக்கும் இதய சங்கநாதம் காதலாய் எழுந்து, சங்கமமாய் முடிந்து இருந்தது.

எதுக்காக இப்படிக் கோழைத்தனமான அச்சப்படறே கறுத்தாயி!''

''நம்ம சுற்றி இருக்கிற சாதி சனங்க காட்டிக் கொடுக்கிற துரோகப் பாளைக்காரனா இருக்கானுங்க. இல்லைனா, கட்டபொம்ம மகாராஜா கயத்தாத்துலே தூக்கில் தொங்கி இருப்பாரா? தூக்குலே தொங்கப் போட்ட புளிய மரக் கூடக் கொஞ்சம் கொஞ்சமா காய்ந்து வருது பாருங்க! மாவீரனை இந்தக் கிளையில்தானே தொங்கப் போட்டாங்க என்கிற கவலை இந்தப் புளியமரத்துக்கு இருக்கிறது. துரோகிகளான பாளையக்காரர்களுக்கு இல்லையே!''

கறுத்தாயி சற்று அதிகமாகவே ஆவேசப்பட்டாள். அவளது நியாயமான உணர்வுகள் ஊமைத்து துரைக்குப் புரியத்தான் செய்தன.

''ராஜா! எனக்கோர் ஆசை! எனக்கென்னமோ என் உயிர் மேலே நம்பிக்கையில்லை. உங்க உயிர் மேலே உங்களுக்கு நம்பிக்கை இருக்கலாம். நீங்க மாவீரர் கட்டபொம்ம மகாராஜாவின் தம்பி, இனிமே இப்படியொரு தனிமை, இப்படி ஓர் இரவு, இப்படி ஓர் இனிமை ஏற்படுமா

என்பது சந்தேகம். இந்தக் கறுத்தாயி ஆசை தீர உங்களோடு இந்த இரவைக் கழிக்கணும்னு ஆசைப்படறா!''

அவளை அன்புடன் அணைத்தார் ஊமைத்துரை. கட்டுக்கோப்பான வாலிப வனப்பு இளமை பாகங்களின் வசீகரம். அவளும் கம்பளத்தார் இனத்தைச் சார்ந்த உத்தமசீலி. அவளது இந்த எதிர்பார்ப்பும் நியாயமானதாகவே பட்டது ஊமைத்துரைக்கு. ஆயினும் அவளை அணைத்து அவளது உதடுகளை நீவி, நெற்றியில் முத்தமிட்டவாறு சொன்னார்:

''கறுத்தாயி! இதற்காகவே நான் ஒரு சவாலாகச் சொல்லுகிறேன். நாளைய புதிய சுதந்திரக் கோட்டை எழ இருக்கிறது. நான்தான் ஆட்சிப் பீடத்தில் அமரப் போகிற தலைவன். வெள்ளைப் பறங்கியனை வேரோடு பிடுங்கி எறிந்து விட்டு உனது கொள்ளை இன்பத்துக்கு கொடிகட்டிக் கோட்டை கட்டுகிறேன். அற்ப இன்பம் இப்போது தேவையில்லை.''

ஏதோ மனத்தில் பட்டது. கறுத்தாயி சொன்னாள். ஆயினும் காதலருடைய கனிந்த சுதந்திர கோட்டைக்குக் குறுக்கே அவள் நிற்கவில்லை. தன்னைச் சாந்தப்படுத்திக் கொண்டு இரவைக் கனவில் கழித்தாள்.

ஆதித்த இருதயம் ஆகாயத்தில் அகத்திய மந்திரம் ஓதிக் கொண்டு உதயம் கண்டது.

பாளையங்கோட்டைப் புரட்சியின் காரணமாகச் சிறையிலிருந்து ஊமைத்துரையும் சிவத்தையாவும் விடுபட்டு வெளியேறியது முதல் வெள்ளைப் பறங்கியர்கள் விழிகளில் விளக்கேற்றித் திரியலாயினர். எந்த நிமிடத்திலும் ஏதும் நிகழலாம் என்பது அவர்களுடைய கணிப்பு. அப்போதே

இந்த ஊமைத்துரையையும் சேர்த்துத் தூக்கில் தொங்க விடாமல் விட்டு விட்டாமே என்று வருந்தினர். இம்முறை மட்டும் அகப்படுவானோயானல்....

பாஞ்சாலங் குறிச்சியில் 'கோட்டை' என்ற சொல்லை எவர் நாவும் உச்சரித்தாலும் சுட்டுக் கொல்லும்படியான கடுமையான உத்தரவு. இந்த நிலையில் தான் மக்கள் சுதந்திர தாகத்துடன் சுதந்திரம் என்ற பெயரில் ஒரு கோட்டையை எழுப்புவது என்ற சவாலை மேற்கொண்டு செயல்பட்டனர்.

எந்தக் கோட்டை தரைமட்டமானதோ, அதே கோட்டையை முன்னைவிட அழகாகவும் உறுதியாகவும் எழுப்பத் தொடங்கினர். இதற்காகப் பதினைந்து நாட்களுக்கு முன்பே மன்னை நீரில் புளிக்க வைத்துப் பனைவெல்லங் களையும் முட்டைகளையும் கொட்டி, வைக்கோல் துகள்களைக் கலந்து தயாராக்கி வைத்திருந்தனர். பக்கவாட்டிலிருந்த ஊர்கள் முழுவதும் ஏதோ பதறி எரிவது போன்ற புகை மண்டலம் இரவும் பகலுமாக! வேறொன்று மில்லை. செங்கற் சூளைகள்.

கோட்டையைச் சுறுசுறுப்பாக எழுப்பினர்.

பாஞ்சை மண்ணில் குழந்தை குட்டிகள் கூட இந்த உரிமை வேட்கைப் பணியில் ஈடபட்டது தான் வியப்பிலும் வியப்பு. அவ்வளவுக்கு வீரபாண்டிய கட்டபொம்மன் மக்கள்பால் மதிப்பு கொண்டு மரியாதை மிக்க ஆட்சியை நடத்தி வந்தார்.

ஓ... எங்கள் வீரச்சிங்கமே என்று கண்ணீர் மல்கிய வண்ணம் கடமைகளில் மூழ்கினர்.

இரண்டே வார உழைப்பில், விண்ணுலக தேவதச்சனாம் விஸ்வகர்மா உருவாக்கினானோ என்று

* அன்றைய சிமிண்ட் இதுதான்.

வியக்குமளவுக்கு உருவாக்கி விட்டார்கள். தேவதச்சன் ஓரிரவில் உருவாக்குவான்: இந்த மானுட கர்மாக்கள் இரு வாரத்தில் உருவாக்கி இருக்கிறார்கள். முன்னது வரம்; பின்னது கரம்!

எந்தப் பாஞ்சாலங்குறிச்சியில் கோட்டை என்ற ஒன்றைக் கனவு காணக்கூடாது; பாஞ்சாலங்குறிச்சி அந்தப் பெயரைச் சொல்லக் கூடாது என்று வெள்ளையர் தளபதி உத்தரவு பணித்தானோ அந்த ஆணை, மனித பலத்தின் காலடியில், பூனையாய் நசுங்கிக் கத்தியது. 'சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை' என்கிற தாரக மந்திரத்தையே அப்போதுதான் தமிழ் மக்கள் முதன், முதன்முறையாக உணர்ந்தனர் என்றால் உண்மை. உண்மை, உண்மை! இந்த எதிரொலிதான் இமயத்தில் எதிரொலித்தது என்றால் மிகையல்ல, மீண்டும் மீண்டும் சொல்லலாம் மிகையல்ல!

**ஆ!** ஊமைத்துரை ஆட்சி. சுதந்திரக்கோட்டை. பாஞ்சாலங்குறிச்சி மீண்டும் பழம்பெருமை கொண்டு விட்டது.

சென்னை கவர்னர் காதுகளில் இச்செய்தி உலைக்களத்தில் காய்ச்சிய ஈட்டியாய் பாய்ந்தது.

அதன் எதிருணர்வு...

''கோட்டையை மீண்டும் தரைமட்டமாக்குங்கள். பாஞ்சாலங்குறிச்சியில் ஒரு புழு புச்சி உயிருடன் இருக்கக் கூடாது. ஊமைத்துரையை எங்கு கண்டாலும் சுட்டு வீழ்த்துங்கள்...''

சென்னைக் கோட்டையில் பறந்த யூனியன் ஜாக் கொடியிலிருந்து புறப்பட்ட பயங்கர ஆணை,

பாஞ்சாலங்குறிச்சியின் புளிய மரத்தில் மோதி, புதிய கோட்டையில் எதிரொலித்தன.

ஊமைத்துரை கர்ஜிக்கிறார்.

''இம்முறை எவன் வந்தாலும் எரியூட்டுவோம்!''

சுதந்திரக் கனல் சுற்று வட்டாரங்களில் பரவுகிறது. தூய தமிழ் நெஞ்சமுடைய சில பாளையக்காரர்கள் மட்டுமே துணைவந்தனர்.

ஆனால் இந்திய மண்ணைக் கவ்வ வந்த ஆங்கிலக் கிரகனம், இம்முறை தளபதி மக்காலே தலைமையில் கும்பினி வீரர்களைத் திரட்டி அனுப்பி வைத்தது. இந்தப் படை பாஞ்சாலங்குறிச்சியை அடைவதாவது?

வழியில் தமிழ் நெஞ்சங்களில் வீரச் சுதந்திரக் கனல் பற்றி எரிந்ததால், கொரில்லாப் போர்முறையில் இறங்கி மக்காலேவைத் தண்ணீர் காட்டில் தயங்க வைத்து விட்டனர்.

தூத்துக்குடி போன்ற இழந்து கோட்டைகளையும் ஓரளவு ஊமைத்துரை வீரர்கள் கைப்பற்றி விட்டனர். இத்தருணத்தில் ஆங்கில வீரர்கள் பலர் அக்குவேறு ஆணிவேறாயினர். எனினும் மேலும் மேலும் கும்பினிப் படைகள் திருநெல்வேலியிலிருந்து புற்றீசல் மாதிரிப் புறப்பட்ட வண்ணம் இருந்தன. இது ஆங்கிலேயர்களைப் பொறுத்தவரை ஒரு கௌரவப் பிரச்சினையாகிப் போய் விட்டது. இறந்த கட்டபொம்மன் தான் உயிர் திரும்பி வரவில்லையேயொழிய, பாஞ்சாலங்குறிச்சி பழைய நிலையடைந்து விட்டதே!

ஓ... தமிழ் மக்கள் விழித்துக் கொண்டனர். ஆனால் அகத்தில் சுதந்திரப் பலமிருக்குமளவுக்கு ஆயுதங்களில் அவர்கள் இல்லை என்பதை தளபதி மக்காலே புரிந்து

கொண்டான். துணை நின்றவர்களைத் துன்புறுத்தியும் கையூட்டு கொடுத்தும் விலைக்கு வாங்கி விட்டனர். பாஞ்சைத் தமிழ் மக்கள்தான் மானமுடைய பாசறை வீரர்களானார்களேயொழிய, சுற்றுப்புற மக்கள் 'நமக் கென்னே' என்கிற சீழ்பிடித்த சிந்தனைக்கு ஆளானார்கள். இதன் பயன்?

பலமான சுதந்திரக் கோட்டை களமானது; பிளவுபட்டு களங்கமானது.

பீரங்கிகளின் பூதாகரமான குண்டுகளுக்கு எத்தனை நேரம்தான் தாக்குப் பிடிக்கும்? ஊமைத்துரை என்ன செய்வதென்று புரியாமல் செயலில் ஊமையானார். தம் மக்கள் தப்பியோடினால் போதும் என்று உடைபட்ட கோட்டை வழியாக வெளியேற்றினார்.

''ராஜா! முதல்லே நீங்க தப்பிச் செல்லுங்கள். நீங்கள் சென்றால் இன்னொரு கோட்டையை உருவாக்கலாம். இதை விட்டு...''

கறுத்தாயி முடிக்கவில்லை...

''கறுத்தாயி! முதலில் நீ தப்பிச் செல்! என் அண்ணனுக்கு ஏற்பட்ட கதி எனக்கு ஏற்படினும் கவலை யில்லை. பாஞ்சையின் ராஜ ரத்தம், அண்ட வந்த அந்நியரை விரட்டச் சிந்திய ரத்தம் என்று வரலாறு பேசுமானால் அதுவே நாங்கள் வாழ்ந்த வாழ்வுக்கு ஒரு நிம்மதி போ... போய் விடு!''

ஊமைத்துரை ஆவேசம் கண்டவர் போல விரட்டுவது பிடிக்கவில்லையானாலும் மீறிப் பேசத் துணிவின்றி வெளியேறினாள் கறுத்தாயி.

போர் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எங்கும் பீரங்கிகளின் முழக்கங்கள். துப்பாக்கியின் சத்தங்கள்.

தமிழ் வீரர்கள் தங்கள் உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் வெள்ளைப் பரங்கயிரை எதிர்த்து வீழ்த்த முனைகிறார்கள். இனி ஜான் போனால் என்ன? முழம் போனால் என்ன? அந்நியன் ஆட்சியில் அடிமை நாய்களாய் வாழ்வதை விட மரணத்தில் இருக்கிற சுதந்திரம் மானமுள்ள மேலான சுதந்திரமல்லவா?

சுற்றிலும் தாக்கிய பீரங்கிகளின் குண்டுகளால் புதியதாக எழுப்பப்பட்ட சுதந்திரக் கோட்டை பொடிந்து போயிற்று. பொடிந்து போனாலும் எடுத்த சுதந்திரச் சவால் நிறைவேறிய திருப்தியோடு மக்கள் மடியலாயினர்.

''பாஞ்சை வீரர்கள் ஒருவர் கூட உயிருடனிருக்கக் கூடாது'' என்று ஆங்கிலத்தளபதி மக்காலே மூர்க்கமாய் கர்ஜிக்கிறான்.

அந்த ஒண்ட வந்த கர்ஜனை வீண் போகவில்லை.. என்று தான் தமிழகத்தில் ஒண்ட வந்த கர்ஜனை வீணானது?

பாஞ்சை நிலம் பஞ்சாய்ப் பறந்து ரத்த ஆறு கண்டது.

இனி இங்குப் புல்லும் முளைக்காது என்று தீர்க்கமாக முடிவு செய்த பிறகே தளபதி மக்காலே படையைத் திருப்பினான். ஊமைத்துரை படைக்களத்தில் குண்டுபட்டு மாண்டு போனான் என்கிற செய்தியே அவனுக்கு நாய் ஊளைச் சங்கீதமாய் இனித்தது. இனி பாஞ்சை சரித்திரம் முடிந்து விட்டது. அடுத்து சிவகங்கை சரித்திரம் முடியட்டும் என்கிற திமிரோடு திருநெல்வேலி நோக்கிப் பயணப் பட்டுவிட்டான்.

கோட்டையைச் சுற்றி ஒரே பிணக்காடு: ரத்த ஆறு.

ஆங்கிலக் கும்பினியர் புறப்பட்ட பிறகு, பாஞ்சை யிலிருந்து தப்பியோடிய மக்கள், தங்கள் குடும்பத்தினரை

இனம் கண்டு தூக்கிச் செல்ல போர்க்களமாம் பிணக்காட்டில் தேடுகிறார்கள்.

எந்த அடையாம் யாருக்குத் தெரிந்தது.

நடுஇரவு: கருங் கும்மென்று இருட்டு. குற்றுயிரும் குலையுயிருமாகத் துடித்த உயிர்ப் பிணங்களின் ஓலங்கள். இதற்குள் வானில் பிணந்திண்ணிக் கழுகுகள் சூழ்ந்து வட்டமிடத் தொடங்கி விட்டன.

தேட வேண்டியவர்கள் தேடியும், தேடிக் கிடைக்காமலும் திரும்பி விட்டனர்.

ஆனால் ஒரு தாய் மனம்..

''மகனே! என் மகனே!'' என்று அலைந்து வருகிறது. அந்த இரவில் ஓர் ஆவேசமான பேய் மாதிரி அலைந்து வருகிறது. ஒவ்வொரு சடலங்கலாகப் புரட்சடிப் பார்த்துக் கொண்டே வருகிறது.

ஒரு கட்டத்தில்...

''அம்மா!''

யாரது? மகன் குரல்போலக் கேட்கிறது...

மகனேதான்...

''அட என் ராசா! கெடைச்சுட்டியாடா, ராஜா!'' என்று அந்தத் தாய் மனம் அருகில் செல்ல, அந்த மகன் தமிழ் மகன்-சுதந்திரப் பற்றை நெஞ்சில் கூடு கட்டிய மகன் சொன்னான்:' 'அம்மா அதோ... அந்தப் பாறைக்கல் பக்கமாக ஒரு பிணம் இருக்கிறதே! அது உயிருடனிருக்கிறதா என்று பாருங்கள். அது வேறு யாருமல்ல நமது ராஜா ஊமைத்துரை! உயிர் கொஞ்ச மிருந்தாலும் உடனே கைத்தாங்கலாக அழைத்து கொண்டு மருத்துவர் வீட்டுக்குச் செல்லுங்கள். என் உயிர் இருந்து என்ன பயன்? அந்தச் சுதந்திரப் பேராற்றல் நிறைந்த உயிர்

*தப்பினால் பாஞ்சி பூமி மீண்டும் சுதந்திரம் பெற ஏதாகிலும் பாதை வகுக்கலாம்! போ, தாயே! நான் மாதாவின் மகன். அவர் இந்த மண்ணின் மகன். போ தாயே!''*

*அந்தத் தாயின் கால்கள் பாறையை நோக்கிச் செல்ல, அங்கே ஊமைத்துரை தோள்களில் குண்டுகள் பாய்ந்து தவித்துக் கொண்டிருந்தார். அவரை நெருங்கிப்பார்த்த அந்தத் தாய் மனம், பெற்ற மகனினும் பெரிதாக மகிழ்ந்து நெற்றியில் முத்தமிட்டுத் தூக்கிச் சென்றது. அவ்விதம் தூக்கிச் செல்வதைக் கண்ட மகன் ''ஓ! என் மண்ணின் மைந்தன் காக்கப்பட்டு விட்டார்'' என்று முணுமுணுத்து உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தான்.*

*அப்போது...*

*கலங்கிய கண்களும், வீங்கிய முகமும், தலைவிரித்த கோலமுமாகத் துணிவுடன் தீப்பந்தம் ஏந்தி வருவது யார்?*

*ஆ! கருத்தாயி! ஊமைத்துரை ராஜாவின் காதலி...*

*ஒவ்வொரு பிணமாக வெளிச்சத்தில் பார்வையிட்ட வாறு வருகிறாள்.*

*எங்கே என் ராஜா ஊமைத்துரை?*

*போரில் இறந்து விட்டதாகச் சொன்ன வீரச் சிங்கம் எங்கே?*

*''கறுத்தாயீ!''*

*யார் குரல் இது? அவர் குரலா?*

*மீண்டும் குரல் வந்த திக்கை நோக்கிச் செல்ல, அந்தக் குரலைக் கொடுத்தவன் ஒரு போர் வீரன்.*

*தாயை அனுப்பி வைத்த தமிழ் மகன்.*

''சின்ன ராஜா எங்கே? போரில் உயிர் துறந்தது நிஜம் தானா?''

ஆவேசமாகக் கேட்கிறாள் கறுத்தாயி.

போர்வீரன் அமைதிப் புன்னகையுடன், தனது தாய் தன்னைத் தேடி வந்த செய்தி முதல், ஊமைத்துரையை அழைத்துச் சென்ற காட்சி முதல் திக்கித் திணறி விவரித்தான்.

நெட்ட நெடிய பெருமூச்சுடன் ''ராஜா!'' என்று கதறிய கறுத்தாயி, ''சகோதரா! நீயே நல்ல ரத்தத்துக்குப் பிறந்த தமிழன். உன்னை எடுத்துச் செல்ல வந்த தாயை விட்டு, தலைவனமைகனாக பாவிக்கச் செய்தாயே! உன் மூலம் ஒன்று புரிகிறது. சுதந்திரம் இன்றைக்கில்லாவிட்டாலும் என்றைக்காவது நாம் பெற்றே தீருவோம்! உன்னை நான் காத்து அழைத்துச் செல்கிறேன். உனது ராஜ விசுவாசத்துக்கு நான் செய்கிற பிராயச்சத்தம்!'' என்று வீரக்குரல் கொடுத்து அந்தப் போர் மறவனைத் தூக்கினாள். ஆனால் அவன்?

அவனது உயிர், கறுத்தாயி பேசிக் கொண்டிருந்த போதே, பிரிந்து சென்று விட்டது.

கறுத்தாயி கதி கலங்கிப் போனாள். ஆயினும் அந்தத் தூய சுதந்திர ஆத்மாவை வணங்கி விட்டு, ஊமைத்துரையைத் தேடி ஓடுகிறாள், ஓடுகிறாள் பிணங்களைத் தாண்டித்தாண்டி ஓடுகிறாள்.

அந்த ஓட்டத்தில் ஊமைத்துரையின் இன்னொரு வீரசாகசம் ஒளிந்திருக்கிறது என்பது போல ஓடிக்கொண்டே இருக்கிறாள்...

-1989

# சோழ கங்கம்

அண்டத்தில் பிறந்த அதிசய உண்டை, அக்கினிப் பிழம்பாய் கிழக்கை முத்தமிட்டுப் பகலின், வழக்கத்தை தொடங்குகிறது.

சாட்சியங்கள் கூறுவன போல பறவையினங்கள் உதயராகம் பாடி உற்சாகமாய் பறக்கின்றன.

கங்கைகொண்ட சோழபுரம் கண்விழிக்கிற காட்சியைக் கண்டால், ஓ.. இது எழுதாக்காப்பியமோ? என்று விழியாதார் யார்?

பொன்னையை முகம் படைத்த பொன்னி எனும் பொற்பாவை கண்விழித்தாள். அவளது கண்களைக் கண்டு 'கயல்விழிகளோ?அன்றிமயல்விழிகளோ' என்று மலைத்துப் போகாத மன்மத வாலிபர்கள் அந்தத் தலை நகரில் இல்லையென்றுதான் சொல்ல வேண்டும்.

ஆனால் பொன்னி?

பூவெடித்த நாள்முதல், சோழமகா சக்கரவர்த்தி ராஜேந்திர சோழரின் புன்னகை கிடைக்குமா என்று ஏங்கியும் சோங்கியும் எழில் கரைந்து வருகிறாளே! இது அந்நகர் வாழ்வோருக்குத் தெரிந்த செய்தி.

அன்று ராஜேந்திரசோழ மகா சக்கரவர்த்தியின் பிறந்த நாள். மதிநிறைந்த மார்கழித் திங்களின் வதியஞ்சும் திருவாதிரைத் திருநாள். பத்து நாழிகைப் போது பறந்ததும், மணிமுடி தாங்கிய ராஜேந்திர சோழன் நகர்ப்பவணி வரப் போகிறான். நகர வீதிகண் நயம்பட அலங்கரிக்கப் பட்டிருந்தன.

*பிரதான ராஜவீதிகளில் மக்கள் தங்கள் மாமன்னரை வாழ்த்த, வீதிகளின் இரு புறங்களிலும் நெரிசலை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர். ஆயினும் உரு கட்டுப்பாட்டுடன் அந்த ராஜதரிசன நெரிசல் காணப்பட்டது. வீதியின் ஒருமருங்கே ஆண்கள் என்றால். மறுமருங்கே பெண்கள்; குழந்தைகள். அவர்களிடையே அலங்காரமில்லை. அது ஒரு முக்கிய மாகவும் அவர்களுக்குத் தெரியவில்லை. அகங்காரமில்லை. அது அவர்களுக்குத் தெரியாது. அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் ராஜவிசுவாசம்.*

*நகரமே திரண்டுவந்து நிற்க, பொன்னி மட்டும் ஏன் வீட்டிலடைந்து வீணுக்குப் புழுங்குகிறாள்? அவளது ஆரம்பாகலத் தரிசனங்களின் கதைவேறு. சக்கரவர்த்தியிடம் ஆத்மாவைச் சரணடையச் செய்த சல்லாபக் கனவின் பட்டுக்குஞ்சம் ஆனால் இப்போது?*

*வயதாகி விட்டவர்தானே சோழ மகா சக்கரவர்த்தி என்பதாலா? சே, சே! அவள் கன்னிமையடைந்த போதே அவர் அறுபதைத்தாண்டிய அழகுமிக்க வாலிபர்தானே. கனவில் அவருடன் கொஞ்சிக் குலவியது போது மென்ற சலிப்போ? அதனால் ஏற்பட்ட கலவையோ? பின்?*

*மாமன்னரே ஒருநாள் தன்னைவந்து காணவேண்டும் என்கிற சபதமே. அவனுக்குள்ளே ஒரு சங்கல்பம் மறுகிக் கொண்டிருந்தது. அது.. அது..*

*இந்த நாட்டு ஏழைமைப் பற்றியே என்ன வென்று புரியாது தெரியாது சக்கரவர்த்தி இப்படிப் பிறந்த நாள் பவனி வருகிறாரே! செங்கோலினும் உயரிய உழவுகோலைப் பற்றிச் சிந்தியாமல் நாட்டு எல்லையை*

மட்டும் வடக்கே கங்கை வரையிலும் தெற்கே ஈராக்வரையிலும் மேற்கே மகோதை வரையிலும் கிழக்கே கடாரம் வரையிலும் பரப்பி என்ன பயன்? இப்படிப் பட்ட சக்கரவர்த்தியின் பேரில் ஒருதலைக் காமமாக மனத்தைப் பறி கொடுத்து விட்டோமே! வயதைப் பாராது வீரத்தை மட்டுமே எண்ணித் தனது வசீகரத்துக்கு வயதேற்றிக் கொண்டிருக்கிறோமே!

ஒருநாள் நாமும் அவரைச் சந்திப்போம்; பிறகு கனவு குறித்துச் சிந்திப்போம்; நனவு நலம்பெறின் வந்திப்போம் என்று இருந்தாள்.

**சோ**ழ மகா சக்கரவர்த்தி ராஜேந்திர சோழன், பட்டத்து யானை மீதமர்ந்து கங்கை கொண்ட சோழபுரத்து ராஜவீதிகளில் பவனிவந்து கொண்டிருக்கிறார். மங்கல வாத்தியங்கள் பூமிக்கும் வானத்துக்குமாய் புளகிக்கின்றன. எங்கும் மக்கள் மனத்தின் பரிசுத்த வாழ்த்தொலிகள்.

ராஜேந்திர சோழ மகா சக்கரவர்த்தி, பொன்னியைப் பற்றிச் சென்ற ஆண்டே ஓவியச் செய்தியாய் மனத்தில் கோடுதீட்டிக் கொண்டிருந்தார். இதே பிறந்த நாளில் அவளை ராஜவீதியில் காணவும் எதிர்பார்த்தார். ஆனால் அது இயலாமல் போய்விட்டது. இந்த ஆண்டேனும் அவளை அடையாளம் காட்டுமாறு உரியவர்களுக்கு ஆணை யிட்டிருந்தார். இவ்வாண்டும் அவளைக் காண முடியாமல் போய்விட்டது. ஒருவேளை திருமணம் செய்து கொண்டு போய்விட்டாளோ?

விசாரித்தறிய வேண்டும். இருப்பின் நாளை அவளது விலாசம் தேடிச் செல்லவும் வேண்டும். அவளை அரண்மனைக்கு அழைத்துப் பேசுவது அநாகரிகம். அவளது

அந்தப் புனித காதலுக்கு அவளது வாசற்கதவுகளில் தாம் பாயிரம் எழுதித்திரும்பவேண்டும்.

அந்திமலை, மேற்குத்திசைக்குச் செந்தூரப் பொடி தூவிப் புலிக்கொடிப் பெருமையைப் புவனத்துக்கு வரைந்துகாட்டிக் கொண்டிருந்தது.

சோழமகா சக்கரவர்த்தி பெருமான் இந்த ஏழை விவசாயி வீட்டுக்கு வருவதா?

பொன்னியின் பெற்றோர் வியந்து அலைமோதினர். தங்கள் மகள் பொன்னியின் இப்படியான பித்தமிகு காதலைக் கேள்விப்பட்டுத்தான் சக்கரவர்த்தி வருகிறாள். இதனால் தீது நடக்குமோ? ஏது நடக்குமோ என்று திக்குமுக்காடினர்.

பொன்னி மட்டும் சக்கரவர்த்தியின் வருகையை ஆவலுடன் எதிர்நோக்கினாள். தனது பாசமிகு காதலை வாசமிகு சக்கரவர்த்தி கேள்விப்பட்டே வருகைதருகிறார். இது நன்மைக்காகவே இருக்க வேண்டும். தமது பத்தினிமார்க்கத்துடன் பத்தோடு பதினொன்றாக என்னைக் சேர்த்துக் கொள்ளவும் வருகை தரலாமல்லவா?

வீதியில் கருவிகளாம் சோழப் பணியாளரகள் வரிசை கட்டில் பெருத்த காவலில் நின்றனர். பெருந்தரக்கருமிகளாம் சிறப்புப்பணியாளர்கள், காலலைக் கெட்டிப்படுத்திக் கொண்டிருந்தனர்.

அதோ முரசம் கேட்கிறது.

ஆ! எனது இதயம் வருகிறது! சோழமகா சக்கரவர்த்திகள் கங்கை கொண்ட முடிகொண்ட மகாசக்கரவர்த்திகள் வருகிறார். பொன்னியின் கோபுரகலச மன்ன மார்பு மகிமைகள் விம்மிப் பிதுங்கின. இன்னும் அவற்றுக்குக் கும்பாபிஷேகம் ஆக வில்லையே!

ஒடுவேய்ந்த வீடானாலும், சற்றே செல்வம் கொழிக்கும் விவசாயி வீடு அது. வாசலில் ரதம் வந்து நிற்கும் சத்தம். பொன்னி யோசிக்கிறாள். இப்போதும் பிடிவாதமாகச் சக்கரவர்த்தியை வரவேற்காதிருத்தல் அரச அவமரியாதை.

பொன்னி, கலீரென தண்டைகள் முழங்க ஓடோடிச் சென்று மாமன்னரைக் கரம்கூப்பி வரவேற்கிறாள். வாயில் சொற்கள் வெளிப்படவில்லை. மௌன வெட்கம். ஓர் இறுக்கமான நடுக்கத் தவிப்பு.

ராஜேந்திர சோழ மகா சக்கரவர்த்தியின் கண்கள் பொன்னியை ரசனையோடு நோக்குகின்றன. இவள்தான் பொன்னியா? தோழியற்றுக் கணாக்காணும் விவசாயப் பாவை இவள்தானா? முற்றிக் காய்ந்து அறுவடைக்கு நான்தயார்' என்று பகரும் நெற்கதிர் போன்ற பெண்ணின் முத்திரைக் கவிதைகள் கொண்ட மோகன சொரூபி இவள்தானா? கல்லுளி காணாத கனிந்த சிற்பம் இதுதானா? பொன்னையை மேனி, புகழனைய பொலிவு, விண்ணனைய பார்வை, விலாசம் தெரியும் முகம்கொண்டு இளமையை கரைக்காத ஏற்றம் இதுதானா?

ரணகளத்தில் பிரமிக்காத ராஜேந்திர சோழ மகாசக்கரவர்த்தி இந்தக் சுனைக்களத்தைக் கண்டு மலைத்து மயங்கிப் போனார்.

பொன்னியின் தக்கை புண்ணியகோடிப்பிள்ளை, பொன்னியின்-காவிரியின் புருஷரான ராஜேந்திர சோழரின் பாதம் பணிந்து உள்ளே வரவேற்றார். மகள் பொன்னி மாமன்னர் கழல் பணியவில்லையே என்கிற குறை அவரது மனத்தே அலை புரளச் செய்தது.

அந்தச் சின்னஞ்சிறு வீட்டினுள் நுழைந்த மாமன்னர், தமது பென்னம் பெரிய ஒருதலைக் காதலி வகிப்பதால், அந்த

வீட்டையும் அரண்மனையாகவே பாவித்தார். அருகே இருந்த ஏழைமை இருக்கையில் அமர்ந்தார்.

''உட்கார் பொன்னி!''

பொன்னி நஞ்சைநிலம் போல் நகைத்து, ''நான் சொல்ல வேண்டியதை நீங்கள் சொன்னீர்கள். நான் நிற்கிறேன்'' என்று நாவசைத்தாள்.

''நான் உன்னிடம் தனிமையில் பேசவேண்டும் பொன்னி!''

சக்கரவர்த்தி இவ்விதம் கூறிய அடுத்தகணம், அங்கு ஓர் ஈயும் கூட பறக்கப் பயந்து வெளியேறியது.

''பொன்னி! நீ என்னைக் காதலிக்கிறாயாமே!''

''இல்லை சோழபிரானே!''

''இல்லையா!''

''கனவு கண்டு வருகிறேன்.''

''நான் முதியவன்!''

''வயதானவர் என்று திருத்தி சொல்லுங்கள்!''

ராஜேந்திரசோழர், தம்மைமறந்து பெருநகை புரிந்தார்.

பொன்னி புன்முறுவலுடன் நாவைமீட்டினாள்: ''நான் வயதைக் காதலிக்கவில்லை; வலிமைமிகு உங்கள் வீரத்தைக் காதலிக்கிறேன். ராஜராஜ சோழ மகா மகா சக்கரவர்த்தியின் மகனாரைக் காதலிக்கிறேன்.''

பெரிதாக மகிழ்ந்து போன மானமன்னர் ஏதோ சொல்ல வாயெடுக்குமுன் இடைபுகுந்து பொன்னி சொன்னாள். ''ஆனால் அரண்மனைப் பதுமையாக நான் விரும்ப வில்லை.''

பதறிப்போனார் பண்டித சோழர்.

''என் மனைவிகள் பதுமைகள் என்கிறாயா?''

''பின்! உங்கள் வெற்றிகளையும், சாம்ராஜ்ய பெருக்கத்தையும், புலவர்பாடும் பாடல்களையும் மட்டுமே ரசிக்கும் உங்கள் மனைவியருள், ஒருவராவது ஏழைமக்கள் குறித்துக் கவலைப் பட்டிருக்கிறார்களா? வயிற்றுக்குச் சோறு இல்லாமல் வாடும் சோழவளநாட்டு வறிஞர்களைப் பற்றிச் சிந்தித்து இருக்கிறார்களா? பரந்த கங்கை கொண்ட சோழபுரத்து விளை நிலங்கள் மழையை நம்பியே இருக்கின்றன என்பது குறித்து ஒருநாளாவது ஓர் அரசியாவது, நினைத்துப் பார்த்து இருக்கிறார்களா? அவர்கள் நினைப்பெல்லாம் பொருள், போகம்! இம்மாதிரியான ஏழை வீடுகளின் குறுக்கு நெடுக்கோ கிழக்கு மேற்கோ அவர்கள் பார்த்தறியார்! ஒரு பொன்னி என்பவள் காதல் கொண்டதனால்தானே பொன்னி வளவரான நீங்களும் இந்த ஏழைக் குடிலுக்கு எழுந்தருளியிருக்கிறீர்கள்! இவ்விதம் எழுந்தருள வேண்டும் என்பதற்காகத்தான் எனது காதல் தவம் செய்தது. இன்று அது பலித்தும் இருக்கிறது.''

பொன்னியின் நாசியில் பெருமூச்சு பறிந்தது. சோழமகா சக்கரவர்த்தியும் உதடுகளைக் கடித்து, ''உன் காதலின் நோக்கமே!'' என்று கேட்டார்.

''ஒரே வரியில் சொல்ல முடியாது. ஒரே நாளிலும் சொல்லிவிட முடியாது.''

''நான் இங்கு அடிக்கடி வரமுடியுமா?''

''வந்தால்தான் என்ன்?

அதிர்ந்து போனார் அரிமாவன்ன ராஜேந்திரசோழர்.

''வருகிறேன் பொன்னி! இனிவருவேன். மணிமுடி. மண்டபங்களுக்கு மட்டுமே உரியதல்ல; மண்குடிசைக்கும்

உரியது என்பதை நீ உணர்த்திவிட்டாய்! என் தந்தை ராஜராஜ சோழர் நீ சொன்ன மகா மாக மாக சக்கரவர்த்தி மண்ணை யளந்தார். நீ என்னை மண்குடிசைகளை அளக்க வைத்து விட்டாய்! அது சரி; என்னை ஏன் நீ எனது பவனியில் காண மறுத்தாய்?''

பொன்னி சூன்யமாய்ச் சிரித்தார்.

''சோழர் பெருமானே! ஏழைமக்கள் என்றுமே, எப்போதுமே ஆட்டு மந்தைகள்; இதை வைத்துத்தான் மாட்சிமை மிக்க ஆட்சி நடக்கிறது. இதுஒருவிதமான நிலாக்சோறு அரசியல்! ஏழைகளை விழிக்கச் செய்யத் தோன்றும் விடிவெள்ளிகள் கூட, இருட்டில் கண்களைக் குத்தி, வெளிச்சத்தில் பிழைப்பு நடத்தும் அசிங்கத்தால் ஆட்கொள்ளப் படுகின்றன. இது ஓர் அரசியல் பாசாங்கின் மறுபக்கம்! எனவேதான் உங்களை எண்ணி உருகித்தவம் செய்தேன்; பிரசண்ணம் கண்டேன். எனது கோரிக்கையை முன்வைக்கும் தருணம் வாய்த்திருக்கிறது.

''நீ சாணக்கியம் படித்து இருக்கிறாயா?''

''சாணத்தை மட்டுமே உருட்டில் படிக்கப் பட்டவள்!''

ராஜேந்திரசோழரின் உதடுகளில் கொடலீயப் புன்னகை.

''பொன்னி! உனது கோரிக்கையைச் சொல்!''

''காவிரி இங்கு பாயவேண்டும். ஒருநாட்டின் மேம்பட்ட செல்வம் போர்வளமல்ல; நிர்வானம்!''

''புரியவில்லை''

''கங்கை கொண்டு பயனில்லை, காவிரி கொள்ள வேண்டும். இங்கே ஒரு பெரிய ஏரியை உண்டுபண்ணி, அந்த

ஏரிநீர் ஏழைகளின் கண்களில் பெருகியோட வேண்டும். புஞ்சையெல்லாம் நஞ்சையாக வேண்டும். செத்துக் கொண்டிருக்கும் ஏழை விவசாயிகள், குட்டிச் செல்வந்தர்களாக வேண்டும்.''

''இது சாத்தியமா?''

''எது சாத்தியமில்லை? கங்கையைக் கொண்ட வலிமை, காவிரியைக் கொள்வது ஒரு பெரிய விஷயமா? பிரபோ! காவிரி கொள்ளும் கொள்ளிடத்து நீரையும், வடக்கிலிருக்கும் வெள்ளாற்று நீரையும் கால்வாய்கள் மூலம் கொண்டு வந்து பெரிய ஏரியை வெட்டி நிரப்புவது என்ன பகீரதப் பிரயத்தனமா?''

''பொன்னி!'' என்று பெரிதாகக் கூச்சலிட்டு விட்டார் பண்டித சோழரான ராஜேந்திர மகா சக்கரவர்த்தி.

''பொன்னி! இதுவரை எனக்கு இந்த எண்ணம் தோன்றவில்லை. தோன்றச் செய்தவர்களுமில்லை. வறுமையின் வதை ஏழைகளுக்குத்தான் தெரியும். நாளையே ஏரி கொள்வேன்! பெரிய ஏரி வெட்டுவிப்பேன்! அதற்கு உன் பெயரையே சூட்டுவேன்!''

''அரசியல் சின்னங்களில் இதுவும் ஒன்று! வைக்கிற பெயர் என்றும் நிலைத்திருக்கக் கூடியதாக இருக்க வேண்டும். அடுத்து வருபவர் மாற்றி விடலாமே என்று எண்ணும் வகையில் இருக்கக் கூடாது. இது சோழநாடு. கங்கை கொண்ட சோழபுரம். சோழகங்கம் என்றே பெயரிடலாம்.''

''ஆகா! பொன்னி! உனது பரந்த பேரறிவை மெச்சுகிறேன். உன்னை நான் எனது தேவியாக்கிக் கொள்ளப் போகிறேன். படுக்கைக்கு அல்ல; படிப்பதற்கு!''

''உங்கள் நயமிக்க கவிதைச் சொற்களை ஏற்கிறேன். ஏரி நிரம்பட்டும்; ஏழைகள் மகிழட்டும்; இந்த ஏந்திழையாளும் உங்களை மகிழ்விப்பாள்.''

ஏதோ ஓர் எழுச்சிமிகு புதிய உணர்வுகள் எழுந்து கொண்டார் ராஜேந்திர சோழ மகா சக்கரவர்த்தி.

சோழகங்கம் ஏரி உருவாகி வருவது கண்டு கங்கை கொண்ட சோழபுரத்து மக்களே களிப்பெய்திக் கானம் பாடினர்.

மகிழ்ச்சியால் பொன்னி, ஒருசுற்று பெருத்துவிட்டாள். நாட்டு மக்களிடையே அவற்றுக்கு சில நன்மதிப்பு மரியாதையை மரியாதையுடன் வணங்கி மரியாதை செய்தனர். அரசமாதேவிகளை பஞ்சவன் மாதேவியும், முக்கோக்கிழாணடியும் கூட, பொன்னி வீட்டுக்கு வருகை தந்தனர். பொலிவிழந்தஏழைக்குடிசைகளையும் பார்வை யிட்டனர். பொன்னி, சோழதேவியாகப் போகிறாள். ஏழை களின் பிரதிநிதியாகப் போகிறாள் என்று தாழ்த்தப்பட்ட இனங்கள் நிமிர்ந்து நின்று நிலைமைகளைச் சிந்தித்தனர்.

பொன்னியின் நெஞ்சம் புலரியத்துக்குப் புலரியம் பூச்சூடி மகிழ்ந்தது. கனவில் மத்தளம் கொட்டியது போதுமென்று, நனவில் வரிச்சங்கங்கள் நின்றூதின. ஓ... கைத்தளம் பற்றப் போகிறார் கங்கை கொண்ட காவலர்.

நாளை சோழகங்கம் ஏரியின் மடைதிறப்பு விழா. நீர் நிரம்பிக் காணப்படுகிறது. ஆ! எத்தனை ஏழைகளின் உழைப்பால் சிந்திய வியர்வைத்துளிகள்!

பொழுது! பொன்னிக்குப் பொலிவு தருவது போல, சூரியப் பிரகாசம் பாய்ச்சியது.

பொன்னியை அழைத்துவர, அரசப் பிரதானிகள் பலரிருந்தும், தாமே ரதமேற்றிக் கொண்டுவரப் புறப்பட்டார் ராஜேந்திர சோழமகா சக்கரவர்த்தி. ஏழைமையின் புதிய கதவுகளைத் திறந்தவளாயிற்றே!

பூரிப்பால் தடுமாறிப் போன பொன்னி, சோழ மாமன்னரே ரதம் கொண்டு வருகிறார் என்கிற பெருமை மிகு இனிய செய்தி செவிகளில் நுழைய...

கலீர் கலீர் என்று கால் தண்டைகள் முழங்க ஓடோடி வருகிறாள்.

புலியின் கம்பீரமும், தோள்வலிகளின் பெருமிதமும் எதிரொலிக்க ரதத்தை விட்டு இறங்கி வருகிறார் ஏரிகண்ட சோழர்.

''பொன்னி! உனது ஏழைமைக் காப்பியத்தை எழுதிமுடித்துவிட்டேன். நீ வந்து படித்து மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியதுதான் பாக்கி! புறப்படு சோழதேவி!''

இந்த உணர்வுப் பெருக்கான சொற்கள் பொன்னியின் செவிகளை நெருங்குமுன்...

பொன்னியின் புளகப் பெருக்கால், பூதவுடல் கல்லாய் கனத்து நின்றது. அவளது உயிர் சோழ கங்கத்தில் இரண்டறக் கலந்து விட்டது.

'எனது புத்தகத்தின் கடைசிப் பக்கம் இதற்குமுன் முடிந்து விட்டதா' என்று குமுறியழுதார் அறுபது வயதைக் கடந்த அரிமாச்சோழர். அவரது கண்களில் சங்கமமாகி விட்ட பொன்னி, மடைதிறந்தாள். ஏழைமைக்கு விடை பகர்ந்தாள். இதனால்தானோ என்னமோ, அந்தச் சோழகங்கம் ஏரி, பின்னாளில் பொன்னேரியாயிற்றுப் போலும்!

- ***1994***

# ஓவியப் பாவை

**வ**சீகரமிக்க வாதாபித் தலைநகரில் அமலப் பிரபா நதி இருந்தும் வாதோரா நதிக்கு மட்டும் வரலாற்றில் வாழ்த்துக்குரியக் காப்பியப் பெருமை இருப்பானேன்?

அஜந்தா மலைக்குகையில் அருவியாய் விழுந்து, அழியாச் சித்திரங்களை வளைய வந்து பாய்ந்தோடும் வலப்புமிகு சிலிர்ப்போ? அல்லது சிரிப்போ?

மேற்கு வானில் ஓவியச் சக்கரவர்த்தியாம் சூரியன், செந்தூர வண்ணத்தில் சித்திரம் வரைந்து கொண்டிருந்தான்.

புவன மகா சக்கரவர்த்திகளுள் ஒருவரான சாளுக்கிய சாம்ராஜ்யாதிபதி புலிகேசி, நீர்வீழ்ச்சிக்கு அருகே ஒரு பாறை மீது அமர்ந்து யாரை எதிர்பார்க்கிறார்? வாரத்துக்கு ஒரு நாள் இவ்விதம் வருகை தந்து அஜந்தா மலைக்குகையைச் காவல் காக்கிறாரா?

ஓ... காதல் எனும் பொன்வலைப்பட்ட கவலை அவருக்கல்லவோ தெரியும்; புரியும்!

காதல்...

அது கனவில் நீராடும்; காப்பியத்தில் அலங்கரிக்கும். நனவில் நச்சரிக்கும்

முடிவில்...

கண்ணீரில் மடியும்; சிலசமயம் பன்னீரில் விடியும். பண்ணீரில் விவதென்பது பலாச்சுளை அனுபவம். காதல் இனிப்பை அவ்வளவு எளிதில் களைத்திட இயலுமோ?

ஆ! எப்பேர்பட்ட மாவீரன் வாதாபி புலிகேசி?

கேவலம் அஜந்தாக் குகையில் கண்ட ஓவியப் பாவையைத் தேடியலைவதா?

ஆனாலும்...

அந்த ஓவியத்துக்குறியவள், சொற்கொண்டு, சொற்கொண்டு எழுததுடியாத கற்கண்டு பேரழசினள். இருந்தால் வயது ஏறத்தாழ இருபதுக்குமேல்...

இருக்கட்டுமே...

தமது அறுபது வயதை தராசில் அமர்த்திப் பார்க்கிறார் சாளுக்கிய சண்ட மாருதப் புலிகேசி.

வயதாவது? வார்ப்படமாவது?

காமம் அழகை ரசிப்பதல்ல; தேவையுமில்லை.

காதல் வயதை நினைப்பதில்லை. நிர்ணயித்துக் கொள்வதுமில்லை.

காதலுக்குரிய காமம் தென்றலைப் போல் மென்மை சுகம்.

கள்வெறிச் காமமோ, புயலைப் போல் அடித்தோம் வீழ்த்தினோம்.

காமம் இருப்பின் காவலனாம் புலிகேசி, வாதோரா நதியில் வருத்தக் கண்ணீரை சிந்தி எதிர்பார்ப்பாரா. வடக்கே கன்னோஜ் முதல் தெற்கே காஞ்சி வரை கால் பதித்து வீரத்தோள் பதித்துப் பார்த்தவராயிற்றே! காஞ்சி மட்டும் அவரது காலைச் சுடவில்லையென்றால் தமிழகத்தில் புலிகேசி பாஷை அல்லவா புரண்டு உருண்டிருக்கும்? புயலன்ன வீரம் கொண்ட புலிகேசி நெஞ்சில் காதல் யுத்தமா?

இதனால்..

வாதாபித் தலைநகரம் வருத்த வலை பின்னியது: சாளுக்கியப் பேரரசோ சலசலப்பு கண்டது.

எனிந்த நிலை?

ஆறு மாதங்களுக்கு முன்...

ஐப்பசி மாத அடைமழை நேரம்..

அஜந்தா மலைக்குகைப் பிளவுகளில் நீர் கசிந்து ஓவியங்களுக்கு ஏதும் பாதிப்பு ஏற்பட்டு விடக் கூடாதே என்று பார்வையிடத் தமது பாரிவராதங்களுடன் விஜயம் செய்திருந்தார் தக்கணத்து யுத்த ராட்சசன் புலிகேசி. உடன் அவரது அவைப்புலவரும் காளிதாசனுக்கும் பாரவிக்கும் இணையான கவிஞருமான இரவி கீர்த்தியும் வந்திருந்தார்.

அஜந்தா ஓவியங்கள் புரிகேசி காலத்துகக்கு முற்பட்டதாயினும் அவரது ஆட்சியில் மேலும் செப்பனிடப்பட்டுப் புதிய சித்கிரங்கள் புதுமை முத்திரைகளைப் பதித்து ஒளிர்ந்தன.

அந்நாளைய பாரசீக மன்னன் குஸ்ரு என்பான் அனுப்பிய தூதுக்குழுவின் உதவியால் அந்தப் புதுமை ஓவியங்கள் அஜந்தா குகையை அலங்கரித்தன. பழைய ஓவியங்களுக்கும் வண்ணப் புத்துயிர் அளிக்கப்பட்டது.

வெளியே 'சோ' வென்று மழை பிடித்துக் கொண்டது. எனவே அரை நாள் முழுவதும் குகையில் தங்கி நீர் கசிவுகளைப் பார்வையிட்டு வருகிறபோது...

ஓரிடத்தில் தேவையில்லாத ஒரு சரிவுப் பாறை ஒதுக்கில் புதிய ஓவியம் தென்பட்டது.

இத்தனை காலமில்லாத ஓவியம் இப்போது திடுமென்று எவ்வாறு உதயம் கண்டது?

ஓர் அழகிய முகிலைக்கிழித்த முழுமதியன்ன ஓவியப் பாவை பார்க்கப் பாகு இனிக்குமோ? தேன் இனிக்குமோ என்பது போன்ற பார்வை; எடுத்தால் துள்ளும் இளமை. ஆனால் எடுக்க முடியாதே என்கிற ஏக்கம். ஓவியமாயிற்றே?

அந்தப் பேரழகியின் பக்கத்தில் ஓர் இளைஞனின் சித்திரம். யாரிவள்? யார் இவன்?

தீவர்த்தி பிடித்திருந்தவர்களை அருகே அழைத்துப் பிடிக்கச் சொல்லி எவ்வளவு நேரம்தான் வைத்த கண் வாங்காமல் நோக்குவார் புரவலர் புலிகேசி?

அருகிலிருந்த அவைப் புலவரை நோக்கி, ''இரவி கீர்த்தியாரே! இந்தப் பெண் அழகைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்றார்.

கவிஞர் இரவிகீர்த்தியும் சற்று செருக்காகவே சொன்னார். ''இரவி கீர்த்தி போல் விளங்குகிறாள்.''

''என்னது?''

''சூரியனின் புகழ்போல் என்றேன். சூரியனின் அழகொளிக்கு மிஞ்சிய புகழ் உலகில் உண்டா?''

செருக்காகச் சொன்னாலும் கவியாழத்தின் செம்மை கண்டு சிலிர்த்துப் போனார் புலிகேசி.

''காளிதாசனின் சகுந்தலை போலிருக்கிறாள் என்று சொல்லுவீர்கள் என்று எதிர்பார்த்தேன்.''

இரவி கீர்த்தி ரணப்பட்டது போலச் சிரித்துக் கொண்டார்.

''வாதாபி வல்லப, அது ஒரு ஜீரணிக்க முடியாத மீன் வயிற்று மோதிரக் கதை. கல்லெறிந்தால் நீரில் கலையும் அழகல்ல இவளது அழகு. இது கல்லில் தீட்டிய காப்பிய அழகு. அது துன்பியல் கதைத் தூசு. இவன் மீது படிய வேண்டுமா? காரணம்..

''காரணம்..''

பத்தாண்டுகளாக மனைவியை இழந்த உனது மனத்திரையில் மலைய மாருதம் பாடத் தொடங்கி இருப்பதாக நான் அறிகிறேன். நான் எனது புலிகேசியை துஷ்யந்தனாக்க விரும்பவில்லை. அந்த துர்பாக்கிய கனவும் உனக்கு வேண்டாம். சித்திரத்தையும் சிற்பத்தையும் நேசித்தவர்கள் கதை நித்திரையோடு முடியவதாகும்.!

''இல்லை... வருகிற சித்திரைக்குள் இவளைச் சந்திப்பேன். இவளது அழகை வந்திப்பேன்''

''நல்ல வேளை! என்னையும் நிந்திப்பேன் என்ற சொல்லாமல் விட்டாயே! புலிகேசி! இது தேவையற்ற சபதம்!

''இந்தப் புதிய சித்திரங்களை யாரோ எழுதியிருக் கிறார்கள். இந்த ஓவியப் பாவை எங்கோ இருக்கிறாள். தக்கணத்து எந்த மூளையிலிருப்பினும் அழைத்து வர ஆணையிடுவேன்.''

''நல்லது அவள் கன்னியாக இருந்தால் சரி; கணவனயுடைவளாக இருந்தால்!''

புலிகேசி மௌனமாய் மருண்டு போனார். இரவிகீர்த்தியே விடையும் பகர்ந்தார்...

''ஓ.. காதலிப்பவர் வாதாபி சக்கரவர்த்தி! யுத்தப் புயல்! ஆசைக்கு ஏது நீதிப் புத்தகம்? அது தாலியையும் பாராது;

வேலையையும் லட்சியப் படுத்தாவது என்கிறாயா? ஆன்மா ஒன்றுபடுகிறபோது சுகம் தன்னால் கும்பாபிஷேகம் செய்து பாவ சாந்தி கொள்கிறது என்கிறாயா? உள்ளங்கள் உரிமை பெறுமானால் அதுவும் ஒருவித அத்வைதம் என்கிறாயா? முயன்று பார்! திருவினையாகட்டும்!''

புலிகேசி எங்கே அதிர்ச்சியால் புலம்பலுறுவாரோ என்று புலவர் இரவிகீர்த்தி காதலுக்கு மட்டும் தான் பாவமில்லை என்பதல்ல; ஆசைக்கும் பாவமில்லை என்பதை மிக்கவும் நாசுக்காக உணர்தினார் போலும்!

அன்று முதல் இன்று வரை இன்னமும் எதிர் பார்க்கிறார் எதிர் பார்த்துக் கொண்டே இருக்கிறார் வாதாபி சக்கரவர்த்தி புலிகேசி.

சித்திரையும் பிறந்து இளவேனில் திருவிளையாடல் புரியத் தொடங்கி விட்டது.

ஓ... இன்னும் அந்த ஓவியப் பாவையைக் காணோமே! கண்டு பிடிக்க முடியவில்லையே! அப்படி ஒரு பெண்ணே இல்லையா? கற்பனையில் எவனோ வரைந்து விட்டுப் போன வசீகர வனப்போ?

புலிகேசியின் நெஞ்சியிலிருந்து அவள் கொஞ்சம் கொஞ்சமாகக் கழன்று கொண்டே வரவும் தொடங்கி விட்டாள்.

ஏமாற்றம் என்று வருகிறபோது?

பூ மாற்றம்; அல்லது மனத்தின் புதை மாற்றம் தானே!

காசி என்ற புனிதச் சொல் வைகாசியில் இருப்பது போல கேசி என்ற சொல் புலிகேசிக்கே பொருந்தும். அந்த அளவுக்கு ஆட்சி செய்த அரிமா நெஞ்சு அலமரல் காணலாமா?

ஓவியப்பாவை கிடைத்து விட்டாள்; ஆ! கிடைத்து விட்டாளா?

நருமதையாற்றங்கரையில் கண்டு அவளுக்கு மரியாதைகள் வழங்கியும் வர மறுத்து விட்டாள். சக்கரவர்த்தி புலிகேசியின் ஆணை என்று உருமிய பிறகல்லவா அவள் ரதத்தில் அமர்ந்தாள்!

அரண்மனையே அதுவரையில் இருந்த மௌனத்தில் இருந்து கலைபட்டு, பரபரப்பால் களைப்பட்டது.

கிடைத்து விட்டாளா என்கிற சிறக்கம் நிறைந்த வியப்பு, வெடிப்பட்ட புலிகேசி, அவனைப் பார்க்க ஆவல் கொண்டார். அரண்மனையில் தமது அந்தரங்க அறையில் வேறு எவரையும் அனுமதிக்கவில்லை. ஏன்? அவைப் புலவர் இரவி கீர்த்தியைக் கூட உடன் வைத்துக் கொள்ளவும் விரும்பவில்லை. அந்தரங்கமான இரண்டு உள்ளங்கள் அலசவேண்டிய தேன் பலாச் சொற்கள், அங்கே ஈக்களுக்கு என்ன வேலை என்பது போன்ற அலட்சியம். காதலுக்கு முன் கடவுளையே அலட்சியம் செய்கிறபோது...

அலட்சியத்தை அஸ்திவாரமாகக் கொண்டுதானே, காதல் லட்சியத்தோடு ஒன்றில் ஒன்றாகிறது?

அந்தரங்க அறையில் அறுபது வயது அகங்கார ஆண்மையுடன் ஆசனத்தில் அமர்ந்திருந்தது.

சற்றைக்கெல்லாம் காற் தண்டை கொஞ்ச அறையினுள் நுழைந்தது அழகுப் பதுமை.

அலங்காரமே இல்லை.

ஓ... அலங்கரிக்காமலேயே இந்த பொன்னார்மேனி பொலிந்து காணப்படுகிறதென்றால் ஒப்பனையில் ஒய்யாரமும் சேர்ந்து ஒசியுமானால்..

பிரமித்துப் போனார் அதுவரை பிடரி சிலிர்த்து எதிர் பார்த்த அரிமாவன்ன அரசபெம்மான் புலிகேசி.

அவள் இன்னமும் நின்று கொண்டேயிருந்தாள்.

''சக்கரவர்த்தி என்னைக் கடத்தி வரக் காரணம்?''

ஆயிரம் நரம்புகளைப் படைத்த மகர யாழ் எங்கோ கேட்பது போல...

தம் நிலையுணர்ந்தார் புலிகேசி.

''என்ன கேட்டாய் பெண்ணே?''

''என்னை ஏன் கடத்தி வர வேண்டும்?''

''கடத்தி வந்தார்களா? மரியாதையுடன் அழைத்து வரவில்லை?''

''முதலில் மரியாதையுடன்தான் அழைத்தார்கள். நான் வர மறுத்தேன். கடத்தி வந்தார்கள்.''

''அவர்கள் சார்பில் நான் மன்னிப்பு கேட்கிறேன்.''

''சக்கரவர்த்தியா? என்னிடம் மன்னிப்பு கேட்பதா?''

''ஏன் கேட்கக் கூடாது? நான் உன்னைக் காதலிக்கிறேன். காதலுக்குச் சக்கரவர்த்தியும் ஒன்றுதான்; சக்கரம் செய்பவனும் ஒன்றுதான்! பெண்ணே உன் பெயர்!''

அவள் 'காதல்' என்ற சொல் கேட்டு அசையாச் சிலையாகி கணங்கள் பலவாயின.

அந்தப் பொற்சிலையைக் கண்டு பூரிக்கிறார் புலிகேசி.

ஆ! அழகுக்கு அழகு செய்யும் அழகி இவள். இருபத்து ஐந்து வயது மதிக்கலாம். ஓவியத்தில் கண்டதை விட ஒரு சுற்றுப் பருமன். ஆனால் ஓவியத்தில் கண்ட அதே பாவை இங்கே ஒசிந்து நிற்கிறது.

''என்ன பெண்ணே மௌனம்?'

''......''

''உட்கார்ந்தே சிந்திக்கலாமே''?

''உட்கார்ந்தால் ஒப்புக் கொண்டேன் என்றல்லவா அர்த்தம்?''

மனத்தில் எங்கோ இடியோசை ஒப்புக் கொள்ள வில்லையா?

''ஏன் பெண்ணே? எனது வயது...''

''காதலுக்கு வயது முக்கியமல்ல; காதலுக்கு காதல்தான் முக்கியம். சில சமயங்களில் அதற்கு அழகுகூட முக்கியமல்ல; இதயம்தான் முக்கியம். அந்தஸ்து கூட முக்கியமல்ல; ஆத்மாதான் முக்கியம்''

என்கோ பளீர் எளீர் என்ற மின்னல்கள்...

''ஆமாம் சக்கரவர்த்தி பெருமானே; நாம் எங்கே சந்தித்தோம்? எப்படிக் காதலித்தோம்? புரியவில்லையே;

புரியாத தடுமாற்றத்திலிருந்து விமுபட்ட புலிகேசி, அஜந்தா தலைக்குகைச் சித்திரத்தைக் கண்டு நேசித்த, விசுவாசித்த நிலையைப் பிட்டுப் பிட்டு வைத்தார். அந்த ஓவியம் திடுமென்று அங்கே உதயம் கண்டது பற்றி அதிசயித்தார். அன்று ஏற்பட்ட காதல் இன்று வரை தணியவில்லை என்ற தாகம் கொண்டவர் போன்று தவித்தார். முடிவில் உனது அழகு அள்ள அள்ளக் குயைாத அமுதசுரபி என்று வருணித்து வாய் மூடி உதடுகளை நாவால் நீவிக் கொண்டார். அவளைப் பற்றிப் பேசியபோது உதடுகளும் இத்தனை போலும்!

ஓ... அவரது ஆண்மை நிறைந்த முகத்தில்தான் எத்தனை ஏமாற்றம் நிறைந்த சோகப் படர்வு சுருக்க நெளிவு?

அவள் ஒருவாறு தெரிந்து தெளிந்து விரக்தியின் விவேகச் சுளிப்புடன் பெருமூச்சு கண்டாள்.

''சக்கவர்த்தி! இதற்கு நான் எப்படிப் பொறுப்பாக முடியும்? ஒரு தலைக்காதல் உருப்படாது என்பார்கள். இது உருப்படும் என்கிறீர்களா?''

''நீ மனம் வைத்தால்''

''நான் ஒரு கருத்தை விவாதிக்கலாமா?''

''பூரண உரிமையுண்டு''

''பூரண உரிமை. இந்தச் சொற்களுக்காக மகிழ்கிறேன். நன்றி கூறுகிறேன். வாதாபி பெருமானே! அஜந்தா குகையில் இருக்கும் எனது ஓவியத்தை நானும் பார்த்தேன்.''

''யார் தீட்டியது? அதுவும் என் அனுமதியில்லாமல்?''

''எனது சித்திரத்துக்குப் பக்கத்தில் ஓர் இளைஞன் சித்திரமிருப்பதைக் கவனித்திருப்பீர்களே!''

''கவனித்தேன்; கவனித்தேன்.''

''அவர்தான் தீட்டி இருக்க வேண்டும்!''

யாரவன்!

''எனக்கே தெரியாது; நான் தற்செயலாக அஜந்தா அழகை ரசிக்கச் சென்றபோது என்னையும் ரசித்தேன். எனது அழகைத் தூரிகையில் தொட்டுவிட்ட அவரையும் ரசித்தேன். அவரைத்தான் தேடியலைந்து கொண்டிருக்கிறேன்.''

அதிர்ச்சியடைந்து போனார் அரிமா நெஞ்சர் புலிகேசி.

''உன் பெயரைக் கேட்டேனே''

''நான் உங்கள் காதலையே ஏற்கவில்லையே''

''நீ ஏற்க மறுக்கலாம். நான் என்றைக்கும் எந்த நிலையிலும் உன்னையே ஏற்க நினைக்கிறேன். நான் சக்கரவர்த்தி! புனிதமறிந்த புலிகேசி! உன்னை அடைவது என்பது ஒரு சிட்டுக்குருவியைப் பிடித்துப் பிழிந்து தூக்கி எறிவது போல! நான் காமவயப்பட்டு உன்னை நேசிக்கவில்லை; காதல் வயப்பட்டு நேசித்தேன்; பூசித்தேன்; இன்னமும் பூசித்து வருவேன். இப்போது உன் பெயரைச் சொல்வாயா?

''மந்தாகினி''

''வானகங்கை என்ற அர்த்தத்துக்குரியவளா? மந்தாகினி! உன்னை ஓவியம் வரைந்த சைத்திரியனை நீ காதலிக்கிறாயா?''

''அவர் யார் என்பதே எனக்குத் தெரியாதே! என்னை எங்கோ பார்த்திருக்க வேண்டும். கண்ணளவில் காதலித்து இருக்க வேண்டும்.காடு மலை தாண்டி தேடியிருக்க வேண்டும். கிடைக்காமல் போகவே தனது தாகத்தை அஜந்தாவில் ஓவிய ரூபத்தில் தீட்டியிருக்க வேண்டும். பக்கத்தில் அவரையும் வரைந்து ஆசை தீர்த்துக் கொண்டிருக்க வேண்டும். இப்போது சொல்லுங்கள். அந்தச் சைத்திரியன் தானே எனது முதல் காதலனாக இருக்க முடியும்? பிறகு தானே நீங்கள் என்னை சித்திர வடிவில் கண்டு ஜீவனைப் பறி கொடுத்து இருக்கிறீர்கள்''

வெகு நேரம் தாடையைத் தடவியவாறு சிந்தனையில் மூழ்கிப் போனார் புலிகேசி. அறுபது வயதிலும் ஆண்மைக் கம்பீரம். அவளை வசீகரிக்கத்தான் செய்தது. அவளைச் கண்டவன் ஓவியனானாலும் இவளைக் கண்டவர் இணையிலா புலிகேசியல்லவா?

இறுதியில் வாதாபி சக்கரவர்த்தி என்ன நினைத்தாரோ..

''மந்தாகினி! நீ கோபலாம்; நீ யார் எவள் என்கிற சரித்திரத்தைக் கூட நான் அறிய விரும்பவில்லை. நீ முழு உரிமையுடன் புறப்படலாம். எந்த நருமதை ஆற்றங்கரையில் உன்னைக் கண்டார்களோ அங்கேயே கொண்டு போய் விட்டுவர உத்தரவிடுகிறேன்.''

எழுகிற போதும் ஒரு கம்பீரத்துடன் எழும் புலிகேசி, ஏனோ எழ முடியாத ஒரு தளர்ச்சியுடன் தள்ளாடி எழுந்தார். பெருமூச்சு அவரது முகத்தில் பேரதிர்ச்சியாய்ப் பரவியது.

மந்தாகினியின் நெஞ்சில் புலிகேசி சற்றே புன்னகை புரியத்தான் செய்தார். அவளுள் ஓர் இரக்கம். பரிதாபம். மெல்லிதான் காதல்.

''சக்கரவர்த்தி! உண்மையில் தங்களை நான் நேசிக்கிறேன். என் அழகின் பால் மரியாதை கொண்டு அர்ச்சித்து வந்ததை மறக்க மாட்டேன். நான் அந்த ஓவியரைத் தேடியலைவேன். கிடைக்காவிட்டால் தங்கள் இதயத்தைப் பூர்த்தி செய்ய வருவேன். தங்கள் நெஞ்சின் ஓவிய் பாவையாவேன்!''

அவள் கால்தண்டை கணீர் என்று ஓசையெழுப்ப நடந்தாள்.

அப்போது அவளது மனம்...

ஓ.. எப்பேர்பட்ட காதல் பண்பு நிறைந்த சக்கரவர்த்தி! நினைத்திருந்தால் நினைத்ததைச் சாதித்து இருக்க முடியாதா? ஆ! இது வல்லவோ பேராண்மை! என்று பெருமிதம் கொள்ளவும் செய்தது.

ஓராண்டு.. ஈராண்டு..மூன்றாண்டு...

அப்போது ஓவியப்பாவையைத் தேடியலைந்தார்; இப்போது ஓவியத்துக்குரிய ஒண்டொடியாளை எதிர் பார்த்து அலைகிறார்.

ஓ... மந்தாகினி

சீ! இனியும் அஜந்தா குகையில் அந்த ஓவியம் இருப்பதாவது? நெஞ்சை நெருடி நெருப்பாக்குவதாவது?

அன்று மாலை பரிவாரங்களுடன் அஜந்தா மலைக் குகை நோக்கிப் பயணமானார். தேவையா அந்த ஓவியம்?

உள்ளத்தில் ஆத்திரம் பொங்கு மாங்கடலாகப் பொங்கி கரை புரண்டது. தேவையா அந்த ஓவியம்? அழித்து விட வேண்டாமா?

அந்த மலைச்சரிவில் சென்று ஓவியத்தைப் பார்வையிடுகிறபோது..

மலைத்துச் சிலைத்துப் போனார் மாவீர புலிகேசி.

மந்தாகினியின் சித்திரம் மட்டுமே இருந்தது. பக்கத்திலிருந்த இளைஞன் சித்திரம் துப்புறவாக அழிபட்டுக் காணப்பட்டது. இதன் அர்த்தம்?...

நான் வருவேன் என்கிற அர்த்தமா? அழித்தவள் மந்தாகினிதானா?

சித்திரத்தை அழிக்கச் சென்ற புலிகேசி சிந்தனையுடன் திரும்பலானார். ஓ.. எப்படியும் இசைந்து வருவாள்!

நாட்கள் மாதங்களை விழுங்கிக் கொண்டுதான் இருக்கின்றன.

வாதாபிச் சக்கரவர்த்தி அவளது வருகையை எதிர் பார்த்துக் காத்துக் கொண்டுதான் இருக்கிறார். வருவாளோ?

**- 1992**

# மகாகவிஞன்

மாவீரப் போர் வெறியனான மங்கோலியர் தலைவன் குப்ளேகான் அரண்மனை இடியக் கர்ஜிக்கிறான்.

''எல்லார் தலைகளையும் சீவி எனது காலடியில் போட்டவர்களுக்குக் கேவலம் வெண்தீன்-கியாங்கைப் பிடிக்க முடியவில்லையா? அப்படி என்ன வீர சாகசம் காட்டுகிறான் அவன்?''

வரிசை கட்டிநின்ற வீரர்களும், வீரத்தலைவர்களும் வாய் பொத்தி நிற்கிறார்கள்.

''நான் கத்துவது உங்கள் காதுகளில் கேட்கவில்லை?''

பிடரி சிலிர்த்த சிங்கம் போல் இங்கு மங்குமாக உலவிக் கவனிக்கிறான் மங்கோலிய மாமன்னன் குப்ளேகான்.

ஒரு மருங்கே தேவதைகளுக்கெல்லாம் தேவதை போல் தேவதா செளந்தரியத்திருமேனி கொண்ட இளவரசி, ஹூவா, புஷ்பமனைய கண்களின் புருவங்களை நெளித்து கவனிக்கிறாள். அவளது பெயரின் அர்த்தமே புஷ்பம். அவளே புஷ்பம்; அவளது கண்களும் பூவாய் மணப்பதில் என்ன வியப்பு?

அவள் சீனப் பெரு நாட்டின் ஒரு நந்தவனத்தில் பிறந்ததால், மாமன்னன் குப்ளேகான் சீன மொழியிலேயே (புஷ்பம்) ஹூவா என்று பெயரிட்டான் போலும்! அவனது எத்தனையோ மனைவிமார்களின் எத்தனையோ பெண்களில்

அவளும் ஒருத்தி. ஆனால் அழகின் முகவரி எது என்று அழகிடமே போய் கேட்டால், அது ஹூவாவின் விலாசத்தையே வெளிச்சமாகப்பிரகடனம் செய்யும். அப்பேர்பட்ட பேரழகி ஹூவா. எனவே தந்தையின் மரியாதை மிக்க வீர மடியில் அவளுக்குத் தனியாக இடம் இருந்தது.

யார் அந்த வெண்தீன் -சியாங்?''

குப்ளேகான் மேலும் கர்ஜித்துக் கேட்கிறான்.

வீரத்தலைவர்கள் மூலம் கேள்விப்பட்ட மங்கோலியப் பேரமைச்சர், மெல்ல வாய் பொத்திச் சொன்னான் ''சக்கரவர்த்தி பெருமானே! சுங்கவமிசத்துத் தலைநகரான ஹாங்செளவைப் பிடித்த நமத வீரர்கள் அந்த வமிசத்து வாரிசுகளான அரச இளைஞன் வன்குங் தீ என்பானையும், அவனது தாயாரையும் சிறை பிடித்த நமது வீரர்கள் அவர்களது மாபெரும் படைத்தலைவனும், வீரப் புதல்வனும்மான சியாங்த்ஸையை வீழ்த்திய நமது வீரர்கள், இவனை மட்டும் உயிருடன் பிடிக்க முயல்வது இவன் ஒரு மாவீரன் மட்டுமல்லன் மகா கவிஞன்; சீன மொழியால் இவன் உயர்ந்தான் என்பதைவிட இவனால் சீன மொழி சிறப்புப்பெற்றது. அப்பேர்பட்ட மகாகவிஞனை உயிருடன் பீடித்து வருமாறு நான்தான் ஆணை பிறப்பித்து இருக்கிறேன். எனவே தான் கால தாமதம்.

கடகடவென்று பெருநகை எழுப்பினான் குப்ளேகான்.

கவிஞனாவது? கழுதையாவது? அவனை வெட்டி வீழ்த்தி அவனது தலையைக் கொண்டு வாருங்கள்.

மூர்க்கமான ஆணை மங்கோலியர்களின் முதல் அத்தியாயமே மூக்க்கத்தனத்திலிருந்து தானே ஆரம்ப மாகிறது.

விருட்டென்று எழுந்துநின்றான் ஹூவா. அப்போது அவள் அனிந்திருந்த பொன்னாபரணங்கள் சீன மொழி போல் இனிமையாய் இசைத்தன.

''அப்பா! அந்தக் கவிஞனை உயிருடன் நான் பார்க்க வேண்டும் சீனர்கள் நமக்கு எதிரிகள். அவர்களது இன்மொழி நமக்கு உடன்பாடுதானே? அந்த மொழிக்குரிய மகா கவிஞனை வெட்டி வீழ்த்துவதாவது?''

''உனக்கேன் அவன்?''

பூவாய் சிரிக்கிறது அந்தப் பூ.

''எனக்கு விளையாட நல்ல பொம்மை இல்லை. அந்தப் பொம்மை சிறந்த பொம்மை; பேசும் பொம்மை கவிதை பொம்மை என்று நினைக்கிறேன்.

அதிர்ந்து போனான் மங்கோலிய மாமன்னன் குப்ளேகான்.

மகளின் இந்த மறுமொழிக்கு மறுப்பேது?

சீன வரலாற்றிலேயே கொடுமைமிக்க ஓர் அத்தியாயம் இந்த மங்கோலியர்கள் அத்தியாயம்தான். தமிழ் வரலாற்றில் களப்பிரர்களைப் போல வடக்கு வரலாற்றில் ஹூணர் களைப் போல.

மங்கோலிய மாமன்னனின் பாட்டன் ஜெங்கிஸ்கான் என்றால் அந்நாளில் கி.பி.பதிமூன்றாவது நூற்றாண்டில் உலகமே அஞ்சித் செத்தது என்றால் இவை அதிகப்படியான சொற்கள் என்று சொல்லவிட முடியாது. ஒரு சாதாரண டெமுஜின் என்ற பெயர் கொண்ட வீரவெறியன் ஜெங்கிஸ் கான். அவனது மண்வெறி உலக வரலாற்றிலேயே உலுக்கல் நிறைந்த படலமாகும்.

சீன நாட்டை எப்படியெல்லாம் ஆட்டிப் படைத்துக் கைப்பற்றினான் இப்போது.

அவனது பேரன் குப்ளேகான் சீன சாம்ராஜ்யத்தையே ஒரு குடை நிழலுக்குக்கொண்டு வரமுயன்று முக்காலுக்கும் மேலே வெற்றி கண்டு வீரகர்ஜனை எழுப்பி, 'கான் பலீக் ' என்ற புதிய தலை நகரைப் படைத்துச் செம்மாந்து நிற்கிறான்.

முக்காலுக்கு மேல் என்று சொன்னது அடிபணியாமல் போராடி வந்த வமிசத்தை வைத்துத்தான் சுங்கவசமித்து அரசனையும் சிறை செய்தாய்விட்டது. ஆனால் சீன ரத்தத்துக் குரிய சுயமரியாதை மிக்க தலைவர்களைச் சிறை பிடிக்க முடியவில்லை. போராடிப் போராடி அனைவரையும் வீழ்த்தி எஞ்சி நிற்பவன் வீரமா கவிஞன் வெண்தீன்சியாங் தான்.

இந்த மாவீரனும், மாககவிஞனுமான சியாங் ஒவ்வோர் இடத்திலும் போராடித் தப்பி வந்தவன். இறுதியில் குவாண்டுங் என்னும் பிரதேசத்தில் மங்கோலியரிடம் பிடிபட்டு விட்டான்.

இளவரசியின் ஆணையாயிற்றே! எனவே அவனுக்குச் சகல மரியாதைகளையும் வழங்கிக் கான்பலீக் தலைநகருக்கு அனுப்பி வைத்தார்கள்.

**அ**ன்று அரண்மனையே நிரம்பி வழிகிறது.

பிடிபட்டவன் சுங் வமிசத்தைத் தளபதியாயிருந்தால் யாருக்கு என்ன கவலை?

சிங்காரச் சீன மொழியின் ரீங்காரக் கவிஞனாமே சியாங்.

மங்கோலியக்கள் எந்தக் கவிஞனைக் கண்டார்கள்? எந்த இலக்கியத்தைப் பார்த்தாரகள்? அவர்களுக்குத்

தெரிந்தது மாவீர மிக்க முரட்டுத்தனமும் மூர்க்ககூத் தனமமும்தானே இவைதானேம மூலதனம்!

போரில் ஒரு வீரனுக்குத் தாகம் ஏற்பட்டுவிட்டால் குதிரையின் அங்கத்தின் ஒரு பகுதியில் கத்தியால் குத்தி, பீரிடும் ரத்தத்தையே வாய் வைத்து உறிஞ்சி தாகச்சாந்தி செய்து கொள்பவர்கள்தாமே எனவே ஒரு வீரனுக்கு மூன்று குதிரை பலமிருந்ததாக வரலாறு பேசுகிறது.

ஓ... கவிதை புனையும் கரங்களிர் விலங்கா?''

காணக்கான ஹூவாவின் மலர்க்க கண்களில் பனித்துளிகள்.

''அப்பா விலங்கை அகற்றுகங்கள். நாம் வீரத்துக்கு விலங்கிடலாம். அது அரசு நாகரிகம். ஆனால் கவிதைக்கு விலங்கிடக் கூடாது. இது அநகாகரிகம்.''

சீன யாழின் 'நகர்கர' ஓசைபோல இனிதாக ஒலித்த குரலுக்ஹகுடைய அழகின் கோமகளைக் கண்டு வியந்து நோக்குகிறான் சியாங்!

ஓ.. இவன் குப்ளேகானின் குமாரத்தியோ? கவிதையுள்ளம் இங்கிருந்து மங்கோலிய வமிசத்துக்கு ஆரம்பமாகிறதோ?

மகளின் வேண்டுதலைக் கேட்டு விலங்கை அவிழ்க்க உத்தரவிடுகிறான் மங்ஙகோலிய மாமன்னன்.

விலங்குகள் விடுபடுகின்றன.

என்ன விசாரிப்பது? எதை விசாரிப்பது? தெரிந் தெல்லாம் சிரச்சசேதம் ஒன்றுதானே? எனவே அன்புமகளை நோக்குகிறான்.

''ஹூவா இவனை நீயே விசாரிக்கலாம். நீயே தண்டிக்கலாம். ஏனென்றால் இவன் உனக்குரிய பொம்மை

ஹூவாவுக்கு பெருமைதாங்க முடியவில்லை.

'உங்கள் பெயர்?''

''வென்தீண் சியாங். சுங் வமிசத்தைச் சுயமரியாதை மிக்க வீரன். அந்த இனம் என்னோடு அழிவதில் சிறுமைப் படுகிறேன். ஏனென்றால் மற்றவர்களை மங்கோலிய வீரர்கள் கொன்றனர். என்னைக் கொல்லப் போகிறவர் மங்கோலிய வெறி பிடித்த வேந்தரல்லவா?''

''நான் பெயரைத்தான் கேட்டேன்; பூராயத்தையா கேட்டேன்?''

''ஒவ்வொன்றாக ஏன் பதில் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். பூராவையும் சொல்லி விடலாமே என்று தான்.''

''இது பூராகவுமில்லை, சீராகவுமில்லை. கேட்க வேண்டிய கேள்வி களுக்கு சொல்லவேண்டிய பதில்கள் நிறையவே இருக்கின்றன!''

''அவசியமே இல்லை, எனக்கு மரண தண்டனை விதிக்கலாம்!''

''உங்கள் காவிய உள்ளம் கத்தி முனையில் துண்டுபட இங்கு எவரும் விரும்பலாம்; ஆனால் நாம் விரும்பவில்லை கவிஞரே!''

'' காரணம், நீங்கள் என்னை விரும்புகறீர்கள்!''

''நீங்கள் கவிஞர்தானே?''

''நான் எனது சுங் வமிசத்தை அரசர் வன்குங்தீயைத்தவிர வேறு எவர் பாராட்டுதலையும்

எதிர்பார்க்கவில்லை. மூர்க்கத்தைத்தவிர வேறு எதையும் அறியாது நீங்கள் கவிதையைப் பற்றி பாராட்டுவதா?''

''கவிதை எங்களுக்குச் சொந்தமில்லையா?''

''இதுவரை கிடையாது''

''இப்போது நீங்கள்தாம் மூர்க்கமாகப் பேசுகிறீர்கள். நீங்கள் சாகவா உயிருடன் பிடித்து வர ஆணையிட்டேன். நீங்கள் எங்கள் அவையில் சேனாதிபதியாகவும் அதே நேரத்தில் அரசவை கவிஞர்ராகவும் இருக்கலாம்.''

கெக்கலி கொட்டிச் சிரிக்கிறான் கவிஞன் சியாங்.

''ஏன் இந்தச் சிரிப்பு?''

''நான் ஜாதிக் கவிஞன் மட்டுமல்லன்! ஜாதி வீரன் மட்டுமல்லன், ஜாதி சீனன். ஆகவே நான் இரண்டு எஜமானர்களுக்குச் சேவகனாக இருக்க முடியாது. அதுவும் மங்கோலிய மடையர்களுக்குச் சேவகம் புரிய முடியாது.''

கவிஞன் சியாங் இவ்விதம் கூறிய அடுத்த கனம்.....

''இவனைச் சிறையில் தள்ளுங்கள், சித்திரவதை நிறைந்த சிறையில் தள்ளுங்கள். என் மகள் என்றைக்கு மரண தண்டனை தருகிறாளோ, அல்லது இவன் மனம் மாறி திருந்துகிறானோ, அது வரை சிறையில் அணுஅணுவாகத் தவிக்கட்டும்!''

பேய்போல கத்துகிறான் மங்கோலிய மாமன்னன் குப்ளேகான்.

**சு**ங் வமிசத்து இனிய சூத்திரம்-எழில் மிக்க இலக்கிய மேதை ''சிறைச்சாலை எனக்குச் சிங்காரச் சோலை'' என்று சிறை புகுந்தான் கவிஞன் சியாங்.

மூன்றாம் நாள்.....

சியாங்கைக் கவனிக்கச் சிறைச் சாலைக்கு வருகை தருகிறான் ஹூவா.

ஹூவாவின் மகத்தான் பேரழகுக்குமுன் சியாங்கை ஒப்பிட்டுச் சொன்னால் ரோஜாவுக்கும் முன்னால் வேலிக்காத்தானைப் போல. ஆனால் சியாங்கின் கவிதைக்கு முன்னால் ஹூவா தாமரைக்கு முன்னால் ரோஜா போல. சீனக் கொலுசு சிணுங்க வந்து நிற்கிறாள் ஹூவா.

''கவிஞரே! சௌகரியங்கள் எப்படி?''

''சிங்கமே சௌகரியம் எப்படி என்று கேள்!''

சியாங்கின் கண்களில் சிங்கங்கள் இரண்டு எட்டிப் பார்க்கின்றன்.

ஹூவாவின் மார்பகத்தில் ஒளிந்து கொண்டிருந்த குறுமுயல்கள் நெளிந்து அந்தச் சினத்தை தவிர்க்க முயலுகின்றன. அவ்வாறு முயலுவதால் அவற்றை முயல் என்று கூற முடிந்ததோ?

''நான் சிங்கம் போன்ற உங்கள் வீரத்தை விசாரிக்கவில்லை. அவ்வாறு விசாரிப்பதால் எப்போதோ உங்களை குவாடுங் பிரதேசத்தில் பிடிபட்டாலும் கேவலம் கழுகுகளுக்கு விருந்து வைத்திருப்பார்கள். கவிதையை கழுகுகள் உண்பதா என்பதால் கோபுரத்துக்கலச மரியாதை கொடுத்து அழைத்து வரச் செய்தேன். இங்கே ஒரு தேவதா சௌந்தரியத்துக்குரிய கலசங்களைப் புரிந்து கொள்ளாததால் சிறையில் சிந்திக்க வைக்க நேர்ந்திருக்கிறது..?''

ஓ... இவளும் ஒரு மங்கோலியக்கவிதைக்குரிய அழகுடன் பேசுகிறாள். அவன் மௌனமாய் கவனிக்கிறான்.

''ஏனிந்த மௌனம்? மௌனத்தை விடச் சிறந்த கவிதை மன்மதக் கவிதை! புரியவில்லையா?''

''குழந்தைக்குப் புரிகிற கவிதை நீங்கள் பேசுவது! பெண் கவிதையே! நீங்கள் அழகுக் கவிதை! இதனையும் நானறிவேன்!''

''பின் ஏன் தயக்கம் பிரபோ! இப்படிச் சிறையிலும் கேடு கெட்ட சிறையில் நீங்கள் சித்திரவதையாக வாட வேண்டுமா?''

''நான் சிறையிலிருக்கிறேனா? எனது சிந்தனை பூமிக்கும் ஆகாயத்துக்குமாக விசுவரூபம் கண்டிருக்கிற போது இது குறித்து நான் கவலைப்படுவதாகத் தெரிய வில்லை.''

''என்னை ஏன் வெறுக்கிறீர்கள்?''

''உன் தந்தையை வெறுப்பது போல! இருவருக்கு என்னால் எப்படி சேவகனாக இருக்க முடியாததோ அப்படியே இரண்டு பேருக்கு நான் கணவனாக இருக்க முடியாது.''

''கணவனாக வேண்டாம்; காதலனாக இருங்கள்!''

''பதவிதான் வேறேயொழிய அமரும் ஆசனம் ஒன்றுதானே? மேலும் இது மங்கோலிய ஆசனம்! எங்கள் சீனகுலத்து கடைசி வேரையும் கிள்ளி எரிய வந்த இனம்! ஹூவா; எங்கள் இனிய சீன மொழியிலேயே நீ பெயர் பூண்ட புஷ்பமானதால் பேச அனுமதித்தேன். இதுவரை பேசிக் கொண்டுமிருக்கிறேன்! ஆனாலும் இந்தப் புஷ்பத்தில் வீசுவது மங்கோலிய மணம். அதனை ஒரு ஜாதிக் கவிஞன் நுகர மாட்டான்; போய்விடு!''

''ஆ! பேச்சிலும் கவிதை மணக்கிறதே!''

''இதுதான் உங்கள் முடிவா?''

''என் சீனச் சின்னத்தின் மீது ஆணை! உன் சிரிப்பைக் கூட என்னால் ரசிக்க முடியாது. போய் விடு!''

''அவள் மனம் குமுறிப் புறப்படுகிறாள். பெருமூச்சால் முயல்கள் பலவீனமாகின்றன.

''உங்களுக்குத் தேவைதான் என்ன?''

''மரணம்!''

பளிச்சென்று அவன் சொன்ன பதில் அவனை ஒரு சுத்த வீரனாக காண்பித்தது.

அந்தச் சீன யாழ் சோக ராகத்துடன் நகர்ந்தது.

உஹூவா இன்னமும் எதிர்பார்க்கிறாள். ஆண்டுகள் இரண்டு கால தேவனின்பற்களில் கடிபட்டு ஜீரணமாகியும், எதிர்பார்க்கிறாள். 'எனக்கு மரணம் வேண்டாம்; என்னை மனத்தால் புணர்ந்து கொண்டிருக்கும் ஒஹூவா வேண்டும்' என்று ஒரு நாளைக்கு சொல்லியனுப்ப மாட்டானா என்று இன்னமும் எதர்பார்க்கிறாள்.

ஆனால் கவிஞன் வெண்தீன் சியாங், அந்தப் பாழடைந்த சிறையில் தவத்தை மேற்கொண்டு அவத்தை அலட்சியப்படுத்தி வந்தான்.

மங்கோனிய மாமன்னன் குப்ளேகான், எவ்வளவோ பெயர்கிடையே எத்தனையோ சாமதானங்களைக் கூறித் தூது அனுப்புகிறான்.

சிபாங் சிந்தனையில் அவையாவும் மங்கோலிய முதல் அழுக்கான ஜெங்கிஸ்கான் பாதம் பட்ட நாள் முதல் இன்று வரை படர்ந்து துர்நாற்றங் கண்டுவிட்டதே! சீ!....

ஒரு துயதான தேச பக்தியும், ராஜபக்தியும் உள்ள ரத்தம் எதைச் சிந்திக்குமோ அதைச் சிந்தித்தது. எனவே குப்ளேகான் தூது மூலம் சொள்ளியனுப்பிய சமாதானச் சொற்களைச் துச்சமாக மதித்தான். அங்கீகரிப்பதற்கு மாறாக அலட்சியப் படுத்தினான்.

மேலும் ஓராண்டு காலக் கணக்கில் கரைந்தது. அந்தச் சிறைவாசம் குறித்து கவிஞன் எழுதுகிறான்.

இதுவரை...

**ஆயிரம் சூரியன்கள் கிழக்கை**
**ஆராதித்து விட்டன!**
**ஒரு சுடரையும்**
**பார்த்தறியேன்!**
**எனக்கு**
**வெளிச்சம் மறந்துவிட்டது!**
**என்மூச்சே**
**எனக்குக்காற்று!**
**சிறைக்கு வெளியே**
**பனிப்போர்வை!**
**தரையில் விரித்தது**
**ஈரம்! அதுவே என் படுக்கை!**
**இறந்துவிட எண்ணுகிறேன்!**
**இயலவில்லையே!**
**எத்தனை நோய்கள் என்னிடம்?**
**எனக்கே தெரியாது!**
**கணக்கு வைக்க**
**கவனம் செல்லவில்லை!**
**துரதிர்ஷ்டத்தையும்**
**துச்சமாகவே மதிக்கிறேன்!**

**காரணம்...**
**ராஜ பக்தி! தேசபக்தி!**
**எனது**
**ராஜ்யத்தின் வெண் மேகங்களே!**
**எல்லையிலா ஆகாயமே!**
**எனது துக்கத்தை**
**உங்களிடம் ஒப்படைக்கிறேன்**

**... கவிஞன் வெண்தீன்சியாங்**

*சிறையில் எழுதிய சிந்தனை இது.*

*ஒருநாள்......*

*மங்கோலிய மாமன்னன், கவிஞனை அரண்மனைக்கே அழைத்து வருமாறு ஆணையிடுகிறான்.*

*சீன சாம்ராஜ்யத்தையே ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து விட்ட குப்ளேகான் முன் வந்து நிற்கிறான் வீரக் கவிஞன் சியாங்.*

*களம்பல கண்ட அந்த வீரக்களை எங்கே? கனத்துத் திரண்ட தோளெங்கே? உளம் பல மயக்கும் உருவமெங்கே? உருக்குவைந்துபோன இவன் எங்கே?*

*சீனத்தைப் பாடும் சிங்காரக் கவிஞன் மானத்தைக் காத்து மங்கோலியர் முன் நிற்கிறான்.*

*அந்த மோனத்தை, சுயமரியாதை மோகத்தை என் சொல்ல? என் சொல்ல? -- என்று மனத்தளவில் துடிக்கிறாள். மார்பளவில் துவள்கிறாள், மல்லிகைப் பூங்கொத்து போன்ற ஹூவா.*

''வீரனே! வியத்தகு கவிஞனே! மூன்றாண்டுகள் வரை பொறுத்திருந்து என் மகள் ஹுவாவுக்காக! உனக்கு என்ன தான் வேண்டும்? கேள்?''

''சீன சாம்ராஜ்யம்''!

''அது முடிந்து போன கதை!''

''என் கதையும் முடிந்து போனது! நீங்கள் இரக்கமுள்ளவராக இருப்பின் மரணத்தைக் கொடுங்கள்!''

குப்ளேகான் தனது மகளை நோக்குகிறான்.

ஹுவாவின் தலை குனிந்து கொண்டது. கண்களில் பெருகிய நீர்த்துளிகள் அவளது கால்களில் சிந்தின. அவளது கண்ணிராலேயே அவளது கால்களைக் கழுவிக் கொள்கிறான் போலும்!

குமுறிப் போனான் குப்ளேகான்.

''இவன் கேட்ட மரணத்தை இவன் விரும்புகிறவாறு கொடுத்து அனுப்புங்கள். இதுவே இவன்பால் காட்டும் இரக்கம்!''

மன்னன் ஆணையை நிறைவேற்ற மங்கோலிய வீரர்கள் அவனை இழுத்துச் செல்கிறார்கள்.

அவை என்றும் பாராமல் அலறுகிறாள் ஹுவா.

மங்கோலியச் சரித்திரத்தின் மானுடத்தைக் கற்பித்தவன் இவன்!

ஓ... தேசபக்தியை உபதேசத்தவன் இவன் என்று குமுங்கிக் குமுங்கி அழுகிறாள் ஹுவா. அது மட்டுமா?

அவன் யாசித்த மரணத்தையும் எவ்வாறு ஏற்கிறான் என்பதைப் பார்க்கபின் தொடருகிறான்.

சிரத்சேதம் செய்யும் ரத்த பீடத்தை நெருங்கி நின்றான் சியாங்.

அவன் விரும்பியவாறு மரணத்தைத் தர வேண்டுமே!

''மேற்குத் திசை எது?'' என்று கையில் கனத்த கத்தியுடன் நின்றை காவலர்களை நோக்கி கேட்கிறான் சியாங்.

''ஏன்?''

''அங்கேதான் எனது ராஜ்யம் இருக்கிறது. எனது சுங் வசமித்து மூச்சும் பேச்சும் இருக்கிறது. எனது சக்கரவர்த்தி ஆண்ட சிம்மாசம் இருக்கிறது. எது தென் திசை?

ஒரு கொலையாளி திசையைக் காட்டுகிறான்.

அந்தத் திசைப் பக்கம் திருப்பி கண்களை மூடித்தியானித்து அதே திசையை பார்த்து அமருகிறான்.

ஒரே வெட்டு....

சியாங்கின் தலை தென்சிசை நோக்கி உருண்டு சென்று விழுந்தது.

கவிஞனின் உதடுகள் கடைசியாக முறுவவிக்கிறான். அதிலும் சீனத்து பெருமை விரிந்தது. அருமை தெரிந்தது.

ஹூவா மருண்டு மலைத்து வின்றுவிட்டாள். இவன் மகா கவிஞன் மட்டுமல்லன்; மகா மானுடன்! மகாவீரன்!.

*-1994*

# நிலாக் குளியல்

நிலவின் ஒளி மழையில் தில்லி மாநகரம் நித்திரையிலாழ்ந்தது. முகிலற்ற விண்ணரங்கை முத்தனைய நட்சத்திரங்கள் பண்ணரங்காக்கிப் பகட்டு ராகம் பாடின.

அந்தப்புரத்தின் மேல்மாடியில் நிலாக்குளியல் எடுத்துக் கொண்டிருந்தாள் ஆல்தமிஸ் பெற்றெடுத்த அழகு மகள் ரஸியா பேகம். சிறுமித்த தில்லி மாநகரை ஒருமித்துக் கொண்டு வர அவள் ஓயாமல் எடுத்துக் கொண்ட, பெருமித்த முயற்சியில் களைப்பு நீங்கத்தானோ என்னவோ பௌர்ணமி தோறும் அவள் நிலாக்குளியல் எடுப்பாள்.

பன்னீர் தெளித்து மணப்பது போல ஆங்காங்கு தோழியர்கள் நின்று காவல் புரிந்தனர். அழகு நிலவுக்கு நட்சத்திரங்கள் காவல் புரிவன போல!

சுவர்ப்பிடியின் ஒருமருங்கே பாடகி ஒருத்தி ரூப்கல்யாண் ராகத்தை இழையிழையாக நூற்று, இதமாக காற்றில் கலக்கச் செய்து கொண்டிருந்தாள்.

ரஸியாவின் செவிகளில் சங்கீதம் நுழைய வேண்டுமே! அவளுடைய பாறை நெஞ்சில், கலகம் விளைவித்து வரும் பணப்புள்ளிகளும், கண்ணி வைத்துக் காத்திருக்கும் தம்பி பஹ்மாமும்தாம் கொட்டமடித்துக் கொண்டிருந்தனர்.

யாரோ மாடப்படிகளில் வேகமாக ஓடிவருவதைக் கவனிக்கிறாள் ரஸியா. அந்தப் பகுதிக்கு ஆணாகப் பிறந்த எறும்பும் எட்டிப் பார்க்க அஞ்சும்.

தலைமைத் தோழி, சுமக்க முடியாத தனது பருத்த உடலைச் சுமந்த வண்ணம் ஓடோடி வந்து எதிரே நின்றாள். ''பேகம்...! தளபதி யாகூப், ஜனானாவின் வெளி வாயிலில் காத்துகக் கொண்டிருக்கிறார்''.

''ஏன்?''

''அவசரமாம், தனிமையில் சொல்லக் கூடிய ரசசியச் செய்தி என்கிறார்.''

இதற்கு மேலும் கேள்வியை நீட்டிக் கொண்டு போக ரஸியா விரும்பவில்லை. யாகூப்பின் கடமையுணர்வு என்ன என்பதை ரஸியா அறிவாள். நன்றியுணர்வுடனும் அறிவாள். அவள் இல்லையேல் இவளாட்சி என்றோ இடிபட்டு, அடிபட்டு பொடிபட்டுப் பொசுங்கிப் போயிருக்கும். அபிசீனிய அடிமையாக இருந்தவன். அவனுடைய வீரம் இன்று அவனைப் படைத் தளபதி என்ற நிலைக்குக் கொண்டு வந்து அவருக்கு நெஞ்சுரம் தரும் மருந்தாக இருக்கச் செய்தது.

முகிலனைய துகிலேந்தி முறுக்குத் தளரா பொன்மேனியை மூடியும் மூடாமலுமாக இறங்கி வந்தாள் அரசி ரஸியா பேகம்.

குதுப்மினாரை எழுப்பிய கோமகன் ஆல்தமிஸ்! அவருக்குப் பிறகு ஆன் வாரிசுகள் இருந்தும் பயனில்லை என்பதையுணர்ந்து ஆணுக்கும் அமலான அரிமாவை யொத்த பெண்ணான ரஸியாவுக்கு அரசுரிமை வழங்கிச் சென்றான் அந்தப் பேரரசன்.

குழப்பங்களுக்கும் குமுறல்களுக்கும் இடையே அறியனையேறிய ரஸியா, ஆட்சிக்குக் குறுக்கே நின்ற அமைச்சனை அழித்தாள். பின்னர் அரக்கர்களனைய ஆணவக்காரர்களை அழித்தாள். அர்த்தமற்று நாட்டைக் காட்டிக் கொடுக்கிற அகம்பாவிகளைப் . பழித்தாள்.

இத்துணைக்கும் உறுதுணையாக நின்றவன்-ஒரு போரில் அவள் உயிரையும் காத்தவன் தளபதி யாகூப்! அந்த நன்றி உள்ள விசுவாசி நட்டநடு இரவில் வந்திருக்கிறான் என்றால்...

கொஞ்சமும் மாற்றமின்றி அதே ஒப்பனையும் ஒயிலுமாக வந்து நின்றாள் ரஸியா. அவளைக் கண்டதும் மெய்மறந்து மருண்டு விட்டான் மாசேனைத் தலைவன் யாகூப்!

அவனுடைய உடலிலும் உள்ளத்திலும் இளமை. ஏன்? அவளுக்கும்தான்.

இளமை ஒளிர அவள் ஒயிலாக வந்து நின்றாள்.

''சொல்லுங்கள் யாகூப்?''

ரஸியாவின் நினைவில் அரசியல் நினைவே அப்போதைக்கு இருந்தது.

யாகூப்புக்குப் பேச்சு வரவில்லை. மீண்டும் ரஸியாவின் வாயிலிருந்து சொற்கள் உதிர்ந்தன.

''பேச்சுத்தான் வரவில்லை; மூச்சாவது வருகிறதல்லவா யாகூப்?''

தன்னிலைக்கு உணர்வை இழுத்துக் கொண்ட யாகூப், ''சுல்தானா! விவசாயிகளிடையே புரட்சியைத் தூண்டியிருக் கிறார்கள் கலகக்காரர்கள். இதன் விளைவு மதவெறியில் கொண்டு போய் விடும். பிறகு பிளவுக்கு வழிகோலி நாடு நலிவு காணும்.'' என்று படபடப்புடன் கூறினான்.

சற்றே கண்கள் நெளிய சிந்தனை. பிறகு ரஸியா கேட்டாள். ''தூண்டி விடுபவர்கள் யார்?''

''அவர்கள் யார் யார் என்று நான் கண்டுபிடித்து விட்டேன்'' என்று அவன் ஒரு பட்டியலை தந்தான்.

அதைப் படித்துப் பார்த்தாள். பதறாமல் நின்றாள். பிறகு கடுமையான குரலில் சொன்னாள்.

''பொழுது விடிவதற்குள் படைகள் ஆயத்தமாகட்டும். பொழுது மடிவதற்குள் புரட்சி அடங்கிவிடும்.

ரஸியாவின் உத்தரவு கர்ஜனையாக எழுந்தது.

தளபதி யாகூப் விடை பெற்றான்.

மீண்டும் ரஸியா என்ன நினைத்தாளோ, ''யாகூப்!'' என்று பெரிதாகக் குரல் கொடுத்தாள்.

திரும்பிச் செல்ல முனைந்த யாகூப், சற்றே திரும்பினான்.

ரஸியாவிடமிருந்து.

காந்தமனைய, கவர்ச்சியனைய, சாந்தமனைய அந்தப் பார்வை.

''இந்தாருங்கள்.''

ரஸியா தன் விவவில் இருந்த ஒரு வைர மோதிரத்தை எடுத்துக் கொடுத்தாள்.

''யாகூப் வெற்றி உங்களுக்குத் தான்'' என்றாள்.

அவன் மருண்டான். பின்னர், பணிவோடு பெற்றுக் கொண்டு நகர்ந்தான்.

அரசி ரஸியாவும் புன்னகை புரிந்து வெகு நேரம் யாகூப் சென்ற திசையை நோக்கினாள்.

அப்போது-

இரு மைதீட்டிய விழிகள்- கலக்காரர்களின் கைக்கூலிக்குப் பலியான வேவுக் கண்கள் கூர்ந்து கவனித்தன.

மறுநாள் பொழுது புரட்சிகரமாக விடிந்தது; கலகக்காரர்களின் திட்டமும் அழுது வடிந்தது; யாகூப்பின் வீரம் விழுது பாய்ந்தது!

சிலருடைய பார்வைக்கு ரஸியா, ரத்தத்தால் வரைந்த சித்திரமானாலும், பலருடைய கண்களுக்கு யாகூப், ஒரு பயங்கரக் கற்பனை மருட்சியாகக் காட்சி தந்தான்.

ராணி ரஸியா பேகத்தின் பிறந்த நாள் உதயம் நாளை தில்லிமாநகரத்தையே கோலாகலத்தில் ஆழ்த்தவிருந்தது. ஏற்பாடுகள் பரபரப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. ,

அதே நிலவு. ஒளிமழை, நட்சத்திரங்கள்.

நிர்மலமான வானம், நிலாக் குளியல், ரூப்கல்யாண் ராகம்.

சற்றைக்கெல்லாம் தளபதி யாகூப் வந்துவிட்ட செய்தி. நிலவை முகில் மறைத்தது. ஒப்பனை முடிந்து, ரஸியா எழுந்து நின்றாள்.

தோழிகள் கீழே இறங்க-

யாகூப் மேலே வந்து கொண்டிருந்தான்.

''வாருங்கள் யாகூப்! என் பிறந்த தின ஏற்பாடுகள்...''

''விமரிசையாகக் கவனிக்கப் படுகின்றன சுல்தானா...!''

''நாளை எனக்குப் பலபேர் பல பரிசுகளை வழங்குவார்கள். இல்லையா?''

''சந்தேகமில்லை.''

''ஆனால் நான் உங்களுக்கு ஒரு பரிசு தரலாம் என்று நினைக்கிறேன். என்ன வேண்டும்''

யாகூப் எதிர்பாராது தயங்கினான்.

''என்ன கேட்பது என்று யோசிக்கிறீர்களா யாகூப்? எதை வேண்டுமானாலும் கேட்கலாம். துணிந்து கேட்கலாம், இந்நாட்டைத் தவிர! உங்களை நானறிவேன். உங்கள் சேவை இந்நாடு அறியும். ஏன்? என்னையே...'' அவள் நிறுத்தினாள்.

அவனுக்கு எப்போதோ புரிந்து விட்டது. இளமை முறுக்கேறிய அவனுக்கு இதயத்தில் இப்படி ஒரு பெருமூச்சு உண்டு. ஈடேறுவது இருக்கட்டும்; என்னுவதே குற்றமல்லவா?

எதிர்பாராமல் நிலவு நழுவி நெற்றியில் பொட்டிட்டது போல இப்படி ஒரு சந்தர்ப்பமா?

யாகூப் கேட்டான்; ''நாளைய இந்த இரவில் நானும் உங்களுடன் நிலாக்குளியல் எடுக்க வேண்டும்''.

எவ்வளவு சூசகமாகக் கேட்டு விட்டான். கலகல வென்று சுநாதமாகச் சிரித்தாள் ரஸியா பேகம். வலக்கரத்தை உறுதிமொழியாக நீட்டினாள். யாகூப்பின் அதரங்கள் ஊர்ஜித முத்திரையிட்டன.

ரஸியாவின் பிறந்தநாள் கொண்டாட்டம் பித்தர் பலரின் விழிபிதுங்கக் கோலாகலமாக நடைபெற்று முடிந்தது.

மாலை மறைந்து மையிருட்டு பிரசவமானது. தொடர்ந்து நிலவு, பின்னிரவு, அதே சூழ்நிலை. ஆனால் இன்று ஒருநாளும் இல்லாத திருநாள்.

ரஸியா தனித்து ஒசிந்து நடை பழகிக் கொண்டிருந்தாள். இன்னும் கொஞ்ச நேரத்தில் தளபதி யாகூப் வந்து விடுவான். அந்த அபிசீனிய வாலிபம். நெடியுள்ள போதையாக நீளும்.

உடல் முழுவதும் வாசனைத் திரவத்தை வாரியப்பிக் கொண்டிருந்தாள் ரஸியா. அவளே பாதி ஆணுக்குச் சமானமானவள். மோகம் ஏற்படுவதே முயற்கொம்பு.

கீழே ஆளரவம்.

யாகூப் வந்துவிட்டான் போலும்!

எட்டிப் பார்த்தாள் ரஸியா.

தோழியர் இருவர் வெள்ளியால் செய்த பென்னம் பெரிய பேழையொன்றைத் தூக்கி வந்தனர். யாகூப்பைக் காணோம்.

''என்ன இது?'' ரஸியா எதிர்பார்த்தது ஒன்று; வருவது மற்றொன்றாக இருக்க வெறுப்புடன் கேட்டாள்.

''பிறந்தநாள் பரிசு?'' என்றாள் ஒரு தோழிப் பெண்.

''யார் இந்த நேரத்தில் அனுப்பியது''.

''சிறையில் இருக்கும் கனவான்களின் மனைவிமார்கள்.''

''ஓகோ! பகலில் என்ன செய்து கொண்டிருந்தார்கள்?''

''கிரேக்க மது. அதனால்தான் இரவில் அனுப்பினார்கள்.''

''அப்படியா! மயக்கத்துக்கு நல்ல மருந்து. பேழையைத் திறந்து குவளைகளில் நிரப்புங்கள். யாகூப்பிற்கு பிடித்த மது!''

தோழிப் பெண்கள் வெள்ளிப் பேழையைத் திறந்தனர். அடுத்த கணம் அவர்கள் அரண்டு மருண்டு பெரிதாகக் கூச்சலிட்டு மூலைக்கு ஒருவராக விழுந்தடித்து ஓடினர்.

ஒரு கணம் அதிர்ந்த ரஸியா அருகே வந்து கூர்ந்து கவனித்தாள்.

பேழையினுள்-

யாகூப்பின் தலை இருந்தது.

மயங்கி விழுந்த ரஸியாவுக்கு மயக்கம் தெளிய பல தினங்கள் பிடித்தன.

***- 1976***

# நன்னூல்

**உ**தய திசையில் ஆடகப் பொன் மாளிகையின் அதிபதியாய் எழுகிறான் ஆதிபகவன்.

திருவரங்கப் பெருமானின் தியானத்தில் மூழ்கி, அடிதனத்தே அரங்கனைப் பள்ளிகொள்ளச் செய்து கண்மலருகிறாள் ஒருகாலத்துக் காவியப் பேரழகியாய் விங்கிய, ஒன்பது பத்துகளை விழுங்கிய ஒவிய்கிழவி அம்மங்கை ஆழ்வார். ஓ... இவள் எப்பேர்பட்ட மாவீரனை மணந்து சரிதகங்களைப் புரட்டிக் சரிதம் கண்டு வருகிறாள்.!

இட்டடி நோக, எடுத்தடி இசைபாடிநோய் தணிக்க நடந்த அழித்தெழுதா சித்திரமான அம்மங்கா தேவியா, இன்று தட்டித் தடுமாறத் தடியூன்றிக் கொக்கரிக்கிறாள்?

அவளது எண்ணமெலாம் தமிழன் மறுமலர்ச்சிக்கு ஒரு புதிய எளிய இலக்கண நூல் தேவை. அது தன் காலத்தே தாலாட்டுப் பெறவேண்டும். குறுக்கே நிற்கிறாரே தடுப்புச் சுவர்போன்ற அனைக்குரவர் ஈசுவர சிவன்!...

''ஏ, குலோத்துங்கா! தலை முறைகள் பலகண்ட தடியூன்றி நான்! அகவை தொண்ணூற்றில் கோணாட்டின் முகவை பலவற்றை அறிந்தவன்; முகவரிகள் தெரிந்தவள். உனது பெயர் கொண்ட எனது தந்தை, முதலாம் குலோத்துங்க சோழ மகா சக்கரவர்த்தி காலமுதல் இன்றுவரை, எனது வீரமா அண்ணன் விக்கிரமச் சோழன், அவன் மகன் இரண்டாம் குலோத்துங்க சோழன், அவன் மகன் இரண்டாம் ராசராச சோழன், அவன் மகன் இரண்டாம் ராசாதி ராச சோழன்,

இப்போது நீ- மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆகியோரைக் கண்ட அரச ஒளைபிராட்டி நான்! என் பேச்சுக்கா மறுப்பு கூறுகிறாய்!''

''அத்தை, எங்கள் ராஜமாதா! நான் சொல்வது...''

''நிறுத்தடா! நீ சொல்வது ஒன்றுமில்லை; உன்னைச் சொல்ல வைப்பவன் அவைக் குரவனாய் அமர்த்தி இருக்கிறாயே ஆட்டின் கழுத்து அதர்போன்ற வடநாட்டு ஈசுவர சிவன், அவன் சொல்வதைத் தானே நீ திருப்பிச் சொல்லிக்கொண்டு ஆட்சி நடத்துகிறாய்?''

''இப்போது தமிழிலக்கணத்துக்கு என்ன அவசரம் அத்தை?''

''உனது ஞானகுரு லலாட தேசத்து ஈசுவர சிவன் சித்தாந்த சாரத்தை வட மொழியில் பாடியபோது நான் எதிர்ப்பு சொன்னேனா? மேன்மைமிகு தமிழிலக்கணத்து மேருவாய் விளங்கும் சமணத்துறவி பவணந்தியாரைக் கொண்டு இனிய தமிழுக்குப் புதிய இலக்கணம் செய்ய நான் எண்ணியதில் ஏனிந்த எதிர்ப்பு?''

''நமக்கிருக்கும் தொல்காப்பியம் ஒன்று போதாதா?''

''போதாது; வருங்காலம் எளிய தமிழுக்கு ஏங்குகிற போது, புதிய இலக்கணம் ஒன்றை அம்மங்கா தேவி புறப்படச் செய்தாள் என்கிற புண்ணியப் புகழ் எனக்குத் தேவைப்படுகிறது.''

''உங்கள் திருப்திக்காகத்தானே வத்சராசனைக் கொண்டு மகா பாரதத்தை மொழிபெயர்க்கச் செய்தேன்!''

''ஆ! இது ஒரு கண்துடைப்பு! குலோத்துங்கா! உனது ஞானகுருவுக்கு சமணர் பிடிக்கவில்லை. சமண பவணந்தி தமிழிலக்கணம் செய்வதா என்கிற காழ்ப்பு! வடதிசை

யானாயிற்றே தமிழை எவன் செய்தால் என்ன? அவன் தமிழைச் செய்கிறான்! தமிழுக்கு எந்தக் காலத்திலடா அவைக் குரவன் இருந்தான்? முதலாம் ராசராசன் செய்த தவறை நீ செய்திருக்கிறாய்! பேகாட்டும். பவணந்தியைக் கொண்டு புதிய இலக்கணம் செய்ய போகிறாயா? இல்லையா?''

''முடியாது.''

''இனி என்னைத் தடுக்கவும் உன்னால் முடியாது. நான் போகிறேன்.

''எங்கே!''

''எனது போக்கில்! என்னைத் தடுக்க நீயார்? பயண உதவி செய்தால் செய்! இல்லை பாதங்கள் நோக நடைப் பயணம் நடத்துகிறேன்! இழுக்கு எனக்கல்ல; அழுக்கு உனக்கு!''

ராஜமாதா மாதேவி அம்மங்கை ஆழ்வார், ஊன்றிய தடி பூமியை உலுக்க, உசுப்பி விட்ட பெண்சிங்கம்போல் விறுவிறுவென நடந்தாள்.

குலோத்துங்க சோழனின் உத்தரவைக் கூட எதிர்பாராது பின் தொடர்ந்து ஓடினான் தானைத்தலைவன் சேதிராயன்.

பயணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டாமா?

**க**ங்கபாடி நாட்டுத் தலைநகரம்★ குவலாளபுரம், சோழப் பெருந்தேவி அம்மங்கை ஆழ்வார் வருகை தந்திருக்கும் செய்தி கேட்டுக் குதூகலத்தில் ஆழ்ந்தது. கங்கநாடு சோழகனுக்கு உட்பட்ட சிற்றரசு.

கங்கை அரசன் அமரா பரண சீயங்கனும் அவனது பட்டத்தரசி அரிய பிள்ளையும், சோழப் பெருந்தேவி அம்மங்காதேவியைச் சகல மரியாதைகளுடன் உபசரித்தனர்.

தொண்டு கிழவி அம்மங்கை ஆழ்வார் செய்யவந்த தொண்டினைச் செவிமடுத்துப், பண்டு செய்த புண்ணியம் போல் பரபரத்தான் அமராபரணசீயங்கன். கங்க நாடும் கன்னித்தமிழுக்குச் சேவை செய்யப் போகிறதோ? கன்னடமமும் துளுவமும் கைகோத்து நடக்கும் நாட்டில் தாய்தமிழுக்கு இப்படி ஒரு தங்கத்தொட்டில் அமைக்கப் போகிறோமே?

பவணந்தியாரை அழைத்துவர அதிகாரிகள் பறந்தனர். *சந்தாரபுரத்தில் வசிக்கும் அந்தச் சமணத்துறவியைச் சகல மேம்பாடுகளுடன் அழைத்து வரவேண்டும்.

ஒருவாரம், தேர்க்காலின் ஓட்டத்தில் நசுகங்கியது.

சமணத்துறவி பவணந்தி, கங்காநாட்டுத் தலைநகரம் வந்த பிறகே அழைத்து வந்ததன் அவசரத்தை அறிந்தார். அவருள்ளே எல்லையிலா பெருமகிழ்ச்சி பலிக்கொடித் தாங்கியது. தமிழுக்கு நாம் இலக்கணம் செய்யப் போகிறோமா?

அம்மங்கா தேவியை வணங்கிய பவணந்தி, ''தாயே! என் தலையில் உங்கள் இதயத்தை வைப்பீர்கள் என்று எதிர்பார்த்து ஓடோடி வந்ததேன். நீங்களோ இமயத்தை வைத்துவிட்டீர்கள்! இந்த முண்டித்தலை தாங்குமா?'' என்றார்.

அம்மங்கைக் கிழவி சிரித்தாள்

---

* 1. இன்றைய கோலார்

* 1. மைசூர் ஜில்லாவில் திருமுக்கூடல் நரசிபுரம் தாலுக்காவில் உள்ளது.

''பவணந்தியாமே! ஜினதேவர் தங்கள் தலைக்கு தமிழ்ப்பலமளித்து இருக்கிறார். தமிழ் இமயத்திலும் கனமாணது; ஆனால் எனது இயத்தைபோல் எளிமையானது. முண்டித தலை எதற்கு? தங்கள் பண்டித விரல்களே தாங்கும்.''

தலைமுறை கண்ட தமிழை நோக்கித் தலை வணங்கினார் பவணந்தி.

''தொல்காப்பியர் செய்த ஒல்காப் புகழுக்கு மாசு ஏற்படச் செய்து விடுவேனோ என்று அஞ்சுகிறேன்.''

''அஞ்சற்க! நான் தொல்காப்பியம் செய்யச் சொல்லவில்லை. வருங்காலத்து மக்கள் எளிய முறையில் பயில புதிய இலக்கணம் காணச் சொல்லுகிறேன்.''

''எனது சிந்தனை வட மொழியை வரித்துக் கொள்ளுமோ என்று...''

''பரவாயில்லைவு ஆரியம் கண்டாய்; தமிழும் கண்டாய் என்று பாடியவர் அப்பர் பெருமான். தாங்கள் அரியமும் கொள்ளலாம்; தமிழும் கொள்ளலாம். நான் புதிய இலக்கணம் தான் கேட்டேன்! வருங்காலத்தில் ஆரியத் துணை தமிழுக்குத் தேவைபடும்!''

ஹே, ஜைனப் பிரபோ!' பவணந்தி அருகனை வேண்டி மனத்துள் அலறலுற்றார். இதுவும் ஆசைப் பற்றி அறையலுற்ற கதைதானோ?

ஏ, இறவாத் தமிழே! எனது நெஞ்சில் இடம் பெறுவாயாக! எல்லாரும் உனது உடலைப் பூசித்தார்கள். என்னை உனது உயிரைப் பூசிக்க வைத்ததன் மறைவு அறியேன்!

நன்னூல் உருவாக்கத் தொடங்கியது.

அரங்கேற்றம் எங்கு வைப்பது?

குவலாளபுரத்தில்தான். அடித்துச் சொன்னாள் அம்மங்கை ஆழ்வார். வைணவ பக்தையாய்த் திகழ்ந்தது, சமணம்மூலம் சங்கத் தமிழுக்குச் சந்தனத் திருமுழுக்குச் செய்ய முனைந்தவளாயிற்றே! அதுவும் அரங்கேற்றம் எப்படி?

சக்கரவர்த்தி குலோத்துங்க சோழ பிரானை அழைக்கக் கூடாதாம்!''

அரண்டு மருண்டு போனான் அரசன் அமராபரண சியங்கன். அன்பு மனையாள் அரிய பிள்ளையை விட்டு எவ்வளவு எடுத்துச் சொல்லியும், தொடுத்துச் சொல்லியும் அம்மங்கா தேவி கேட்கவேண்டுமே!

''இது முதலாம் குலோத்துங்க சோழமகா சக்கரவர்த்தி கட்டளையிட்டது போல! இந்த அரங்கேற்றத்துக்கு எவரையுமே அழைக்கத் தேவையில்லை. எனது தலைமையில்தான் அரங்கேற வேண்டும்!

பழுத்த பழத்தின் அதிகாரத்தின் முன் பிஞ்சுகள் பிதுங்கிப் போயின. மகாசக்கரவர்த்தி முதலாம் குலோத்துங்க சோழரை இழுத்து விட்டபிறகு? அவரது அருமந்த புதல்வியாயிற்றே அம்மங்கா தேவியெனும் அகவை தொன்னூறு.

அரங்கேற்றத்துக்கு நாள் குறிப்பிட்டாய் விட்டது. ஆயினும் இதன் மூலம் ஏற்படப் போகும். இடையூறுகள் ஏதாக இருக்குமோ என்கிற மனப்பதற்றத்தைக் கட்டுப்படுத்த முடியாது தயங்கித் தயங்கித் தவித்துப் போனான் கங்கநாட்டரசன்.

ஆதவன் எழுச்சியில் மாதவத் தமிழில்க்கண நூலாம் நன்னூல் பொன்முகப்படாம் புணைந்த பட்டத்து யானையின் அம்பாரியில் அமர்ந்து பவனிவருகிறது. தலை நகரமே திரண்டு தமிழைக் கவனிக்கிறது. மனத்துள் சிலர் போற்றினர்; பலர் தூற்றினர். தாய்மொழிப் பற்று என்பது அவரவர் தனியுரிமையல்லவா?

தலைநகரை வலம் வந்த பட்டத்து யானை, அரண்மனை வெளிவயிலில் அலங்கரிக்கப் பட்டிருந்த முத்துப் பந்தலருகே மோகனமாய் நிற்கிறது.

பொன்னூலாம் நன்னூலை ஏந்திய பவணந்தி, பொன்னாசனத்தில் அமர்ந்து, புலவர்கள் சூழ வகுத்த பகுபதத்தையும் பகுக்காத பகாபதத்தையும் மிகுந்த அறிவுகொண்டு, மிதமாய் மேலும் பதமாய் என்றும் சதமாயிலங்கிட எடுத்துரைத்து முடிக்கிறார்.

எங்கும் கரவெலிகள், கங்க நாட்டைச் சங்கநாடாக்குகின்றன.

தேனால் இனிப்பு கண்டு, தெய்விகத் தமிழைமொண்டு வானோர் வாழ்த்துவது போல சிலிர்ப்பு கண்ட சோழப் பெருந்தேவி அமங்கை ஆழ்வார், ''அடே குலோத்துங்கா! என் சபதம் நிறைவேறியது! இந்தக் கரவெலி உனது கங்கை கொண்ட கோபுரத்தில் கேட்கிறதா?'' என்று கூச்சலிடு கிறாள்; மேலும் மேலும் உணர்ச்சி வயப்பட்டு இரைந்து கூச்சலிடுகிறாள். அப்போது.

''கேட்கிறது அத்தை!'' என்றது ஒருகுரல்!

எங்கும் அமைதி. எங்கிருந்து வந்த குரல் இது? யாரிட்ட குரல் இது?

அதோ நிற்கும் யானைப் பாகனா? ''பாகனே! விடுத்த குரல் உன்னுடையதா?''

''ஆம் அத்தை! அடியேன் குரல்! சோழமன்னன் குலோத்துங்கன் குரல்! நீங்கள் என்னை அழைக்காமல் விடலாம். தமிழ் என்னைத் தொடாமல் விடுமா? நான்தான் பாகன் உருவில் தமிழுக்கு யானைசாரதியாய் அமர்ந்து செங்கோல் பிடிக்கும் கரத்தில் அங்குசம் பிடித்தேன். என் காலத்தில் உருப்படியாக ஏதுமில்லையே என்று ஏங்குகின்றபோது பவனந்தி முனிவர் செய்த தொண்டு பெரிதினும் மிகப் பெரிது! அந்த மகாமேருவின் பாதம் பணிகிறேன்!'' என்று கண்ணீர் மல்கி, பவனந்தி முனிவரின் பாதங்களைப் பணிந்தெழுந்தான் குலோத்துங்க சோழன்.

அயர்ந்து போய் நின்றாள் ராஜமாதா அம்மங்காதேவி.

''குலோத்துங்கா! நீயா? நீயா?''

''நானே தான் சோழப் பேரரசின் வேழம் நிகர் ராஜமாதா! உங்களை நான் உதாசீனப் படுத்தவில்லை யெனில், திங்களையொத்த திவ்விய தமிழமுதை நான் பெற்றிருப்பேனா? எனது காலத்தில் நான்பெற்ற மிகப்பெரிய வெற்றி இந்த நன்னூல் எனும் பொன்னூல் இலக்கணம்! முனைவனைக் கண்டது முதல்சங்கம்; காப்பியனைக் கண்டது இடைச்சங்கம்! கடைச்சங்கம் காணாத ஒன்றை இந்த குலோத்துங்கன் சங்கம் பவணந்தியைக் கண்டது. எனது சங்கத்தின் தலைவியே! குலோத்துங்கன் தலை வணங்குகிறான்!''

அநபாயன் தலைவணங்க, அம்மங்கை ஆழ்வார் ஆனந்த கண்ணீர் வடிக்கிறாள்.

'ஏ திருவரங்கப் பெருமானே! எனது உயிர் இக்கணத்தில் பிரியுமானால், நான் எத்துணைக்குப் பேறு பெற்றவளாவேன்!''

-1994

# பட்டுப்பூச்சி

**யா**ர் இந்த சூலிங்?

சாந்தி நகரம் என்ற கவுரமான பொருள்கொண்ட சீனப் பேரரசின் தலைநகராம் சாங்கான் முழுவதுமே இந்தப் பரபரப்பு.

சீனச்க்கரவர்த்தி வெந்தீயின் நெஞ்சில் காமத்துச் செந்தீ எழுந்து கற்பனையில் கனவுக் கவிதைகளைப் புனைகிறது.

பூமியின் அனுபவத்தைப் பெறவந்த பொன்னுலக தேவதை என்று அவளை வருணிக்கிறார்களே!

மகா கவிஞன் மென்சீயசே வருணிக்க முடியாத வார்ப்படப் பொற்சிலை என்கிறாரே! சீன மொழிக்கே அப்பாற்பட்ட செம்மாந்த அழகு, அவளது பேரழகாமே! இத்தணைக்கும் அவள், இரவை விலை பேசி இரசசியத்தைத் தாலாட்டும் இன்பத்து பாலாமே...!

தனது செருக்கார்ந்த செம்பொன் அழகை ஆராதிக்க வேண்டுமென்றால் நூறு பொற்காசுகளை அர்ச்சனை செய்யவேண்டுமாம்!

அவளது அபூர்வ அழகையாவது தரிசித்துவிட்டு வரலாமே என்றுதான் மகா கவிஞன் மென்சியஸ் அந்த நிலா மாளிகைக்கு உலாவரச் சென்றாள்.

''வாருங்கள் கவிஞரே! ஒரு மகா கவிஞர் எனது மாளிகைக்கு எழுந்தருளியது எனது மேனி செய்த பாக்கியம்''

அவளது அழைப்பு ரகசியமாகச் சீன அரண்மனையும் நுழைகிறது.

எத்தனை சீமான்களையும் அரசர்களையும் நிலவுக்கு அறிமுகம் செய்து வைத்தவன் அவன்? ஆனால் சீன மன்னருக்கு .... வென்தீக்கு....

இத்தனைக்கும்....

சீன சக்கரவர்த்தியின் அழகு மஞ்சத்தில் இந்த மயில் எத்தனையோ முறை தோகை விரித்து இனப் நடம்புரிந் திருக்கிறது. ஆயினும் ஏனிந்த எதிர்பார்ப்பு? இதில் அடங்கி இருக்கும் மர்மம்தான் என்ன?

அவள் அனுப்பிய ரகசிய அழைப்பின் சாரம்.....

'ஒருமுறை சுகத்துக்கு நூறு பொற்காசுகளை வசூலிப்பவள் நான். ஆனால் உங்கள் பொற்காசுகமலங் களுக்கு நூறு பொற்காசுகளை அர்ச்சித்து ஆலிங்கனம் செய்ய ஆசைப்படுகிறேன். இன்றைய இரவு, நாம் நிலவைப் பூச்செண்டாக்கி விளையாடுகிறோம்...

யாரிவள் என்பது சக்கரவர்த்திக்குத் தெரிய நியாயமில்லை.

சீன வமிசத்திலேயே ஒரு கவுரவம் வாய்ந்த வமிசம் ஹான் வமிசம்.

மக்கள் புரட்சியையும் விவசாயப் புரட்சியையும் மேற் கொண்டு, ஏழைகளுக்காகவும், விவசாயிகளுக்காகவும் ஏற்றம்தர அமைத்த அரசு, ஹான் வமிசத்து அரசு. அந்த அரசில் வழிவந்தவர் சக்கரவர்த்தி வென்தீ. அப்போர்ப் பட்டவர் நூறு பொற்காசுகளைக் கொடுத்து ஒரு விலைமகளை அனுபவிப்பதாவது?

இரவு இருட்டுக் கால்களால் நடந்து வந்தது.

நிலவு ஒளியிருக்கைகொண்டு பறந்து வந்தது.

நட்சத்திரங்கள் சூலிங்கை ஆதரித்துச் சிரிப்பன போல மினுமினுக்கின்றன.

சீன சக்கரவர்த்தியின் பல்லக்கு தலைநகரைத் தாண்டி, அழகின் முழு முகவரி வாசம் செய்யும் வசந்தமாளிகை வாசலில் நிற்கிறது.

பனிப்பெண்கள் சீன முறைப்படி வணங்கி வரவேற்கிறார்கள்.

ஆயினும் சூலிங் வெளியே வரவில்லை. அவன் மேன்மாடத்தில் அழகின் சக்கரவர்த்தினியாக அமர்ந்து கொண்டிருந்தாள்.

பணிப்பெண்கள் வழிகாட்ட சக்கரவர்த்தி மாடம் நோக்கிச் செல்கிறார்.

மாடத்துச் சித்திரக்கூடத்தில்...

ஒரு மகாகாவியத்துள் மறைந்து, பல கவிஞர்களின் வேண்டுகோளுக்கிசைந்து பிரசன்னமான சவுந்தரிய வேததைபோல் நின்று வணங்குகிறாள்....

''இந்தப் பட்டழகு, உங்கள் கால் பட்டு, கண்பட்டு, கருத்துப்பட்டு மேலும் பட்டொளி வீச பளபளக்கிறது....''

சூலிங்க, பட்டுநூலைக் கண்டுபிடித்த பட்டழகைத் தொட்டு முட்டுகிறாள் என்று உள்ளுக்குள் முணுமுணுத்துக் கொள்கிறார் சீன சக்கரவர்த்தி. அவர் முறுவலிக்கிறார். அதில் சீன சக்கரவர்த்தி. அவர் கவுரவம் தெரிகிறது. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிற எழில் புரிகிறது.

பணிப்பெண், நூறு பொற்காசுகள் அடங்கிய பட்டுப் பையைகக் கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் பதவிக்காகப் பனிந்து கீழே சென்றுவிடுகிறாள்.

பையை விரித்த இதழ்கள், மெல்லநெளிந்து மிருதுவாக அழைக்கின்றன.

விரிந்த பையிலிருந்த நூறு பொற்காசுகளை, சிரித்த முகத்தோடு சக்கரவர்த்தியின் செம்பொற்பாதங்களில் கொட்டுகிறாள்.

அவளது கண்களில் நிலவு தெரிகிறது. மெல்ல சிரிப்பில் சீனயாழ் கலந்து கொள்கிறது...

எங்கோ, எப்போதோ பார்த்த நினைவு போலச் சீன சக்கரவர்த்தி மருளுகிறார்.

சே! இந்தப் பேரழகை நாம் எங்கு பார்த்து இருக்கமுடியும்? இது பூமியைப் பிளந்துவந்த புது அழகு. நம்மை ஆராதிப்பதன் மூலம் விமோசனம் தேட வந்த தேவ சாபத்துக்குரிய அழகு!

''என்னை விரும்பியதன் காரணம். சூலிங்?''

''பாப விமோசனம்; அல்லது சாப விமோசனம்!''

ஓ.. நினைத்தது மாதிரியே இவள் சொல்கிறாள்.

''இன்றோடு இந்த எனது கடைவிரிப்பு நிறைவுபெறுகிறது.''

''காரணம்?''

''வமிசங்களிலேயே புனித வமிசமான ஹான் வமிசம் தொட்டபிறகு இனி புண்வமிசங்களைத் தொடுவதில்லை. இது உங்களைக் கவுரவிப்பதாகும். எனவேதான்

பாதகாணிக்கையாக நூறு பொற்காசுகளைக் கொட்டியிருக் கிறேன். வாருங்கள்''

அழகுக்கு அழகு செய்யும் அந்த அறையினுள் அவர்கள் நுழைகிறார்கள். அங்கே அழகு, பேரழகியாக பேரழகாகிப் பிரகாசித்தது.

ஐந்து நாழிகைகள் கழித்து அவர்கள் வெளியே வருகிறார்கள்.

இருவர் முகங்களிலும் இருவேறுபட்ட ஒளிநர்த்தனங்கள்.

''நான் புறப்படுகிறேன் சூலிங்! என்னைத் தெய்வமாக ஆராதித்ததற்காக நன்றி சொல்கிறேன்'' என்று கூறியவாறு சூலிங் அன்பாகக் கொடுத்த நூறு பொற்காசுகள் அடங்கிய பட்டுப் பையைப் பெற்றுக்கொள்கிறார்.

சூலிங் இப்போது கொஞ்சம் குரல் கொடுத்துக் கலகலவென்று சிரிக்கிறாள்.

''சக்கரவர்த்தி பெருமானே! இந்த நூறு பொற்காசுகளைக் கொண்டு உங்கள் அந்தப்புரத்தில் இடிந்து சேதமாகி இருக்கும் பகுதிகளைச் செப்பனிடுங்கள்.''

அரண்டுபோய் கவனிக்கிறார் சீன சக்கரவர்த்தி வென்தீ.

''உனக்கெப்படி அது தெரியும்?''

''என்னை உங்களுக்குத் தெரியவில்லை? தெரிய நியாயமில்லை; தெரியாதவாறு எனது பூரிப்பும் அலங்காரமும் மறைக்கின்றன. உங்கள் காமக்கிழத்தி ஹ◌ுவாவைத் தெரியுமா? உங்கள் காதல் புஷ்பத்தை நினைவுபடுத்துகிறேன். அந்த ஹ◌ுவாதான், இந்த சூலிங்!''

மேலும் அரண்டுபோய்ச் சிலையானார் சீன சக்கரவர்த்தி.

நினைவில் சில ஆண்டுகளுக்கு முன் நடந்த அந்தச் சின்ன சம்பவம் பூவாய்--- ஹூவாவாய் விரிகிறது....

அரண்மனையின் ஒருபகுதியாக அந்தப்புரம் சோமடைந்திருக்கிறது.

அதனைச் சீர்படுத்தவேண்டும் என்று மந்திரிகள் எவ்வளவு முயன்றும் முடியவில்லை. சக்கரவர்த்தி வென்தீ இது குறித்துக் கவலையும் கொள்ளவில்லை. அவரது கவலையெல்லாம் மக்களிடமிருந்து ஏழைமையை விரட்டவேண்டும்; விவசாயம் பெருகவேண்டும் என்பது.

முடிவில்...

மனைவி சொல்லைக்காட்டிலும் மந்திரிமான சொல் காமக்கிழத்தியின் சொல்தானே?

ஹூவா சொன்னால் சக்கரவர்த்தி ஏற்பார் என்கிற முடிவு அரும்பியது. அந்த முடிவு ஒருபுறமிருந்தாலும், சோமான பகுதியி வாழ கொஞ்சம் கூட விருப்பமில்லை ஹூவாவுக்கு.

ஒரு நிலா இரவில்...

ஹூ கோரினாள்.

''பிரபு எனக்கு இந்தச் சேதமான பகுதி என்னமோ போலிருக்கிறது. இதனைச் சீர்படுத்துங்கள்.''

''மக்களைச் சீர்படுத்துவோம். பிறகு அரண்மணைக்கு வருவோம்.''

''எனக்கு இப்போது அரண்மனை தான் முக்கியம். நான் வசிக்கும் இடமும் முக்கியம்.''

''நாளை கவனிப்போம்.''

''கவனித்தபிறகு நாம் நிலாக்குளியல் எடுக்கலாம்''

அவள் அறையைவிட்டு வெளியே வந்துவிட்டாள்.

மறுநாள்...

சேதமான பகுதிகளைச் சீர்செய்ய எவ்வளவு செலவாகும் என்பதை கட்டிட வல்லுநர்களை அழைத்துக் காண்பித்து விசாரிக்கிறார் சக்கரவர்த்தி.

நூறு பொற்காசுகள் செலவாகும் என்று குறிப்பிடு கிறார்கள்.

''ஐய்யய்யோ! பத்து ஏழைக் குடும்பங்கள் அதில் பிழைக்குமே! மக்கள் வரிப் பணத்தை இப்படிச் சுயநலத்துக்காகச் செலவழிப்பதை நான் விரும்பவில்லை.''

சக்கரவர்த்தி இவ்வாறு கூறியதைக் கேள்விப்பட்ட ஹவா, தன்னை அலட்சியப்படுத்திவிட்டதாகவே, சினந்தாள். தனக்கு அங்கு கவுரமில்லை என்பதை உணர்ந்தாள். சக்கரவர்த்தியின் சவுகரியத்துக்கு மட்டும் நாம்; நமது சவுகரியத்துக்கு அவசரமில்லையா?

இப்படி, சூலிங்காகிச் சூத்திரம் பேசினாள்.

சக்கரவர்த்தி தம்மை உணர்ந்து கொண்டார் என்பதைப் புரிந்து கொண்ட அழகின் சக்கரவர்த்தி ''பிரபு! என்னை மன்னியுங்கள். இது வரிப்பணமல்ல; என் பணம். அரண்மனை அழகுறட்டும். ஆயினும் நான் உங்களை மதிக்கிறேன்; பாராட்டுகிறேன். என் காலத்துக்குப் பிறகு இந்தச் செல்வத்தை உங்கள் மக்களுக்கே எழுதிவைப்பேன். தயவுசெய்து, பெற்ற பொற்காசுகளைத் திருப்பித் தராமல்

எடுத்துச் செல்லுங்கள். இது என் காணிக்கை. எனவே, அந்தப்புரம் புஷ்பமாய் மணக்கட்டும்''

பொற்காசுப் பையுடன் வெளியே செல்கிறார் சக்கரவர்த்தி வென்தீ. ஆனால் அந்தக் காசுகளை...

வழிநெடுக வேதனைகளில் அவதியுற்றுக் கொண்டிருந்த ஏழைகளுக்குத் தானமாக வழங்கிக் கொண்டே செல்கிறார். அதனால்தான்...

வென்தீ, சரித்திரத்தை வென்ற தீயாக விளங்குகிறார்.

**- *1992***

# மூங்கில்

அந்த நட்ட நடுகாட்டை நோக்கி இத்தனை சேனைகள் எங்கு நோக்கிச் செல்கின்றன? எவர்மீது படையெடுக்கச் செல்கின்றன. அவ்விதம் படையெடுத்துச் சென்றால் படைத்தலைவன் தேவையாயிற்றே! இங்கே ராஜகுருவான மகாமேதையான சாணக்கியரல்லவோ தலைமை தாங்கிச் செல்கிறார். அப்படிச் செல்பவர் குதிரை மீது வீற்றுச் செல்லவில்லை; யானைமீது அம்பரித்துச் செல்லவில்லை. பல்லக்கில் செல்வானேன்?

இக்கேள்விகள் யாரோ எவர்க்கோ எழவில்லை. சாணக்கியரைச் சூழ்ந்து செல்கிற படைவீரர்களுக்கே எழுந்தது. படைகளை நடத்திச் செல்லும் உதவிப்படைத் தலைவனுக்கும் கூட முழுமையாகத் தெரியாதென்றால், படை வீரர்கள் தங்களுக்குள் கேட்டுக் கொண்டதில் தவறில்லை.

மகத சாம்ராஜ்யத்தின் தென் மூலை நோக்கிப் படைகள் சென்று கொண்டிருந்தன. எத்தனை இரவுகள்; எத்தனை பகல்கள்? எங்கே செல்கின்றன? யாரை நோக்கிச் செல்கின்றன?

ஆதித்தன் மேற்கு வாயிலை ஆசீர்வதிக்கச் சென்று கொண்டிருந்தான். அந்தப்பயங்கரமான வனாந்திரத்தைக் கடந்து கொண்டிருந்தன படைகள்.

சாணக்கியரென்னவோ இவ்வளவு பெரிய படைகள் தேவையில்லை. குறிப்பிட்ட பாதுகாப்பு வீரர்களுடன்

பயணமானால் போதும் என்றுதான் சொல்லிப்பார்த்தார். ஆயினும் மகா சக்கரவர்த்தியான சந்திரகுப்தன் கேட்க வேண்டுமே! பயணமாவது அறிவின் கருவூலம். விலைமதிக்கமுடியாத பொக்கிஷம். அண்டை நாட்டான் கொள்ளையடித்துக் கொன்றாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. மேலு கிரேக்கப் படியிலிருந்து இப்போது தான் ஓரளவு தப்பி இருக்கிறது கங்கை கரை. கிரேக்க மாவீரன் செல்யூக்காஸுடன் சமாதான உடன்படிக்கைச் செய்து கொண்டாலும், சாணக்கியரைப் போன்ற மதியூகியைக் கடத்திச் செல்லமாட்டான் என்பது என்ன நிச்சயம்?

நியாயம்படி இப்பயணத்தில் சந்திரகுப்த மகாசக்கரவர்த்தியம் கலந்து கொண்டிருக்க வேண்டும். சந்திரகுப்தனுக்குத் தான் இந்தச் சின்ன விஷயத்துக்கு சாணக்கியர் செல்வதே பிடிக்கவில்லை என்றிருக்க, அவரா பயணடையப் போகிறார்?

நடந்து வந்த பாதையைத் திரும்பிபார்க்க மறுப்பது செல்வச் செருக்கு! மாமன்னர்களில் பெரும்பாலும் இப்படித்தானே? ஆனால் சாணக்கியர் அறிவுசாம்ராஜ்யத்தின் மகுடம்தரியா அதிபதி. எனவே நன்றி அவரது நகக் கால்களிலும் நர்த்தனமிட்டுக் கொண்டிருந்தது.

எப்பேர்பட்ட கிழவியவள்! கிழவியா அவள்? ஞானத்தாய்! இவ்வளவு பெரிய சாம்ராஜ்யத்தை ஒரு குடை நிழலில் கொண்டுவர அவளது அகல்விளக்கு போன்ற திரிப்பிரகாசம் உதவியது?

அன்று பஞ்சைப் பார்ப்பணனாக இருந்த சாதாரண சாணக்கியர், இன்று மகதத்தின் மகாமேரு! பூணூல் மட்டுமே பூண்டறிந்த மார்பில் பொன்னாலான பூஷணங்கள். இத்தனைக்கும் காரணம் அந்த ஞானத்தாயயல்லவா?

ஆளையனுப்பி அந்த ஞானத்தியை தலைநகராம் பாடலிபுத்திரத்துக்கு அழைத்து வந்தால் போதாதா என்று சந்திரகுப்தன் கேட்கலாமா? நாளை இவன் நம்மையும் இப்படித் திரும்பிபார்க்கும் ஞாமின்றி நடத்தினாலும் நடத்துவானல்லவா?

அர்த்த சாஸ்திரத்தின் ஆரம்பவரி-மூலக்கணல் அந்த ஞானத் தாயல்லவா? அப்படி என்ன மூலக்கனலை மூட்டிவிட்டாள் அந்தக்கிழவி?

எண்ணிப் பார்க்கையில் மார்பு விம்ம பெருமூச்சு விடுகிறார் பூஜ்யத்தைக் கண்டு பிடித்த பூஜ்யரான சாணக்கியர். பல்லக்கு வேகமாகச் சென்று கொண்டிருந்தால் அவரது கனத்த உடல் அசைந்து கொண்டிருந்தது. ஒல்லியான தேகமுடன் கிழவியின் குடிசையுள் நுழைந்த உருவமா அது?

**ப**கை மண்டலம் புகைமண்டலமாய்ச் சூழ்ந்திருந்த நேரம் அது. சந்திர குப்தன் தலைக்கு நந்தர் குலம் ஏலம் விட்டு எதிர்பார்த்துக் கொண்டிருந்தநேரம். எந்தத்தானய-மோராவை விபசாரி என்று தனதந்தன் சொன்னானோ, அவன் தலையைச் கொய்து பந்தாடுகிறேன் என்று சந்திரகுப்தன் சபதம் ஏற்றுத் தலைமறைவாக வாழ்ந்த இருண்டநேரம் அது. அந்த இருளாட்சியில் ஒளிவிளக்காய் வந்து சேர்ந்து துணை புரிந்தவள்தான் சாணக்கியர். ஏ, நந்தனே! உன்னைச் சிம்மாசனத்தை விட்டு இறக்கவில்லையெனில் இந்தக் குடுமியை முடியேன் என்று வஞ்சினமேற்றவராயிற்றே சாணக்கியரும் இதுவும் ஒருவித பாஞ்சாலிசபதமே!

காடுகளிலும் மலைகளிலும் ஒளிந்து வசித்தும் பனிமூடிக் கிடந்தும் காலம் தள்ளிய நாட்கள் எத்தனை,

எத்தனை. சமயம் கிடைக்கிறபோதெல்லாம் படைகளைத் திரட்டுவதும், தோல்வியடைவதுமே நாட்களாய் நகர்ந்தன. எவ்விதம் வெற்றிகாண்பது?

இப்படி மறைந்து வாழ்ந்த நாட்களில் ஒருநாள்-

அடர்ந்த அந்த வனாந்தரத்தில் உணவுதேடி வருகையில், கண்களில் தென்பட்டது ஓர் ஏழைக் குடிசை. அதனுள் வறுமையின் அம்மியில் அரைபட்டுத்தேய்ந்து தேய்ந்து உருக்குலைந்த வயதான ஒரு கிழவி. அவளது பேரன் அப்போது சிறுவன்.

பசி என்று வந்த சாணக்கியரையும் சந்திரகுப்தனையும் இன்னார் என்று தெரியாமல், பசிஎன்று வந்தார்க்கு, ஒருபிடி சோற்றைப் புசி என்று அளிக்கும் நல்லஉள்ளம் கொண்ட மூதாட்டி அவர்களை அமரச் செய்யதாள். அப்போதைக் கிருந்த திணை மாவைக் கரைத்து அப்பம் சுட முனைந்தாள். அச்சமயம் குடிசையுள் நுழைந்த பேரன், ''பாட்டி! ரொம்ப பசிக்கிறது'' என்று துடிக்க, சாணக்கியரும், ''அம்மா! எங்களால் பசியைத் தாங்கிக் கொள்ளமுடியும். இவன் சிறுவன், முதலில் அவனுக்குக் கொடுங்கள்'' என்றார்.

''பாட்டி இவர்கள் யார்?'' சிறுவன் கேட்டான்.

''யாரோ, பாவம்! காட்டில் வந்து அகப்பட்டுக் கொண்டார்கள். பசி என்றார்கள். நம் உணவை அவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கலாமே, என்று உட்காரச் செய்தேன்.''

அக்கிழவி, அப்பத்தைச்சுடச்சுடப் பேரனுக்கு வைக்க, பேரனும் பசிமிகுதியால் அப்பத்தின் நடுப்பாகத்தைத் தொட்டுப் பிட்டு எடுக்க, விரல் சுடுபட்டதால், ''பாட்டி'' என்று துடித்து விட்டான்.

பதறி நோக்கிய பாட்டி, ''அடமுண்டமே! சந்திர குப்தனுக்காகப் பாடுபடுகிறேன் என்று சாணக்கிய முண்டம் செய்கிற தப்பை நீயும் செய்திருக்கிறாய். முதலில் நடுப்பாகத்தில் கை வைக்கலாமா? ஓரங்களைப் பிட்டுத் தின்னு. நடுப்பாகம் தன்னால் ஆறும். கடைசியில் அதில் கைவைக்க வேண்டும். ஆத்திரமடா உனக்கு!''

யாரோ பளார் என்று பிரம்பால் அடிப்பது போன்ற உணர்வில் துடித்துப்போனார் சாணக்கியர். எத்தனை பெரிய ஞானோதயம்! சூரியனும் அகல் விளக்கின் முன் தோற்குமோ? தோற்றுப் போய்விட்டதே!

எவ்வளவு சூசகமாகச் சொன்னாள் இக்கிழவி! எடுத்தவுடன் தலை நகரத்தைத் தாக்கக்கூடாது. கண்டுவரும் தோல்வியே இதனால்தான் போலும். நகரத்தின் சுற்றுப்புறங்களைத் தனதாக்கிக் கொண்டு, தலை நகருள் நுழைய வேண்டும்...

ஓ...

**ப**ல்லக்கில் சென்று கொண்டிருந்த சாணக்கியருக்கு இதனை எப்போது நினைத்தாலும் பெருமூச்சே வரும். இப்போதும் வந்தது. அந்த ஞானத்தாயின் இந்தக் கருத்தின் அடிப்படையில் படைதொடுத்ததால்தானே இத்தனை பெரிய சாம்ராஜ்யத்தைக் தனது காலடிக்குக் கொண்டுவர, முடிந்தது. அந்த ஞானத்தாயை அழைத்து வந்து கனகாபிஷேகம் செய்து நன்றிக்கடன் ஆற்றவேண்டுமல்லவா?

குறிப்பிட்ட அந்தக் குடிசையை நெருங்குகிறபோது அழுகுரல் சத்தம் வந்தது கேட்டு அதிர்ந்து போனார் சாணக்கியர்.

குடிசைக்கு வெளியே ஆணும்பெண்ணுமாய் நாலைந்து பேர். உள்ளே அழுவது ஆண்குரல்.

பல்லக்கை விட்டிறங்கிச் சென்று கவனிக்கிறார். அந்த ஞானத்தாய் வானத்தாளாகிக் கிடந்தாள். கொஞ்சநேரத்துக்கு முன்புதான் உயிர் பிரிந்ததாகச் சுற்றியிருந்தவர்கள் சொன்னார்கள்.

வந்திருப்பவர் சாணக்கியர் மகத சாம்ராஜ்யத்துக்கு முடிதரியாச் சக்கரவர்த்தி என்று கேள்விப்பட்டச் சிறுவன் எழுந்தோடி வந்து கழல்பணிந்து கட்டியழுதான்; ''குருவே! பாட்டி என்னை விட்டுப் போய் விட்டாள்! அன்று நீங்கள் வந்தபோது யாரென்று அறியாள். பின்னாளில் அறிந்து உங்களையும் சக்கரவர்த்தியையும் பார்க்க பெரிதும் ஆசைப்பட்டாள். எங்கள் வறுமையைத் தீர்க்க வருவீர்கள் என்று நாளும் எதிர்பார்த்தாள்!''

எல்லாம் சரி; இவன் தன்னைக்குருவே என்று அழைத்ததன் காரணம்? பின்னர் கேட்டுக் கொள்ளலாம்.

கிழவியின் தகனத்துக்கான ஏற்பாடுகளைக் கவனிக்கலானார் சாணக்கியர். எங்கிருந்தாலும் சந்தனக் கட்டைகளை எடுத்து வர ஆணையிட்டார். எல்லாமே சுறுசுறுவென்று நிகழலாயின.

தமது கையாலேயே அந்த ஞானத்தாயைக் குளிப்பாட்டினார். பொன்னறியா மணியறியா அந்தப் பிரம்படியை மூலக்கனலை, தனது மார்பில் தவழ்ந்த பொன்னாரத்தாலும் மணியாரத்தாலும் அலங்கரித்தார். தாமே மகனாக நின்று நீர்க்கடன் செய்தார். இது அவரது நன்றிக் கடன். மனத்துக்கு நயத்தகு சமாதானமாய்த் தெரிந்தது.

ஒரு நிம்மதி; எழுந்து எழுந்து அலைக்கழித்த பெருமூச்சுக்கு நிரந்தர நிம்மதி. ஞானத்தாயின் பேரப்பிள்ளையை என் செய்வது? விட்டுச் செல்வதைக் காட்டிலும் தேவனைத் தரவல்ல மாகபாவம் வேறில்லை. அழைத்துச் சென்று அவனுக்கு வேதங்கள் கற்பித்து, எதிர்காலம் ஏற்றமிகு நலன்களைத்தரச் செய்யலாமல்லவா?

குருவே என்றானே!..

நினைவு வந்தது. இதனை வழியில் கேட்டுக் கொள்ளலாம். தமது பல்லக்கிலேயே அவனுக்கு ஓர் இடம்ஒதுக்கிப் பயணமானார். வந்த படைகள் மகதம் நோக்குத் திரும்பலாயின.

ஒருநாள் போது பயணத்துக்குப் பிறகு..

மரங்கள் அடர்ந்த வனாந்தரத்தில் பகற்போது உணவையுண்டனர். பிறகு சற்றே இளைப்பாறிப் பயணத்தை மேற்கொண்டனர்.

பல்லக்கு மெல்லமாகவே சென்று கொண்டிருந்தது. உச்சியைத்தாண்டிய உக்கிரவெயில் இன்னும் குறையாமலேயே இருந்தது.

சாணக்கியர், அந்த இளைஞரை நோக்கினார்.

''நீ என்ன படித்திருக்கிறாய்?''

இளைஞன் சிரித்தான்.

''குருவே! படிப்பு என்பது என்னவென்று தெரியாது. உங்களைப் பற்றிப் பாட்டி அடிக்கடிச் சொல்வார். இப்பேர்பட்ட மாமேதை நம் வீட்டில் அமர்ந்து உண்டதால்,

அவரையே குருவாக எண்ணி வழிபடு; அறிவு தன்னால் வரும் என்று!''

''அப்படியா அந்த ஞானத்தாய் சொன்னாள்?''

''ஆம் குருவே!''

''என்னை வழிபட்டு வருகிறாயா?''

''தினமும்''

''அப்படியென்றால் என்னிலும் பெரிது ஏதுமில்லை என்கிறாயா?''

இளைஞன் கூர்ந்து கவனித்தான். சாணக்கியரும் ''தெய்வம்'' என்று சொல்லுவான் என்றே எதிர்பார்த்தார். ஆனால் இளைஞன் சொன்னான்; ''வளைந்த மூங்கில்!''

''வளைந்த மூங்கிலா?''

''ஆம் குருவே! இதோ பாருங்கள்.. மகாமேதையான உங்கள் தலைக்கு மேலே உயர்ந்து காண்பது அதுதானே!''

அதிர்ந்து போனார் சாணக்கியர். அப்படியும் ஓரக் கண்களால் தலைக்கு மேலே வளைந்து நீளும் மூங்கிலைக் கண்டார்.

''இதை நீயாகச் சொல்லுகிறாயா?''

''இல்லை குருவே! என் பாட்டி சொல்வாள். நாம் வளைந்த மூங்கில்போல், எதற்கும் பணிந்து உயரலாம். வளையாமல் வாழ்ந்தால், பாடைக்கு உதவும் மூங்கிலாகவும், கழைக்கூத்தாடி காலடிப்பட்டு நடக்கிற மூங்கிலாகவும்தான் வாழமுடியும். இதனை வைத்துத்தான் ''என்னிலும் பெரிது எது என்று நீங்கள் கேட்டபோது உடனே இந்த மூங்கில் கண்களில் படவே சொல்லிவிட்டேன்.

சாணக்கியரின் அதிர்ச்சி இன்னும் குறையவில்லை. அவரது கர்வமோ குறையலாமா என்று எண்ணியதே யொழிய, குறைந்தபாடில்லை. மனத்தில் இவ்விதம் தீர்மானித்துக் கொண்டார். மகதம் சென்றதும் இனி பல்லக்கிலேயே ஏறுவதில்லை. தமக்கும் மேலே ஒன்றா?

எனினும் இளைஞனின் புத்திகூர்மையைப் பாராட்டிக் கொள்ளத் தவறவில்லை. இவன் வளைந்த மூங்கில். தனக்குச் சீடனாக இருக்கப் பொறுத்தமானவன்தான்.

நாம் மட்டும் ஏன் வளையக்கூடாது?

ஐந்திலே வளையவில்லை; ஐம்பதிலா வளையப் போகிறது?

*-1989*

# வேட்டை வலம்

கங்கையும் சோணையும் கலந்து சங்கமிக்கிற காட்சியைப் பாடலிபுத்திரத் தலைநகரம், தினமும் பார்த்து மகிழ்ந்து கொண்டுதானிருக்கிறது.

அசோக மகா சக்கரவர்த்தி வேட்டைக்குப் புறப்பட்டு விட்டார்கள். வேட்டை வலமும் தைலக்காப்பும்தானே சக்கரவர்த்திக்கு வேடிக்கை விழா. சந்திரகுப்த மகாசக்கரவர்த்தி காலத்தில், தொடங்கி, அவர் மகன் பிந்துசாரன், அவர் மகன் அசோகர் வரை அமர்க்களப் படுத்துவதல்லவா இந்த வேட்டைவலம். சென்ற ஆண்டுவரை உயிருடனிருந்த மகா அரசியல் மேதை சாணக்கியராலேயே இதைத் தடுத்து நிறுத்த முடியவில்லையென்றால் வேறு எவரால் இயலும்!

வானில் மேகங்கள் கிழக்கு நோக்கி ஊர்ந்து கொண்டிருந்தன. இன்னும் ஒருவாரத்தில் பயணப்பட விருக்கிற கலிங்க யுத்தம் குறித்துக் கலிங்க வேந்தன் காரவேலனை எச்சரித்துத் தூது செல்கின்றனவோ? இருக்கலாம்.

ராஜபாதைகள் முழுவதும் மக்கள் கூட்டம். சாலையோரங்களில் *சவுக்குக்கட்டைகளைக் கட்டி அவற்றுக்குள்ளிருந்துதான் மக்கள் சக்கரவர்த்தியைத் தரிசிக்க வேண்டும். தவறி ஒரு சிறு குழந்தை வெளி வந்தால்கூட

---

* வரலாறு கூறும் உண்மை

தண்டனை கடுமையாக இருக்கும். இவ்விதம் தண்டிக்கப் பட்டவர்கள் அநநேகம்.

காவல் வீரர்களை புரவிகளில் அமர்ந்து சுற்றிச் சுற்றிக் கண்காணித்து வந்தனர். சொல்லப் போனால் இந்த வேட்டைவலம் ஒரு கொள்ளாக் காட்சிதான்.

பட்டத்து யானைமீது பொன்னாலாய அமளியில் அமர்ந்து, வில்லும் அம்புக்கூடுமாய் அசோக மகா சக்கரவர்த்தி வேட்டை வலம் வந்து கொண்டிருக்கிறார் முன்னே அரச பரிவாரங்கள் வாத்திய முழுங்கிச் செல்கின்றன. இதில் ஓர் அதிசயம் என்னவென்றால், பல்வேறு தேசங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட இளம் அழகிகள் இருபுறமும் அணிவகுத்துச் செல்வர். ஏன்? வழக்கில் கொண்டு வந்த பாட்டனார் சந்திரகுப்த மகாசக்சரவர்த்தியைத் தான் கேட்க வேண்டும். அவருக்குத்தான் பகைவர்கள் அதிகம். இரவுதோறும் வெவ்வேறு இடத்தில் படுத்து இரகசியமாக உறங்குவார். அசோகருக்கு என்ன வந்து விட்டது?

இச்சமயம்தான் எதிர்பாராத அந்த நிகழ்ச்சிநடந்தது. விதியின் பிழையென்று எல்லாரும் எண்ணினும் இது விவேகத்தின் நுழைவு என்பதை அசோக மகாசக்கரவர்த்தியே அறியவில்லையே.

ஏழைகளுக்கும் தாழ்த்தபடப்ட எலும்புக் கூடு களுக்கும் எந்தக் காலத்திலும் விமோசனம் இல்லை என்பதை முற்றுமாக அறிந்து உணர்ந்து, கட்டுப்பாட்டை மீறி வெளிப்பட்டாள் ஓர் அழகி. இளம்பெண் சௌமியா. சக்கரவர்த்தி வலம் வரும் பாதையின் நடுவே அவள் வந்து

நிற்கலாமா? அதுவும் வேண்டுமென்றே தனக்கென்ற ஒரு தைரிய நிமிரலுடன்! சேரிவாழ்பெண்ணுக்கு இப்படி ஒரு தண்டனையை விதிநிர்ணயிக்கலாமா என்று மக்கள் அறற்றி முணுமுணுத்தனர்.

காவல் வீரர்கள் அவளை விலகிச் செல்ல ஆணையிட, 'நீ யாரடா குதிரைக்கூலி' என்பது போலக் கண்களை உருட்டிக் கவனித்தாள் சௌமியா.

அமளியிலிருந்த அசோகர் ஆணவமாக அந்த இளம் அழகியைக்கவனிக்கிறார். பெண் என்பதால் வீரர்கள் அவளை நாயை இழுத்துப் போடுவதுபோலச் செயலாற்றத் தயங்கினர். சக்கரவர்த்க்கு முன்னே நடந்து வந்த பல நாட்டுப் பெண்மைக்கினுள் ஒருத்தி, இனிய பாலிமொழியில் சொன்னாள்; ''பெண்ணே! புத்தி கெட்டுவிட்டதா? தண்டனையை ஏற்கும்வரை ஓரமாகச் சென்று நில்!''

சௌமியா மூர்க்கமாககத்தினாள்: ''வேட்டைப் பரத்தையே! விலகிநில்! என்னைத் தொடாதே! தொடுவதற்கு உனக்கு யோக்கியதையில்லை.''

வேட்டை வலமே விர்த்து நின்றது. என்ன நடக்கப் போகிறது என்று மக்கள் இமைக்க மறந்தனர். ஒவ்வோர் இதயத்திலும் ஒவ்வொருவிதமான துடிப்பு.

அசோக மகா சக்கரவர்த்தி அறிஞர் பிரான். ஒரு பெண்ணின் துணிச்சலுக்குப் பின்னே பெரும்புயலும் இருக்கலாம். பேரமைதியும் இருக்கலாம். அம்பாரியிலிருந்தே கேட்டார்: ''பெண்ணே நீயார்?''

வீராங்கனையாய் சௌமியா வெடித்தாள்; ''கொஞ்சம் இறங்கிவந்து கேட்கலாமே கொற்றவனே!''

சுரீர்...

சவுக்கில் பலத்த அடி விழுகிறது அடித்தவள் பேரதிகாரம் படைத்த *ரஜ்ஜுகன்.

அடுத்து கொஞ்சமும் யோகியதை சௌமியா, ''தூ! ஒரு பெண்ணை விசாரிக்காமல் சவுக்கடிக் கொடுப்பதுதான் அசோக மகா சக்கரவர்த்தியின் ஆட்சியென்றால், வெட்கப்படுகிறேன். இன்னொர் அடி கொடுக்கலாமே ரஜ்ஜுகரே! உன்னைச் சொல்லிக் குற்றமில்லை; உனக்கு இப்பதவி கொடுத்தவரைச் சொல்ல வேண்டும்!''

சௌமியாவின் இந்தப் பொறிபறக்கும் சொல்கேட்டு, அசோகமகா சக்கரவர்த்தி அதிர்ந்து போனார். யானையை விட்டு இறங்கச் சொல்கிறாளே! ஏதோ ஒருவிடிவு அவரை அங்குசமர்க்க் கத்தியது.

இறங்கினார் மெல்ல அருகே வந்தும் நின்றார்.

''பெண்ணே...''

''என் பெயர் சௌமியா''

''ஓ...! சௌமியா! உயிருக்குத் துணிந்துதான் செயல்படுகிறாய்''

''எங்களுக்கு உயிர் என்கிற ஒன்ற இருந்தால்தானே துணிவதற்கு சக்கரவர்த்தி! நாங்கள் சேற்றில் புரளும் ஜடங்கள்; பன்றிகளிலும் பாவம் செய்தவர்கள்''

அசோகர் அரண்டு போனார்.

''சென்ற ஆண்டு இதே மாதிரி ஒருவன் கட்டு மீறி வெளிவந்தவன் கதியை அறிவாயா?''

* ரஜ்ஜுகன் என்பது முதலமைச்சருக்கு இணையான பதவி.

''அறிவேன், ஒருகாலைத் துண்டித்தீர்கள். அவர் வேறுயாருமில்லை; என் கணவர்.''

அசோகர் மேலும் அருண்டார். சௌமியாவே பேசினாள்.

''புருஷன் மனைவி எல்லாவற்றிலும் ஒத்திருக்க வேண்டும் என்று தரும நியாயங்கள் பேசுகின்றன. கணவன் ஒருகால் இழந்து மனைவி இருகால்கலுடன் நடமாடலாமா? இதிலும் ஒத்திருப்பதுதானே நியாயம்; தருமம்! எனது ஒருகாலை துண்டிக்கலாம் தேவனாம் பிரிய!''

தேவனாம் பிரிய..

''நீ எதுவரை படித்திருக்கிறாய் சௌமியா?''

''தாழ்ந்த குலத்துச்சேரிவரை படித்திருக்கிறேன். ஆனால் எங்களுக்கு வேட்டையாடத் தெரியாது. ஏனெனில் நாங்களே வாயில்லா ஜீவன்கள்! வாயிருந்தால் இதோ விசாரணையின்றி சவுக்கடிக் கொடுத்தாரே. அதற்குத் காரணம் கேட்டிருப்போம்!''

''வேட்டை வலம் வருகிறபோது யாரும் குறுக்கே நடமாடக் கூடாது.''

''மக்களுக்காக மன்னரா? மன்னருக்காக மக்களா?''

''ஏ, பெண்ணே! அதிகமாகப் பேசுகிறாய்! இவளைச் சிறைபடியுங்கள். ரஜ்ஜுகர் உணர்ச்சி வயப்பட்டுக் கத்துகிறார்.

''சிறையேன்! காலை வெட்டுங்கள். இங்கேயே தண்டனையை நிறைவேற்றலாம்!''

மேலும் ஏதோ பேச வாய் திறந்த ரஜ்ஜுகரைச் கையமர்த்தி சிந்திக்கிறார் அசோக மகா சக்கரவர்த்தி. பெரிதாகச் சிந்திக்கிறார். இப்பெண் தண்டனைக்காக மட்டும் சட்டத்தை மீறவில்லை. இவனுள் ஏதோ ஒரு நியாயம் சுழல்கிறது. ஏதோ ஒன்றுக்கு நீதி கேட்கவே துணிந்திருக்கிறாள்.

''சௌமியா! நாளை நீதிமன்றத்தில்...''

'வீதியில் நீதி கேட்டாள். ஒரு வீராங்கனை என்கிற சரிதம் இசோவரலாற்றில் இடம் பெறட்டுமே! தண்டனையும் வீதியிலியேயே வழங்கப்பட்டது என்கிற தருமம் கல்வெட்டுகளில் இடம் பெறட்டுமே!''

''நீ கேட்கும் நீதி! உன் கணவனுக்காகவா? அல்லது.''

''பிரபே! என் கணவனுக்காக நீதிகேட்பதால் ஒருகால் வந்துவிடப்போவதில்லை. இருகால்களிலிருந்தும் முடவர் களாய் தாழ்த்தப்பட்டுச் சாக்கடையிலும் கேவலமாக வாழும் மக்களை நீங்கள் தரிசித்து இருக்கறீர்களா? நீங்கள் விலங்குகளை வேட்டையாடப் புறப்பட்டீர்கள். உங்கள் அதிகாரிகள் அஃறிணைகளை யொத்த எங்களை வேட்டையாடுகிறார்கள். காட்டிலும் வாயில்லை. காட்டையொத்த எங்கள் வீட்டிலும் வாயில்லை.''

''உங்களை ஏன் வேட்டையாடவேண்டும்.''

''எங்களிடம் பொருளா இருக்கிறது? வயிற்றுக்கே பகலிருந்தால் இரவில்லை. ஆனால் என்னைப் போன்ற அழகும் செழுமையும் நிறைந்த இளம் பெண்கள் இருக்கிறார்களே!''

''இப்படியும் நடக்கிறதா?''

''ஏன் நடக்கவில்லை? இதோ சவுக்கால் அடித்தானே ரஜ்ஜூ பதவியில் இருக்கும் ராட்சஸன். இவன் என்னைக் கொள்ளையடிக்க முயன்றான். உன் புருஷனுக்கு ஒருகால் இல்லையே! அவனை வைத்துக் கொண்டு ஏன் வதைபடு கிறாய் என்று கேட்டான். அதனால்தான் நான் எனது ஒரு காலை இழக்கத் துணிந்தது.''

அசோகமகா சக்கரவர்த்தியின் கண்கள் சிவந்து கனன்றன. மகத சாம்ராஜ்யமே எரியுண்டு, அதன் தீக்கொழுந்துகள் தம்மைத் தாக்குவனபோலத் துடித்தார். மௌரிய குலமே தலை குனிந்து போனதாக உணர்ந்தார். சௌமியாவே மேலும் கர்ஜித்தாள்.

''தேவனாம்பிரிய, உங்கள் சலனம் எனக்குப் புரிகிறது. நீங்கள் அரண்மனைவாசி! பாடலிபுத்திரத்தின் ஓர் அழுகிய பகுதியே உங்களுக்குப் புரியவில்லையெனில் மகத சாம்ராஜ்யம் எங்கே தெரியப்போகிறது.? என்னுடன் விருப்ப மிருப்பின் வாருங்கள். சாம்ராஜ்யம் எப்படி யெல்லாம் அழுகிக் கொண்டிருக்கிறது என்பதைப் பார்ப்பீர்கள்.''

''வருகிறேன் தாயே!'' என்று ஆவேசம் பொங்கக் கத்தினார் அசோக மகா சக்கரவர்த்தி.

தென்பகுதி நோக்கி சக்கரவர்த்தி, நடந்தார். சௌமியா தனது சேரிப்பகுதிக்கு அழைத்துச் சென்றாள். தாழ்குல மக்கள், தங்கள் சக்கரவர்த்தியா இந்த நரகப்பகுதியில் நடந்து வருகிறார் என்று கூனிக்குறுகிக் கால்களில் விழுகிறார்கள்.

பாதையா அது? எங்கும் புழுக்கள் நெளியும் சாக்கடைகள். பன்றிக் குட்டிகளுடன் மனிதகுட்டிகள். உடையிருந்தும் இல்லாமல் எலும்புக் கூடுகள் சௌமியா சொன்னாள்.

''மகத பூபதி! இந்த நரகத்தைப் பார்த்திருக்கிறீர்களா? கேள்விப்பட்டிருக்கமாட்டீர்களே! சீழ்படித்த வாழ்வில் வாழ்கிற இவர்களும் ஜீவன்கள்தாம்! இவர்களுக்குத் தெரிந்தது பட்டினி; இவர்களுக்கு தெரியாதது பாவ காரியங்கள்.

அதோ பாருங்கள் 'உங்களால்தண்டிக்கப்பட்ட என்புருஷன் ஒருகாலில் தவமிருக்கிறார். அவர் என்ன வேலைப்பார்த்து என் வயிற்றை கழுவுவார்? இந்தப் பலவீனங்களே உங்கள் அதிகாரிகளை நோக்கி எங்களைப் பலிகேட்கச் செய்கின்றன. இங்கே எவனுக்கு அல்லது எவறுக்கென்று ஒரு தனிமை இல்லை. ஆயினும் வானமிருக்கிறது; மானமிருக்கிறது. உங்களுக்குப் படைதெரியும், வெற்றிதெரியும்; பணக் காரர்கள் தெரியும். பொதுவில் சொர்க்கம் தெரியும். நரகத்தை ஏட்டில் படித்திருப்பீர்கள். நாட்டிலேயே அது இருப்பதை அறியமாட்டீர்கள். இப்போது அறிந்து கொண்டிருப்பீர்கள். வேட்டை வலம் புறப்பட்டீர்களே, இந்த வேதனை வலத்தை அறிவீர்களா?''

''ஐயோ, சௌமியா, போதும், போதும், இனி இந்த வேட்டை வலம் கிடையாது; *என் காலத்தில் இது நிறுத்தப்படுகிறது.''

---

* சந்திரகுப்தன் காலத்தில் தொடங்கிய இந்த வேட்டைப் பழக்கம் அசோகர் காலத்தில் நிறுத்தப்பட்டது என்பது சரித்திரம்.

பரந்து விரிந்த அந்தத் தாழ்ந்த குலத்து மக்களெல்லாம் குழுமி, கைகளைத் தோள்களின் மீது போட்டுத் தலைகுனிந்து நிற்கின்றனர்.

அசோக மகா சக்கரவர்த்தி என்ன நினைத்தாரோ, ''சௌமியா! உன் கணவன் காலை வெட்டிய இப்பாவியின் காலை நீவெட்டுவாயாக!'' என்று கூறி வாளையுருவி நீட்டினார்.

முன்னே கூடியிருந்த முகமற்ற மனிதர்களும், பின்னே குழுமியிருந்த முகப்பரி வாரங்கனும், மாமன்னருடைய முடிவு கேட்டு ஓ. வென்றிரைந்தனர்.

சௌமியா, அந்த வாளுக்கு முத்தமிட்டு, வெட்டச் சொன்னா காலைப்பற்றிக் கண்ணீரால் கழுவினாள்.

''சௌமியா! என் சகோதரி!'' என்று அவளைத் தழுவிய அசோகமாக சக்கரவர்த்தியின் நெற்றிப்பொறியில் ஞனாதீபத்தை யாரோ ஏற்றுவது போல் தெரிகிறது.

''இக்கணமுதல், மனித உருவல் ஜடங்களாய் வாழும் இவர்கனுக்கு நீதான் ரஜ்ஜுகி! தேவையான பொருளைப் பெற்று இவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்! நகரத்தைச் சொர்க்கமாக்கு! எவரேனும் அதிகாரிகள் தலையிட்டால், அவர்கள் தலைகளைக் கொய்யவும் உனக்கு அதிகாரம் வழங்குகிறேன். இன்றுமுதல் நீ சௌமியாவல்ல; இந்த மக்களின் சௌகரியா!''

ஏழைமக்கள் இறைவனைப் பார்த்ததில்லை. அசோகமகாக் கடவுளை வணங்கிப் போற்றுகிறார்கள்.

''சௌமியா! கலிங்கப் போர் முடிந்ததும் உன்னை அரண்மனையில் அழைத்துக் கௌரவிப்பேன்!''

''வெற்றியோடு திரும்ப இந்த ஏழைகள் பிரார்த்தனை செய்வர். வெற்றியோடு திரும்புங்கள்''

சௌமியா கரம்கூப்பித் தலை வணங்குகிறாள். அவளது கண்களில் ஆனந்த நீர்த்திவலைகள்.

*-1994*

# பாதாமி

நந்திக் கொடி பறக்க, நாயகர்கள் பலர் சிறக்க, முந்தித் தலை நிமிர்ந்து முடி மன்னர் தலைகுனிய, சிந்திக்கச் செய்தவன் செம்மாப்பு மாவீரன், வந்திக்கவும் வாழ்த்தவும் வாள் போல் உயர்ந்து நிற்பவன் மாமல்ல நரசிசம்ம் பல்லவ மாகசக்கரவர்த்தி.

தெய்வங்களுள் நரசிம்மம் நெஞ்சுலுக்கும்; அரசர்க்கரசர்களுள் நரசிம்மம் அஞ்சியடக்கும். காஞ்சிக் கதிரவன் மகேந்திரபல்லவ மகாசக்கரவர்த்தி பெற்றெடுத்த மகோன்னத புதல்வனல்லவா?

நரசிம்மவர்ம பல்லவர் மாமல்லபரம் புறப்படுகிறார். மகத்தான ஏற்பாடுகளுடன் பாதுகாப்பினர் பக்க வரிசையில், மேலும், வாளுமாக நிற்கின்றனர். உடன் எவரும் செல்லவில்லை. ஏன்? பல்லவமாதேவியும் செல்லவில்லை. இந்தப் பயணத்திற்கு ஒரு கலைச் செல்வியின் பாயிரம் படிந்து கிடந்தது. அவளைப் பார்க்க வேண்டும்; பார்த்து மகிழ வேண்டும்! யார் அவள்?

★பாதாமி...

கி.பி.642இல் வாதாபி நகரத்தை அழித்து, பின் பாண்டிருடனும், இலங்கையிலும் போர் புரிந்து, போதுமென அமைதிகண்ட பல்லவ மகாசக்கவரத்தி மாமல்ல நரசிம்மர். கடல் மல்லையைப் பெருந்துறை முகப் பட்டினமாக மாற்றுவதோடு, கலைப்பட்டினமாகவும் உருவாக்கத் தொடங்கினார். தந்தை மகேந்திரபல்லவர் தொடங்கி வைத்த பணியை மகன் தொடர்ந்தார். அறுபதுக்கு

மேல் வயதாகி விட்டது. இனி ஆற்ற வேண்டியது கலைப் பணி என்கிற மும்முரத்துடன் ஈடுபட்டுக் கொண்டிருந்தார் நரசிம்மவர்ம பல்லவர். இந்தப் பணிக்கு அவருக்குக் கிடைத்த கருவூலம்தான் பாதாமி.

**வா**தாபியில் கண்ட கலை நுணுக்கத்தை அப்படியே இறக்குமதி செய்தாக வேண்டும். முதுபொழில் (இந்தியா) காண முடியாத கலைத்திறன் இங்கே காண வேண்டும். சாளுக்கிய சக்கரவர்த்தி புலிகேசியின் சிற்றப்பன் மங்களீசன் என்பான் சிற்பவல்லான். அவனது மேற்பார்வையில்தான் வாதாபி சிற்ப நகராய்த் திகழ்ந்தது. அப்பேர்பட்ட சிற்பவல்லான் தனக்குக் கிடைக்க வில்லையே என்கிற ஆதங்கத்தைத் தீர்த்தவளல்லவா பாதாமி என்கிற சிலையன்ன பேரழகி!

ஆரம்பத்தில் பாதாமி, மாமல்லபுரத்தை அடைந்து, அங்கு நடக்கும் சிற்பத் தொழிலைக் கண்ணுற்று வந்தாள். பணியாட்களுக்குத் தண்ணீர் கொடுத்துத் தாகம் தீர்க்கும் பணியினை அவளாகவே மேற்கொண்டிருந்தாள். யாரும் அவளை வேலைக்குப் பணிக்கவில்லை. அதிகாரிகள் ஊதியம் கொடுத்தும் வாங்க மறுத்துவிட்டாள். கலைப்பணி என்றாலே அது காசுக்குச் சிரிப்பதல்ல! சிலபல சமயங்களில் பட்டினியிலும் அது பதவிசாக இருக்கும்.

ஒருநாள் சிற்பியொருவன் விமான நுணுக்கத்தைப் பற்றிச் சிந்தித்த போது உடன் பேசிக் கொண்டிருந்த பாதாமி, இப்படிச் செய்யுங்கள் என்று ஒரு கருத்தை விளக்க, தலைமை சிற்பியே வெலவெலத்துப் போனார். அது மட்டுமல்லாது, பெரும்பெரும் பாறைகளில் புராணச் செய்திகளைச்

செதுக்கினால் பின்னாளில் பார்வையாளர்களுக்குப் பாடம் போதிப்பவையாக இருக்குமம் என கருத்து கூற, இச்செய்தி பல்லவ சக்கரவர்த்திவரை எட்டி விட்டது. இப்பேர்பட்ட கலைவல்லாளைக் காண நரசிம்மவர்ம சக்கரவர்த்தியே நேரில் வந்தார். பாதாமியின் கதை கேட்டு நெக்குருகிப் போனார். பின்னர் தான் அவளது சிலை வெட்கும் பேரழகே அவர் கண்முன் தெரிந்தது. இவள் சாளுக்கியன் மங்களீசனுடன் சிற்பப் பணிபுரிந்தவளா? சிற்பத் தொழில் வல்லவளா? ஆ! நாம் எதிர்பார்த்த கருவூலம் இதுவல்லவோ?

**பா**றைகளில்புராணக்கதைகளைச் செதுக்குகிறார்கள் சிற்பிகள். கோவர்த்தன மலையை கண்ணன் குடையாகப் பிடிக்கிறான். இடையர்களின் இனிதான காட்சிகள். இன்னும்...

இமயமலையின் கங்கைக்கரைக் காட்சியை அவள் ஓவியமாகச் சித்திரித்ததுதான் பல்லவ சக்கர வர்த்தியின் இதயத்தில் சிம்மாசனமே போட்டுவிட்டாள். குறிப்பாக..

முனிவர்களும் பலர்தவம் செய்கிறார்களாம். ஒரு பூனை சும்மா இருந்து தொலைத்து இருக்கக் கூடாதா? அதுவும் தவம் செய்வது போல பின்னங்கால்கள் மீது நின்று, முன்னங்கால்களைத் தலைக்கு மேல் சேர்த்த யோக நிலையில் அமர்ந்திருப்பது போல் ஒரு கற்பனை. இந்தக் கற்பனைக்கு ஒரு சிறந்த வெளிச்சம் போல், எலிகள் எல்லாம் கூடிப் பயம் நீங்கிப் பணிவது போலமைந்ததுதான். ஆ! மாமல்லபுரத்து அழியாப் புகழின் அற்புதக் கற்பனை.

பாதாமியின் கலைவண்ணம் நாளுக்கு நாள் பெருமை சேர்ந்து வந்தது. கடற்கரைக் கோயில் அவளது பார்வையில் தான் நிர்மாணிக்கப்பட்டு வந்தது. ஆங்காகங்கே சில கோயில்கள்.

மகிடாசுரன் கோயிலை அவள் நிர்மாணிக்கத் தீர்மானம் செய்து களத்தில் இறங்கியதுதான் கண்ணகி ஆவேசம். இதன் உட்பொருளைப் பல்லவ சக்கரவர்த்தியும் அறிவார். மங்களீசன் என்கிற சாளுக்கிய மகிடாசுரனை வதம் செய்ய வந்த சாமுண்டீஸ்வரியாக ஆவேசம் கொண்டு நிர்மாணித்தாள் பாதாமி. அவளுக்கிருந்த சாளுக்கிய பகை வெறியை அவர்கள் பாணிச் சிற்பத்திலேயே பழிவாங்கினாள்.

பின்னாளில் இது பலர் போற்றும் கற்காவியமாகப் போகிறது என்பதை அந்தச் சாளுக்கிய அழகி அறிந்தாளில்லை.

மாமல்லபுரத்தை தமிழ்ச் சிற்பிகள் மகத்தான கற்பனைகளுடன் சாளுக்கியக் கலப்பையும் சேர்த்து பிரமிக்க வைத்த பாதாமி பால் சிருக்கு பொறாமை இருக்கத்தான் செய்தது. பல்லவ மகாசக்கரவர்த்தியிடம் தனியாக மரியாதை பெற்று விட்டாளே! தன்னால் இயலாத ஒன்றை பிறன் செய்து முடிக்கிறபோது இயல்பாக ஏற்படும் காழ்புணர்வுதான். இதில் வியக்க ஒன்றுமில்லை.

இத்தனை பணிகளை பாதாமி, மாமன்னர் நரசிம்ம வர்ம பல்லவருக்காக ஆற்றினாலும் தாகம் எடுப்பவர்களுக்கு தண்ணீர் தரும் கைங்கரியத்தை விட்டாளில்லை. எந்தவிதச்

சன்மானத்தையும் எதிர்பார்த்தாளில்லை. பல்லவ மன்னர் இதயத்தில் ஏன் சிம்மாசனமிடமாட்டாள்?

ஒருநாள் பல்லவ சக்கரவர்த்தி மாமல்லபுரத் துறைமுகப்பட்டினத்துக்கு வந்து பார்வையிட்டார். மகிடாசுரன் கோயிலும், பாறைகளில் பதிந்திருந்த புராண வாசகங்களும் அவரை உணர்ச்சிக்கடலில் ஆழ்த்தி விட்டன. குறிப்பாக பூனை தவம் செய்ய எலிகள் கொண்டாடிய பவ்விய காட்சி, நினைக்கும்தோறும் சிரிப்பையுண்டு பண்ணியது. இவள் ஒரு குறும்புக்காரிதான்.

மாமல்லபுரத்து சிறிய மாளிகையில் தங்கி இருந்த சக்கரவர்த்தி, பாதாமியை அழைத்து வருமாறு பணித்திருந்தார்.

இரவு நேரம். பூரணிமை நிலவு, வானத்தில் வெள்ளித் தட்டாய் பிரகாசித்தது. எவருக்கு உணவு வழங்க? ஏழைகள் எட்டிப் பிடிக்கும் தட்டா அது? மண் தட்டே போதும் என்று மடிந்து சாகும் பிறவிகளாயிற்றே அவர்கள். இவர்களைக் கண்டுதானோ, பாதாமி, எளிமை கொண்டு நீர் வழங்கும் பணியில் ஈடுபட்டாள்; ஊதியம் பெறாத படு ஏழையாக வாழ்ந்து வந்தாள்? இருக்கலாம். இருக்கலாம்.

மன்னர் ஆணையை மறுத்து விட்டாள் பாதாமி. மாளிகைக்கு வர முடியாது என்று கூறிவிட்டாள். தனது மாளிகை கடற்கரைக் கோயில் என்றும், வாசத்தலம் கடற்கரை என்றும் சொல்லி அனுப்பி விட்டாள்.

மன்னரிட்ட ஆணைக்கா? இருந்தாலென்ன? சிற்பிகள் தாங்களா அளிக்கும் உணவையுண்டு. நடமாடும் சிற்பமாக

உலவி வருகிறவள்தானே அவள்? நாமார்க்கும் குடியல்லோம் என்கிற வரி உதயமான காலத்தில்தானே அவளும் வாழ்ந்து வருகிறாள்?

முழுநிலவு அவளது கம்பீர பெண்மை கண்டு வானளாவிய சிரிப்பு சிரித்தது. அந்தச் சிரிப்புக்கு அர்த்தம் இருப்பது போல, பல்லவ மகாசக்கரவர்த்தியே அந்தக் கடற்கரை வாசம் நோக்கி வந்து விட்டார். உடன் எந்த பரிவாரங்களையும் அழைத்து வரவில்லை.

கடற்கரை கோயில் வாசற்படியில் அமர்ந்திருந்த பவுர்ணமி அழகி பாதாமி, எழுந்து கொண்டாள். ஏதமிலா சிரிப்புதிர்த்து வரவேற்றாள்.

''வாருங்கள் சக்கரவர்த்தி!''

''கலைச்சக்கரவர்த்தியைத் தேடிநான்தான் வரவேண்டும். தவறு செய்து விட்டேன்!'' என்றார் நரசிம்மவர்மர், நயமாகச் சிரித்துக்கொண்டே.

பாதாமி தலை குணிந்தாள். கடலின் அலை நோக்கினாள். தன் நிலை பகர்ந்தாள்.

''சக்கரவர்த்தி! தவறு செய்துவிடக்கூடாதே என்பதால்தான் நான் மாளிகைக்கு வர மறுத்தேன்.''

சக்கரவர்த்திக்குப் புரிகிறது. புரியாதது போல் நோக்கிச் சொன்னார்;

''புரியவில்லை.''

பாதாமி வாதாபி நோக்கில் கவனித்து அவதானியாய் நகைத்தாள்.

''என்ன பாமாமி?''

''சக்கரவர்த்திக்குப் புரியவில்லையே என்று நினைக்கிறபோது ஏற்பட்ட சிரிப்பு. பிரபே! நீங்கள் என்னை விரும்புகிறீர்கள். என் அழகைக் கண்டல்ல; தமிழ்நாட்டில் இல்லாத அழகா? ஆனால் என் கலையழக உங்களைச் சொக்க வைத்திருக்கிறது'' என்று கூறி கடற்கரைக் கோயிலின் விமானத்தைக் கவனித்தாள். மாமல்லச் சக்கரவர்த்தி அவ்வளவு உயரதுக்கு உயர்ந்து இருக்கிறாரோ?

''என் விருப்பத்தை மட்டுமே சொல்லி இருக்கிறாய் பாதாமி!''

''எனக்கும் விருப்பமில்லையா என்ன? இருபத்தைந்து அறுபத்தைந்து விரும்புவதா என்று நான் நினைக்கவில்லை. அறுபத்தைந்தின் ரசனை இருபத்தைந்துக்கு இராது. இளமை வேறு; ரசனை வேறு;

மன்னர் தம்முள் சிரித்துக் கொண்டார்.

''பின் ஏன் மாளிகைக்கு வரவில்லை?''

''பிரபோ! இதுவரை உங்களுக்குச் சொல்லாத ரகசியத்தைச் சொல்லுகிறேன். நான் ஏன் தமிழகம் நாடி வந்தேன்? மங்களீசனைப் பழிவாங்க! கட்டாரியால் பழி வாங்க முடியாது; நீங்கள் மாமல்லபுரம் உருவாக்குவதை அறிந்தே உதவி செய்ய வந்தேன். தமிழ் மக்கள் பண்புடையவர்கள். எத்தனை இரவு இந்த கடற்கரையில் உலவி இருப்பேன். அதுவும் இளமையுடன் கூடிய அழகி. ஒருவர் தொல்லை தர வேண்டுமே! ஆனால் மங்களீசன்? என் அழகுக்காவும், இளமைக்காகவும் என் தந்தை

மகாசிற்பியைக் கொன்றான். இத்தனைக்கும் என் தந்தை தேச பகத்தி மிக்கவர். இல்லையெனில் தலைநகர் பெயரை எனக்கு வைத்து மகிழ்ந்திருப்பாரா? ஏன் கொன்றான். என்னை நித்தம் அனுபவிக்கக் கேட்டு மறுத்ததால்! அத்துடன் நின்றானா? என்னை கற்பழித்து கெடூரமாகச் சுவைத்தான். அவன் சுவைத்த இந்த உடலில் அந்தப் பாவியின் ரத்தம் கலந்த இந்த உடலில் உங்களின் மாவீரக் கலாசொரூபமான ரத்தம் கலக்கலாம்.. ஆனால், உங்கள் மரியாதைக்குரிய ரத்தத்தில் அந்த மாகபாவி கலந்து விடக்கூட்தே என்றுதான் கவனமாக நடந்து வருகிறேன். இது தவறா பிரபோ! சொல்லுங்கள் பிரபோ!''

விருட்டென்று எழுந்து கொண்ட பல்லவ மகாசக்கரவர்த்தி, தம்மையுமறியாமல் கரம் கூப்பினார். 'பாதாமி! இதுவரை நான் சந்தித்தவர்கள் பெண்கள். ஆனால் இப்போது சந்திப்பது பெண்ணின் முழு முகவரி! சக்தி என்பதன் அர்த்தம்!''

பாதாமியின் கண்களில் கடல் நீர் முத்துக்களாய் உதிர்த்தன.

''பாதாமி! உனது சேவைக்கும்; உயரிய பண்புக்கும் இப்பல்லவம் ஏதேனும் செய்தாக வேண்டும். இல்லை யென்றால் நன்றி மறந்ததாகும்.''

செய்வீர்களா பிரபோ!''

''மங்களீசனைப் பழிவாங்க வேண்டுமா?''

''சே! நாயடிக்க, வாளா? அவன் அண்ணன் மகனும், மாவீரச்கரவர்த்தியுமான புலிகேசியைப் பழிவாங்கி, பாதாமியையே எரித்து விட்ட பிறகு, மங்களீசன் யார், மங்களீசன்!''

''பின்? சொல்!''

''பல்லவத் திலகமே! எனது உயிர் அதிக நாள் நீடித்திருக்காது. மனக்களங்கம், உடல் சோர்வு ஒரு நாளைக்கு இந்தக் கடற்கரையில் வீழ்த்திவிடும். என்னைக் கடலில் தூக்கிப் போட்டு விடுவார்கள். அதை நான் விரும்பவில்லை. இந்தக் கடற்கரைக் கோயில் படிகளை நீக்கி, என்னைப் புதைத்து, மீண்டும் படிக்கட்டுகளைக் கட்டுவீர்களா?''

''பாதாமி! உன் கலைச்சேவைக்கு, இந்தக் கடற்கரைக் கோயிலின் உள்ளேயே குடியிருக்க வைக்கிறேன்.''

''ஐயோ, வேண்டாம். வேண்டாம்! தமிழ் மக்கள் பாதம் படுவதால் என் பவாம் போகும். அது போதும் பிரபோ!''

''நீ இறக்கிறபோது பார்த்துக் கொள்ளலாம். அதனை என்னிடம் விட்டு விடு. உன் ஆசை நிச்சயம் நிறைவேறும். மாமல்லபுரத்து நிர்மாணம் குறித்து பேசுவோம்.''

அவர்கள் வெகுநேரம் கடற்கரையில் உலவிக் கொண்டு பேசியிருந்தது, சில 'பெரி'துகளின் கண்களை உறுதத்தான் செய்தது.

காஞ்சியிலிருந்து புறப்பட பல்லவநரசிம்ம மகாசக்கரவர்த்தி. மாமல்லபுரத் துறைமுகப்பட்டினத்தை யடைகிறபோது, அவர் காதுகளில் விழுந்த நெருப்புச் செய்தி; ''காலையில் தான் பாதாமி உயிர் நீத்தாள்!''

மலைத்து, மருண்டு, மாமல்லபுரமே கிடுகிடுக்குமளவுக்கு 'பாதாமி! என்று கத்தி விட்டார்.

*பாதாமி, சில நாட்கள் நோய்வாய்ப்பட்டிருந்தாள்; மன்னருக்கு செய்தியனுப்பச் சொன்னாள் என்கிற செய்தி அப்போது அவருடைய செவிகளைத் தொடவில்லை. பின்னாளில் தொட்டுத் தண்டனைகள் நிறைவேற்றப்பட்டன என்பது வேறு கதை.*

*பாதாமியின் ஆசையை பல்லவ மகாசக்கரவர்த்தி நிறைவேற்றி வைக்கிறபோது பார்த்த பல கண்கள் மறுகின.*

*இவள் என்ன மன்னரின் காதலியா?*

*இன்றும் கடலலைகள் அந்தக் கடற்கரைக் கோயில் மீது பாய்ந்து அரிக்கிற போது ஒவ்வொரு முறையும் 'பாதாமி' என்றுதானே குரல் கொடுத்து பின்நோக்கிச் செல்கிறது.!*

***கதிரவன்- தீபாவளி மலர்- 1994***

# மாணிக்கக் கோபுரம்

அந்த வெள்ளைக் கோபுரம்...

திருவரங்கமே கொள்ளை கொண்ட கொடூரத்தைக் கண்டும் வெள்ளையாகவே சிரித்துக் கொண்டிருக்கிறது. அதனை மொட்டைக் கோபுரம் என்று வழங்கியதாலோ என்னமோ, திருவரங்கத்துக்கு வருகிறவர்கள் மொட்டை போடுகிறார்களோ, இல்லையோ, அந்தத் தீவுப்பட்டினமே மாலிகாஃபூரால் மொட்டையாகி விட்டதே என்று மறுகி அழுதவர்கள் ஆயிரம்.

இருப்பினும்...

இரண்டு பெண்மணிகள் மட்டும் 'அழுதது போதும், இனி ஆக்கப்பணி'' என்பது குறித்து ஆராய்ந்தனர். அவர்கள் தேவதாசி எனும் இழிகுலத்துக் கண்மணிகள்.

இட்ட இனிய பெயர்கள் மாணிக்கம், கனகம்.

இதயத்தே பள்ளி கொண்டு விட்டவன் நாலாயிரத் திவ்ய பிரபந்தகனுக்குரிய நாயகனான அரங்கநாதப் பெருமானல்லவா? அந்த நங்கையர் தலைபட்டது அந்தத் தலைவன் தாளுக்கல்லவா? இருவருமே ஆடற்கலை யரசிகள்!

'இழிகுலத்துப் பெண்களிடம் இப்படியா? என்று திருவரங்கத்து ஏழு சுற்று வீதிகளின் நாவு எழாமலில்லை. ஏனிருக்க முடியாது?

கற்பு என்பது குலத்தைப் பொறுத்ததல்ல; மனநலத்தைப் பொறுத்தது என்பதற்கு அவர்கள் ஓர் எடுத்துக்காட்டு.

அரங்கன் வழிபாட்டை முடித்துக் கொண்டு ஒவ்வொரு வாயிலாகத் தாண்டி வருகிறார்கள். வழிநெடுக ஒரே சிந்தனை, சிந்தனை, சிந்தனை.

எங்கு நோக்கினும் நடுங்கி ஒடுங்கிய மக்கள்; ஆண்ட பெருமையை மண்ணில் புதைத்து ஆமையாய்ப் போய்விட்டோமே என்கிற அவதிப்படும் நடமாட்டம். திரும்பிய தோறும் நடமாடும் அப்போதைய இஸ்லாமியர்களால் என்ன தீங்கு எப்படி நேருமோ என்கிற அமைதியின்மை. இந்தக் காட்சிகளைக் கண்டவாறு இருபெண்களும் என்ன துணிவாக நடந்து வருகிறார்கள்?

ஆனாலும், மாலிகாஃபூரை இது குறித்துப் பாராட்டவேண்டியதுதான்.

திருவரங்கத்தைவிட்டுப் புறப்படுகிறபோது, அத்தீவுப் பட்டினத்தை சேனாதிபதி இடல்கானிடம் ஒப்படைத்துப் பிரதிநிதியாக இருந்து பாதுகாக்க மட்டும் கட்டளையிட வில்லை; தமிழ்ப் பெண்களின் கற்பில் கைவைக்காம லிருக்கவும் பாதுகாப்பு உத்தரவைக் கடுமையாகப் போட்டிருந்தான்.

இது முற்றுகையிட்டுக் கொண்டிருந்த இஸ்லாமிய வீரர்களுக்கு எரிச்சல் ஊட்டுவதாகவுமிருந்தது. அவரவர் மனைவி மக்களை இழந்து இங்கே தவிக்கிறபோது இப்படி ஓர் உத்தரவா? 'அலிப்பயல் மாலிகாஃ'பூர் என்று மெல்ல முனகி ஏசிக் கொள்ளவும் செய்தனர்.

'ஓர் ஆட்சி கவிழ்வதே, பெண்களுடன் குறும்பு வைத்துக்கொள்கிறபோதுதான்' என்கிற மாசறு உண்மையைப் பலநாடுகளைக் கொள்ளையிட்ட மாவீரன் மாலிகாஃபூர் அறிந்த பேருண்மை.

இந்த நடவடிக்கைகளிலிருந்தும், திருவரங்கத்தில் அரங்கன் வழிபாடுக்கு மட்டுமே பெண்கள் வெளியில் தலைகாட்டுவர். அதுவும் முக்காடிட்ட வண்ணம். சில சமயங்களில் இவர்கள் தாங்களாகவே இஸ்லாமியராக மாறி முக்காடு அணிந்து கொண்டனரோ என்றும் யோசிக்கத் தோன்றும்.

மாணிக்கமும் கனகமும் முக்காடிட்டவண்ணமே சிந்தனையுடன் நடந்து வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுள் ஓர் எண்ணம். புனிதத் தியாகம் நிறைந்த எண்ணம். அழகு என்ன அழகு? அரங்கநாத பெருமான் மூடி மறைக்கப்பட்டிருக்கிறாரே! அவரது அழகை விடவா?

கனகத்தைவிட மாணிக்கம் பெரிதும் கவிதையழகு படைத்தவள். கனகம் சற்று மாநிறம். ஆயினும் கண்களை மலர்த்தினாளானால் மாணிக்கம் ஒளியழகு ஒரு கணம் மருட்சி காணும். இருவருமே இரு வேறு பட்ட அழகுப் பதுமைகள். மாணிக்கம் காதலிக்கத் தக்க அழகு. கனகம் காமமுறத்தக்க அழகு. இதில் எது பலியானால் என்ன என்பது இருவருடைய ரகசியத் திட்டம். தியாகம் என்பது ஒரே கோணத்தில் கிளையில் துளிர்ந்து மலரும் பூவல்லவே! அதற்கும் பலகோணங்கள், பல நிறப்பூக்கள் உண்டு.

இவர்களுடைய பூவின் நிறம், மணம்தான் என்ன?

மொட்டைக் கோபுரத்தை அடைந்ததும், மாணிக்கம் சற்றே தயங்கி நின்று அண்ணாந்து கவனிக்கிறாள்.

'ஏ, திருமங்கை மன்னனே! நீ ஆரம்பித்து வைத்த கோபுரம் ஏன் மொட்டையாக நின்றுவிட்டது? பிற்காலத்தில் திருவரங்கமே மொட்டையாகப் போகிறது.. இதில் என்ன பெரிய கவனம் தேவை என்றா? அரங்கநாதப்பெருமான் அப்படி ஏதேனும் கனவில் வந்து கலந்துரை நிகழ்த்தினானா?

மாணிக்கத்தின் இதயத்தே பொங்கி எழுந்து அலைபாய்ந்த கேள்விச் சொற்கள் இவை...

''என்னடி மாணிக்கம்! கோபுரத்தை இப்படி அண்ணாந்து கவனிக்கிறாய்? என்கிறாள் கனகம்.

ஏதோ கூற வாயெடுத்த மாணிக்கப் பேரழகியாள், மறுகிய பெருமூச்சுடன் நடந்தாள்.

**ப**திநான்காம் நூற்றாண்டு தொடக்க காலம் அப் போதைய வடதிசையில் தில்லியைத்தலைநகராகக் கொண்டு ஆண்டவன் அல்லாவுதின் அவனது நன்றிமிக்க உருவாக்கம்தான் மாவீரன் மாலிகாஃபூர் என்கிற யுத்தராட்சஸன்!

அவனது படைகள் நுழைந்துத் தென்நாட்டைப் பதறச்செய்துவிட்டன. அதற்குக் காரணம் அப்போது, மூச்சுவிட்டுக் கொண்டிருந்த பாண்டியர்களின் பங்காளிக் காய்ச்சல், காட்டிக் கொடுத்தான் ஒருவன்; மாட்டிக் கொண்டான் மற்றவன். சொல்லவேண்டுமா?

தமிழகத்தையே கொள்ளை கொண்டான் மாவீரன் மாலிகாஃபூர்.

612 யானைகளும், 96,000 மணங்கு பொன்னும் மணிகளும், 20,000 குதிரைகளும் கொள்ளையடித்துக் கொண்டு போகப்பட்டன. பொன்மணிகளில் பெரும் பாலானவை திருவரங்கக் கோயிலுக்குரியவை. இவ்விதம் கொள்ளையடித்துச் சென்ற மாலிகாஃபூர் மதுரையில் ஓர் இஸ்லாமிய தளபதியையும், திருச்சியில் ஓர் இஸ்லாமிய தளபதியையும் நிறுத்தி, பிரதிநிதியாக ஆள ஆணையிட்டுச் சென்றிருந்தான். திருச்சிப் பிரதிநிதிதான் இடல்கான் என்கிற வீரத்தளபதி. அவனது இருப்பிடம் எப்போதும் திருவரங்கமாகவே இருந்ததுதான் புரியாத புதிராக இருந்தது. இதற்குரிய காரணம், அரங்கநாதர் பள்ளி கொண்டிருந்த நீண்ட சிலை மறைக்கப்பட்டு விட்டதால், அதனைத் தேடித் துகளாக்க வேண்டும் என்று இடல்கான் வேவு பார்க்கிறான் என்று ஜாடை மாடையாகப் பேச்சும் அடிபட்டது. இந்தப் பேச்சுதானே ஸ்ரீரங்க தேவதையான மாணிக்கத்தைக் கலக்கமுறச் செய்து மனமாற்றத்தை உண்டுபண்ணியது. இதன் காரணமாகத் தானே அவளும் அவளது தோழியும் பேசி ஒரு முடிவுக்கும் வந்தது.

''கனகா! எப்படியும் இந்தப் பிரதிநிதி இடல்கானை நாம் மயக்க வேண்டும். இல்லை, அவன் நம்மை கண்டு மயங்கவேண்டும்''

''ஐய்யய்யோ! இது என்ன துர் புத்தடீ, மாணிக்கம்?''

''துர்புத்தியல்ல கனகம்! நற்புத்தி! வடக்கு நோக்கிச் சென்ற மாலிகாஃபூர் தென்னாட்டை நோக்கி இனி திரும்பப் போவதில்லை. இங்கே படைகளுடன் அட்டகாசம் புரிந்து வருபவன் இடல்கான். இவனைத் தொலைத்து விட்டால், இவனது படைகள் கலகலத்துப் போகும். எந்தக் கணமும்

காத்திருக்கும் நமது உறையூர் வீரர்களும் ஹொய்சள வீரர்களும் புகுந்து திருவரங்கத்தையும் அரங்கநாதப் பெருமானையும் காத்துவிடுவார்கள். இங்கே ஏற்படுகிற குழப்பத்தின் எதிரொலி மதுரைக்கும் கேட்குமானால் அங்கும் விடுதலை கிடைத்துவடும் எனவே, நமது நோக்கம் இடல்கானைத் தீர்த்துக்கட்ட வேண்டும். அது நானாக இருந்தாலும் சரி நீயாக இருந்தாலும் சரி, திட்டம் ஒன்றுதான். கலந்து முடிவு செய்து விடலாமா?

''மாணிக்கம்! நாம் வேசி குலத்தில் பிறந்தாலும் ஒழுக்கமுள்ள பெண்கள் என்ற நற்பெயரை இந்த ஸ்ரீரங்கத்தில் பெற்றுக் கொண்டிருக்கிறோம். அரங்க நாதன் சந்நிதிக்குச் சென்றாலும் நமக்கே முதல் மரியாதை என்பது போன்ற நிலை. நமது கோயில் தொண்டு அத்தகையது.''

''அந்தத் தொண்டைவிட இந்தத் தொண்டுதான் தலையாயத் தொண்டு. உயிர்த்தியாகத்தால் இதனைச் சாதிக்க முடியாது. கற்புத் தியாகம் ஒன்றில்தான் இதனைச் சாதிக்க முடியும். ஸ்ரீரங்கத்து ஏழுசுற்று மதில்களைவிடவா, நமது கற்பு பெரிது?''

''இடல்கான் இடறிவிழ வேண்டுமே!''

''விழவைப்பான் பவளவாயக் கமலச் செங்கண்ணன். நாம் வழிபட்டதற்கு இந்த வரத்தையல்லவோ கோருகிறோம். வரலாற்றிலும் சரி, புராணத்திலும் சரி, இப்படி வரம் கோரும் முதல் பெண்மணிகள் நாமாகத்தான் இருக்க முடியும்.''

''எண்ணியது.''

''.... நடக்கும், நடக்குமாறு நடந்து கொள்ள வேண்டும். ஏன் நாம் அபரிமித அலங்காரத்துடன் முக்காடின்றி அலைகிறோம்? இடல் கண்களில் படமாட்டோமா? அல்லது காதுகளில் விழமாட்டோமா என்பதற்காகத்தானே!''

''இதனால்தான் இந்தப் பெண்கள் கொழுப்பெடுத்துத் திரிகிறார்கள். எவனாவது முசல்மானிடம் அகப்பட்டுச்சாகப் போகிறார்கள் என்று பலர் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.''

''நன்றாகப் பேசிக் கொள்ளட்டும். நம்முள் ஒருத்திதான் தியாகம் செய்யப் போகிறோம். ஒருத்தி நிச்சயம் மிஞ்சுவோமல்லவா? அந்த ஒருத்தியின் மூலம் உண்மை ஸ்ரீரங்கம் கோபுரமேறி உலகுக்குப் பறைசாற்றுமல்லவா? நாம் சரித்திரத்தில் நிலைப்போம்!''

தோழிகள் இருவரால் கட்டிவிடப்பட்ட இரகசியத் தோரணம் இதுதான்.

இந்தப் பரந்துபட்ட உலகில் எந்த இரகசியங்களும் எனக்கு அப்பாற்பட்டவையல்ல, என்பது போல தினமும் சூரியோதயம் கண்டு, நிலவோதயம் சந்திக்கத்தான் செய்கிறது. இன்னமும் எண்ணிய செயல் ஈடேறவில்லையே என்கிற கவலை மாணிக்கத்துக்கு. சொல்லப் போனால் கனகம் கவலையைவிட மாணிக்கத்துக்குக் கவலையே மலைபோல் விம்மியது.

ஓரிருமுறை இடல்கான் கண்களில் படுகிற மாதிரி சந்தர்ப்பம் ஏற்பட்டும் ஏதும் அதிசயங்கள் நிகழ்ந்துவிட வில்லை. அப்போதும் வேதனைப்பட்டவள் மாணிக்கம்

தான். கனகத்துக்கு இது ஏதோ வீம்பான முயற்சி என்று பட்டதால், பெரிதுபடுத்திக் கொள்ளவில்லை. ஒருவேளை இடல்கான் கண்கள், கனகத்தின் கயல்விழி கண்பட்டு மயங்குமேயானால், மாணிக்கத்தின் இலட்சியம் முழுதுமாக நிறைவேறுவதற்கு மாறாக, ஸ்ரீரங்கத்துப் பெண்களைப் போல அதுவும் முக்காடு போட்டுக் கொள்கிற மாதிரியாய் விடுமோ?

ஓ... மாணிக்கம், வெந்து வெடித்துப் போய் விடுவாளே! அவளுக்கிருக்கிற மூர்க்கமான தீவிரம் கனகத்திடம் இயல்பாக இல்லையே! ஒருகால், இடல்கான் கண்களில் கனகம் விழுந்தால், செயற்கையாக முயற்சி செய்யப்போய், செயல் பலவீனப்பட்டு, மாணிக்கமும் சேர்ந்து பலியாகிப் போய் விடுவாளேயானால்?

மாணிக்கத் தவத்துக்கு ஒரு பிரசன்னமே போல வாய்ப்பு ஒன்று இயல்பாகவே உருவானது. அந்தப் பிரசன்னம் கனமாக இருந்துவிடக் கூடாதே என்று மொட்டைக் கோபுரம்கூடக் கொஞ்சம் கவலைப்படத்தான் செய்தது. அந்த வாய்ப்பு...

திருவரங்கத்தைக் கொள்ளையிட்டு, இடல்கான் பிரதிநிதித்துவம் ஏற்று சரியாக ஓராண்டு நிறைவடையப் போகிறது. நாளைய மறுநாளானால் ஓராண்டு பூர்த்தி.

இந்த இனிய நாளை எவ்வாறு கொண்டாடுவது?

பிரதிநிதித்துவம் வகித்த தளபதி இடல்கான் தீவிரமாகச் சிந்தித்தான். இது என்ன திருச்சி மலைக் கோட்டையைத் தகர்க்கிற சிந்தனையா? சாதாரணம். இதற்குபோய் மூளையைக் குழப்பிக் கொள்வானேன் என்று யோசனை

சொல்ல முன் வந்தான், காரியஸ்தனாகப் பணிபுரிந்த கோபால நம்பி.

சிறந்த வைணவன்தான் கோபால நம்பி. இதற்காகப் பதவி என்று வருகிறபோது விட்டு விடமுடியுமா?

சமயக்கூலித் தியாகம் செய்கிற மானுடங்கள் வாழ்ந்தனபோல கைக்கூலிகளும் அன்று முதல் இன்றுவரை வாழ்ந்தன. வாழவும் செய்கின்றன. கோபால நம்பியைக் குறைகூறிப் பயனில்லையே!

''ஹுசூர்! இதற்காகவா மூளையைக் குழப்பிக் கொள்வது? நம் ஸ்ரீரங்கத்தில் விலைமாது குலத்தில் பிறந்த கலைமாதர் இருவர் இருக்கிறார்கள். ஆனால் அழகில் சுளைமாதுகள். அந்தரங்கத்தில் அரங்கனின் சுனைமாதுகள்.''

''அப்படியென்றால்...''

''களியாட்டம் கூடாது. அவர்கள் கனலிகள்.''

''வேசிமகளிரிடமா-''

''ஏன்? அங்கே நெருப்பு இருக்க முடியாதா என்று சொல்ல மாட்டேன். இருக்கக்கூடாதா என்றுதான் கேட்பேன்.''

''பெயர்?''

''மாணிக்கம்,கனகம். ஆனால் ஒப்புக்கொள்ள வேண்டும்.''

''மறுத்தால் தண்டனை என்று கூறி ஏற்பாடு செய்யுங்கள். நாளைய மறுநாள் ஆயிரம்கால் மண்டபத்தில் ஓராண்டு பூர்த்திவிழா. நீங்கள் சொல்கிற நிலாக்கள் என்முன் ஆடவேண்டும்.''

''ஆடுவதோடுதானே?''

''இது நாளைய மறுநாள் யோசிக்க வேண்டிய விஷயம். ஏற்பாடு செய்யுங்கள்.''

ஒரு பை பொன் கோபால நம்பியின் கைக்கு மாறியது. ''ஸ்ரீரங்கநாதா!'' என்று வாழ்த்திக் கொண்டு புறப்பட்டார் கோபால நம்பி.

**ஆ!** எத்தனை நாட்களாக எதிர் பார்க்கிற வாய்ப்பு இது...

ஒன்று மயங்கவேண்டும். இல்லை மயக்க வேண்டும்.

இப்போது...

இரண்டுக்கும் எப்படி இடம் ஒதுக்கப்பட்டிருக் கிறதோ? தளபதி இடல்கான் முன் ஆடவேண்டும். அவன் மயங்குகிறானோ, இல்லை இருவருள் ஒருத்தி மயங்குகிறாளோ! ஆனால் இருவருமே என்றால் இயலாத காரியம். கோபுரம் ஏறி இந்த உலகத்துக்கு உண்மைகூற ஒருத்தி தேவையல்லவா?

கோபால நம்பி முதலில் வந்து கூறியபோது, அதிகமாக அடம்பிடித்து 'முடியாது' என்று மறுப்பவள் போல பா:வனை செய்தவள் கனகா.

'போயும், போயும் எங்கள் நாட்டியம் இடல்கான் முன்பா? அதுவும் ஸ்ரீரங்கம் கொள்ளையிட்டு ஓராண்டு வெற்றி விழாவுக்காகவா?''

கனகம், பாவனை செய்தாலும் எரிச்சலுற்றது, கொள்ளையடித்ததற்கு ஓராண்டு நிறைவு விழா

கொண்டாடுவதா என்பது பற்றியதில்தான். இந்த எரிச்சல் மாணிக்கத்துக்கு மட்டும் இல்லையா என்ன? ஆனால் எண்ணியது... எண்ணியது...

மாணிக்கம் சமாதானம் செய்தாள். ''போடி! போடி கனகா! கொள்ளையடித்ததற்கு ஆண்டு விழா கொண்டாடுவது குறித்து ஊர்மக்கள் கொதிக்க வேண்டும். அவனவன் நாமம் போட்டுக் கொண்டு நாராயணா என்று திரிகிற போது நமக்கென்ன வந்தது? தளபதி பொற்கிழி தருகிறார். நாம் நாட்டியக்கிழி தருகிறோம். பேசாமல் ஒப்புக் கொள்ளடி!''

கனகமும் ஒப்புக் கொண்டது போல பாவனை செய்தாள். ஆனாலும் உள்ளுக்குள் வெறித்தாண்டவம் அப்போதே சலங்கை கட்டத் தொடங்கிவிட்டது.

கோபால நம்பிக்கு வந்த காரியம் வாழ்த்து கூறிவிட்டதில் பரம திருப்தி. இடல்கான் தனது காம இச்சைக்கு அழைப்பானேயானால்? அது குறித்து இப்போது பேசினால், நன்றாக இராது. மேலும் மாணிக்கமும், கனகமும் திருவரங்கத்து அரங்கநாதர்பால் பேரன்பு பூண்டு பக்தி செலுத்தி வழிபட்டு வருபவர்கள். ஆடுவதற்கு ஒப்புக் கொண்டதே பெரிதான விஷயம். இதுவேறா? திறமை இருந்தால் இடல்கான் பார்த்துக் கொள்ளட்டும். திருப்தி இருந்தால் இவர்கள் ஒப்புக் கொள்ளட்டுமே!

ஆயிரம்கால் மண்டபத்தில், கொள்ளையிட்ட கொண்டாட்டமா? இதற்கு மாணிக்கம் கனகம் நாட்டியமா?

திருவரங்கம் மட்டுமல்லாது திருச்சிராப்பள்ளிவாழ் மக்கள் அனைவருமே எரிமலையெனக் குமுறினர். உறையூர் சோழர் குலம் ரத்தம் கொதித்தது. ஆ! இப்படி ஒரு சம்பவமா?

ஆயிரங்கால் மண்டபத்து ஆயிரம் தூண்களும், அதிரும்படியாக மாணிக்கமும் கனகமும் நாட்டியமாடினர். நாட்டியக்கரு வாமனாவதாரம்...

ஈரடியால் உலகை அளந்துவிட்டான் அரங்க நாதப் பெருமாள். இன்னும் ஓரடி மீதமிருக்கிறது. 'எங்கேடா, மாபலி அந்த ஓர் அடி' என்று கேட்பதுபோல மாணிக் கம் வலக் கா லை உயர் த திக் கேட்கிறாள். மாபலியாகப் பாத்திரமேற்று நடித்தவள் கனகா. அவளது மருட்சி நிறைந்த நடிப்புடன் 'அந்த ஓரடி வேறு எங்குமில்லை. இதோ தளபதி இடல்கானின் தலைதான்' என்பது போலச் சுட்டாமல் சுட்டிக் காட்டுகிறாள்.

புரிந்தவர்கள் சிரிக்கிறார்கள். அந்தச் சிரிப்பும் கூட எங்கே காட்டிக் கொடுத்து ஆடுபவர்களுக்கு ஆபத்தை விளைவித்துவிடுமோ என்று அடக்கமாகவே சிரிக்கிறார்கள். அந்தச் சிரிப்பு, நாட்டியத்தின் ரசனைபால் பட்டத்து போலும் என்று எண்ணிய இடல்கான். உடன் தானுமாகச் சேர்ந்துச் சிரிக்கலானாள்.

அந்த ஓரடிக்கு இடம் கிடைத்துவிடுமானால், அளந்த பாதங்கள் ஓய்வு கொள்ள திருப்பள்ளி கொள்வேன் என்ற ஆடி துவம்சம் செய்கிறாள் மாணிக்கம்.

ஓ... என்னமாய் இந்த அழகுப் பதுமை ஆடி மயக்குகிறது. என்று எண்ணிய இடல்கான் இதயத்தை மாணிக்கம் ஆழமாக இடம்பிடித்துக் கொண்டாள்.

ஆடல் முடிந்தது. ஆயிரம்கால் மண்டபம் கலைந்தது.

கோபால நம்பி, எவ்வளவு எடுத்துக் கூறியும் மாணிக்கம் வெகுவாக பிகுசெய்து கொண்டாள். எல்லாமே பாவனைதான்.

கோபால நம்பி குலை நடுங்கிப் போனான்.

மாணிக்கத்தை மட்டும் இரகசியமாக மஞ்சத்துக்கு ஒப்புக் கொள்ளச் செய்யவில்லையானால் கோபால நம்பியின் குடல் பிடுங்கப்படும் போன்ற உத்தரவு. அவன் தனது உயிருக்கும் குடும்ப வருவாய்க்கும் போராடினான். மாணிக்கத்துக்கு இது புரியாமல் இல்லை.

மாணிக்கத்து வீட்டில் எரிந்து கொண்டிருந்த இரண்டே தீபங்கள் இந்தப் பரிதாப நிலைகண்டு ஒளியலை மோதின.

எதிர்பார்த்ததுபோல தனக்கே இந்த வாய்ப்பு கிட்டியதில் மாணிக்கத்துக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. அவளது நிபந்தனைகள் அபாரமானவை. செய்யப் போவது அற்பத் தியாகம். இது அற்பமாக முடியாமல் ஆணித்தரமாக முடியவேண்டும். என்பதுதானே அவளது அபிப்ராயம். போதிக்கும் ஆலோசனைகள், எனவேதான் முரண்டு பிடித்துப் பேசினாள்.

''நம்பிகள் இப்படிப் பேசக்கூடாது. நான் விலைமாது மகள்தான். இது ஸ்ரீரங்கம் அறிந்த செய்தி. அதே நேரத்தில் நான் விலைக்குப் போகிறவளல்லள் என்கிற செய்தியும் ஸ்ரீரங்கம் அறிந்ததே! இதைவிட நன்கு அறிந்த செய்தி. நான் அரங்கநாதன்பால் உருகித் தொண்டு செய்யும் உண்மையான தேவதாசி என்பது. இப்போது சொல்லுங்கள் நம்பிகளே!''

''என்ன செய்வேன் மாணிக்கம்! இடல்கான் அடம்பிடிக்கிறான்''

''இதுதான் மாலிகாஃபூர் போட்டுச் சென்ற சட்டமா? இப்போதுதான் தெரிகிறது. மாலிகாஃபூர் கொள்ளைக் காரனாக இருந்தாலும் இயதம் நிரம்பியவன். இந்த இடல்கான் அதனை எடுத்து எறிகிறானா?''

''சொன்னேன். புரியம் படியும் சொன்னேன். மாலிகாஃபூர் என்ன இதற்காகத் தில்லியிலிருந்தா வரப்போகிறான் என்கிறான்.

''முடியாது என்றால் என்ன செய்வான்?''

''பலாத்காரம்''

''மக்கள் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டார்கள்''

''நமது மக்களைச் சொல்லுகிறாயாயா? அவனவன் தன் பெண்டாட்டி பிள்ளைகள் பிழைத்தால்போதும் என்று கண்டும் காணாமல் இருந்து விடுவார்கள். ஈனம், மாணம் ரோஷமுள்ள தமிழர்கள் செத்துப்போய் ரொம்ப நாட்களாகி விட்டன. இப்போது சுயநல மிக்கவர்கள் வாழ்கிறார்கள். என்னை எடுத்துக் கொள்ளேன். நான் ஈனம், மானம் பார்த்தால் பிழைப்பு நடக்குமா? இப்போது இருக்கிற தமிழர்கள் அக்கப்போர்களை ரசிக்கிறவர்கள். வேடிக்கை பார்க்கிறார்கள், தனக்குப் போட்டியாக இன்னொருத்தன் வரக்கூடாது என்று நினைப்பவர்கள். அதற்காக எதையும் செய்யத் தயாராக இருப்பவர்கள். போதுமா? இந்த இடல்கானை ஒழிக்க எந்நேரம் பிடிக்குமம் எவனுக்காவது தோன்றுகிறதா?''

ஓ.. இவர் நமது பிடிக்கு வருகிறார் என்பது தெளிவாகப் புலனானதைக் கண்டு, தனது திட்டத்தை வேற்றுருவில் திசை திருப்பி, அதன் தூண்டுகோலாக இவரைய பயன்படுத்துவது எப்படி என்று யோசிக்கலானாள் மாணிக்கம்.

''என்ன மாணிக்கம்! பதில் சொல்லாமல் பேசாமல் இருக்கிறாய்?''

''ஒன்றுமில்லை. நான் படுக்கை அழகியாகச் சம்மதிக்க மாட்டேன். பலாத்காரம் என்று வந்தால், இடல்கானை யாரும் ஒன்றும் செய்துவிட முடியாதுதான். ஆனால் கெட்ட பெயர் கூடும். நம்மவர் எதிர்காக்காவிட்டாலும் அவர் களுக்குள் காழ்ப்புணர்ச்சி எகும். இடல்கான் எப்போது தொலைவானோ இடத்தை நாம் பிடிப்போமா என்று எதிர்பார்ப்பவன் உதவித்தளபதி ஆடில்கான். இதன் மூலம் இடல்கான் தில்லிக்கு விரட்டப் படலாம் அல்லவா?''

''உண்மை. உண்மை இவனே மேல்! ஆடில்கான் வந்தால் இன்னும் அவஸ்தை!''

''அவஸ்தைதான் ஆரம்பமாகி விட்டதே! இதில் எவன் வந்தால் என்ன? இடல்கான் தனது பீடத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால் இப்படிப் பலாத்காரம் செய்து ருசி கண்டால், மேலும் அந்த ருசி தூண்டும். பதவி போகும். நான் சம்மதிக்கிறேன்.''

குதூகல அதிர்ச்சி கண்டான் கோபால நம்பி. அப்பாடா!

''ஆனால் நிபந்தனைகள் ஏராளம். நான் ஒருத்தி ருசி காட்டுவதன் மூலம். நாளை உங்கள் மகளைப் பார்த்து விடுவானேயானால் இதே ருசி தூண்டாது என்பத என்ன நிச்சயம்?''

இப்போது மருட்சி, அதிர்ச்சி கோபால நம்பிக்கு.

''வாஸ்தவம் வாஸ்தவம்.''

''அதனால் என்னுடைய நிபந்தனைகளை அனுமதி கேட்டு, ஏற்பாடு செய்ய வேண்டியது உங்கள் பொறுப்பு. என் ஒருத்தியின் தியாகத்தின் மூலம் பல பெண்கள் காக்கப்படலாம்.''

''நல்ல நிபந்தனையாக இருக்க வேண்டும்.''

''அரங்கேற்ற முடியாத நிபந்தனையை அரங்கேற்றுவதுஉங்கள் பொறுப்பு.''

அப்போது எரிந்து கொண்டிருந்த இருதீபங்களில் ஒன்று பொசுக்கென்று அணைந்து புகை கக்கியது.

'என்ன மாணிக்கம்! அபசகுனம் போல விளக்கு அணைகிறது.''

''இந்த அணையப் போகிற விளக்குக்காக அது அனுதாபப்பட்டது. அதை விடுங்கள். நிபந்தனையைக் கேளுங்கள். இடல்கான் என்னை இடர்பாடின்றி அடைய வேண்டுமானால், ஸ்ரீரங்கம் அறிய என்னைத் திருமணம் செய்து கொள்ளட்டும்.''

அதிர்ந்து போனார் கோபால நம்பி.

''இது முடிகிற காரியம்தானா? அவர் இஸ்லாமியர், நீ இந்து. எந்தப் பீடத்தில் வைத்துத் திருமணம் செய்வது?''

''பீடமாவது ஓடமாவது? ஊரறிய இவள் என் மனைவி என்றுசொன்னாலே போதும். இடல்கானுக்கு இடர்பாடு வராது. நானும் 'தாசிக்குல புத்தியைக் காட்டிவிட்டாள்' என்று ஊர்ப்பேச்சிலிருந்து தப்ப முடியுமல்லவா? இனி பல

பெண்களிடம் சேட்டை வைத்துக் கொள்ளாமல் நான் பாதுகாப்பாக இருக்கலாம் அல்லவா? இடல்கான் பதவி. ஆடில்கானிடம் போய்ச் சேராமல் கவனித்துக் கூறும் விதத்தில் இருக்கிறது. இல்லையெனில் முடிந்தால் பலாத்காரம் செய்து பார்க்கட்டும். நான் ஆடில்கான் பக்கம். சேர்ந்து கொள்வோன். நம்பியவர்களே! ஓர் உண்மை தெரியுமா? ஆடில்கான் கண்களும் என்னை மொய்த்துக் கொண்டிருக்கின் ற ன.

''ஆப்படியா?''

''சொல்ல வேண்டாமே என்று பார்த்தேன்.''

''மாணிக்கம்! ஒப்புதல் தந்து விடப்போகிறாய்! நான் போய் தளபதியிடம் பேசி சரிகட்டிப் பார்க்கிறேன்.''

''சரிகட்டுவது வேறு. சம்மதிக்கச் செய்வது வேறு. சம்மதிக்கச் செய்யுங்கள்.''

கோபால நம்பி, ஒரு திடமான எண்ணத்துடன்தான் விடைபெற்று வெளியேறினார்.

இஸ்லாமிய தளபதி இடல்கான், சம்மதித்து விட்டான். எதற்குச் சம்மதிக்காவிட்டாலும், ஆடில்கானால் வரப்போகிற ஆபத்து சம்மதிக்க வைத்தது. ஏதோ தனிமையில் வாழ்வதை விட மாணிக்கத்துடன் வாழ்ந்தால் போதும் என்றே சம்மதித்தான்.

மாணிக்கம் மகிழ்ந்தாள். கனகம் மகிழவில்லை. தனக்கு இந்த வாய்ப்பு கிடைக்கவில்லையே என்தபறகாக வல்ல, மாணிக்கத்தை இழக்கப் போகிறோமே! நல்ல சிநேகிதியை இழக்கமப் போகிறோமே என்கிற கவலையால் துவண்டு போனாள்.

என்ன! தளபதி இடல்கான் மாணிக்கத்தை மணக்கப் போகிறானா? மாணிக்கமும் சம்மதித்து விட்டாளா? என்ன கொடுமை இது? அரங்கநாதர் சந்நிதியே கதி என்று வழிபட்டுவந்த ஒரு கலைமாது இப்படி எதிரியாக ஓர் அயல் மதத்தவனுடன் சேர்ந்து ஏமமுறுவதாவது?

'சே! என்ன இருந்தாலும் அவள் விலைமாதுவின் குடும்பத்தைச் சார்ந்தவள்தானே? புத்தி எப்படிப் போகும்?''

ஏதோ தங்கள் புத்தி, சீராகவும் சிறப்பாகவும் இருப்பதுபோலப் பேசினர். இதில் சிலர், தங்கள் வீடுகளையும் இஸ்லாமியர்களுக்கு அடகு வைத்துப் பொருள்தேடிப் பிழைப்பவர்களும் இருக்கத்தான் செய்தனர். ஒன்றுமறியாக் கன்னி என்று பெயரெடுத்த பெண்களும் மாணிக்கத்தை மாசுகற்பித்து தூற்றவும் செய்தனர்.

இடல்கான் ஒப்புக் கொண்டபடி, ஸ்ரீரங்கம் பொது மேடையில் பகிரங்கப் பிரகடனம் செய்து, மாணிக்கத்தை மனைவியாக ஏற்றான். அப்போது மட்டும் கரகோஷம் எப்படிக் கிளம்பியது. வேஷம், வெறும் வேஷம். அரசியலுக்கென்றே போடுகிற அபத்தமான வேஷம்.!

கனகம் மட்டும் கண்கள் கலங்க இந்த வைபவத்தைப் பார்த்துவிட்டு வீடு திரும்பினாள்.

ஓ..ஒரு நல்ல சிநேகிதியை ஸ்ரீரங்கத்திலேயே ஓர் உத்தமப் பெண்ணை இழக்கப் போகிறோம்...

ஒரு நிறைவு...

ஊருக்கு இப்படி ஒரு பெண் இருந்தால் போதுமே...! என்பதுதான்.

அன்றைக்கு முதல் இரவு.

இடல்கான் இதயத்தே ஏதேதோ ஆசை அலைகள். அந்த அலைகள் துப்பும் நுரைகளுக்கிடையே மாணிக்கம் ஆனந்த நடனம் புரிவது போன்ற தவிப்பு.

ஆ! இந்த இரவு எப்போது வந்து தொலைக்கும்! இரவில்தான் காமம் இளைப்பாறுமோ? என்ன அடம் பிடிக்கிறாள் இந்த மாணிக்கம்? மேலும் ஏதோ நிபந்தனை என்கிறாளே! அது அவளது நீண்ட ஆசையும் கூட என்கிறாளே...!

என்ன அது.

சற்றைக்கெல்லாம் வந்து தெரிவிப்பதாகச் சொல்லி இருக்கிறாளே?

அதோ கால் சதங்கை ஒலி கேட்கிறது... காமத்துக்கினிய கனிரசம் வருகிறது...

நாணிக்கோணி நடை பயின்று வந்தாள் மாணிக்கப் பேரழகி மாணிக்கம்.

''வா, வா! எவ்வளவு அழகு? '' என்று இருகரம் நீட்டி வரவேற்றான் தளபதி இடல்கான்.

தூரவே நின்றாள் தூங்கா மணிவிளக்குப் பேரழகி.

''என்ன மாணிக்கம். வா. பக்கத்தில் உட்கார். நீதான் முதல் இரவு என்றால் இரவில்தான் மலர வேண்டும் என்கிறாய், சைத்தான் வேதம்!''

''உங்கள் துடிப்பு, நல்லதைச் சைத்தான் என்கிறது பிரபோ! அருகில் வராமலா போய் விடப் போகிறேன்?

என்றும் உங்கள் அடிமைதானே இந்த அடியாள்? இன்று முதலிரவு. முன்னமே நான் கேட்டுக் கொண்டேன். முதலிரவுக்கு முன் எனது இந்து தர்ம ஆசைகளை முடித்துவிடுகிறேன். உங்களுடன் இரண்டறக் கலந்துவிட்ட பிறகு, நான் அது குறித்துச் சந்திக்கக் கூடாது. நானும் அசலாக இல்லாவிட்டாலும் ஓரளவாவது உங்கள் மதத்தை மதிக்க வேண்டும். எனவே, உங்கள் ரத்தம் எனது உடலில் கலக்குமுன் நான் அரங்கநாதப் பெருமானைச் சேவித்துவிட்டு வந்து விடுகிறேன். நீங்களும் வர வேண்டும். நீங்கள் வந்தால் தானே, ஸ்ரீரங்கப் பிரதிநிதியின் மனையாள் என்கிற மதிப்பை எனக்கு மக்கள் வழங்குவர்? உங்களைக் கோயிலுக்குள் வரச் சொல்லவில்லை. வரச்சொல் வதும் தருமமல்ல. ஆயிரம்கால் மண்டபம் வரை வந்தால் போதும், நான் சென்று அரங்கநாத பெருமானைத் தரிசித்து வந்து விடுகிறேன்.''

இது என்ன பெரிய நிபந்தனை என்பது போல ஒப்புக் கொண்டு புறப்பட்டான் இடல்கான்.

இருவருமாக ரதத்தில் புறப்பட்டனர்.

வழிநெடுக காவல்கள்.

தளபதி இடல்கானுடன் வருகை தந்து கொண்டிருந்த மாணிக்கத்தைக் கண்டு, மக்கள் வாய்க்கு வந்தபடிப் பேசிக் கொண்டனர். அவர்கள் முக்ச்சு ழிப்புடன் முணுமுணுப்பது மாணிக்கத்துக்கு மட்டும் புரியிவல்லையா என்ன? இடல்கானுக்கும் புரியத்தான் செய்தது. இவர்கள் நம்மைத் தூற்றுகிறார்கள்..

ஓர் ஓரமாக நின்று கனகம் கவனிக்கிறாள். புரிகிறது. அவளும் கோயிலை நாடி நடக்கலானாள்.

ஆயிரம்கால் மண்டபத்தில் அமர்ந்து கொண்டான் தளபதி இடல்கான்.

மாணிக்கம் மட்டும் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு அரங்கநாதர் சந்நிதியில் நுழைய...

வெளியே பட்டர்கள் நிறுத்திவிட்டனர். நுழையக் கூடாது.

மாணிக்கத்துக்குக் கோபமோ, கோபம், இவர்கள் மனிதர்கள், இவர்களும் சமூகத்து மதில்கள்!

''என்னை நீங்களாக விடப் போகிறீர்களா? இல்லை, தளபதி இடல்கானும் பாதுகையுடன் சந்நிதியில் நுழைகிற துர்ப்பாக்கியம் நிகழ வேண்டுமா?''

பயந்து போன பட்டர்கள். கைகட்டி வாய்பொத்தி வழிவிட்டனர். இதுதான் சமூகம். இதற்குப் பெயர்தான் அரசியல். அரசியலுக்கு அறிவுமில்லை. செறிவுமில்லை என்ற எண்ணியவளாய் சந்நிதியுள் நுழைந்து அரங்கனைக் கண்ணீர் மல்க வேண்டிக் கொண்டாள். ஆனால் மன்னிப்புக் கோரவில்லை. மன்னிப்புக் கோர இதில் என்ன இருக்கிறது என்பது அவளுக்கே தெரியும். அரங்கனே ஆசிர்வதிக்கிற வேண்டுதலாயிற்றே!

வழிபாட்டை முடித்துத் திரும்ப, எதிரே கனகம். சேர்த்துக் கட்டிப்பிடித்துக் கொண்டு அழத் தொடங்கி விட்டாள்.

இருவர் அழுகையின் உட்பொருளையுணர்ந்த வண்ணம் அரங்கன் போலிச் சிலை ரூபத்தில் கவனித்துக் கொண்டிருந்தான். உண்மையான உற்சவரும், மூலவரும்தான் மறைக்கப்பட்டு எங்கிருக்கிறார்கள்? எங்கு கொண்டு

செல்லப்பட்டிருக்கிறார்கள் என்கிற செய்தி ரகசியமாக இருந்ததே! அந்த உண்மைச் சொரூபம் வெளியில் வந்து பழையபடி அரங்கன் சந்திநிதியில் வீற்றிருக்க வேண்டும் என்பதற்காகத்தானே தோழிகள் இருவரும் போட்ட திட்டம்! அது மாணிக்கத்து உருவில் நடைபெற இருந்தது.

நடைபெறுமா? என்பது கனகத்தின் கேள்வி. ஐயம்.

''முயன்று பார்ப்பேண்டி, முயன்று பார்ப்பேன், நீ மட்டும் எனது முயற்சி வெற்றி பெற்றால் கோபுரம் எறி உண்மையைப் பிரகடனம் செய்ய மறாவதே! எனது களங்கத்தைத் துடைக்கவல்ல ஒரே தோழீ நீ தான்!'' என்று விம்மலும் வேதனையுமாகச் சொன்னாள் மாணிக்கம்.

கனகத்திடமிருந்து விடை பெற்றுக் கொண்டு மாணிக்கம் புறப்பட்டாள்.

அழகுரம் வருகைக்காக ஆயிரம்கால் மண்டபத்தில் காத்திருந்த இடல்கான், எழுந்து கொண்டான்.

அருகே வந்த மாணிக்கத்தை நோக்கி, ''இனிமேல் இந்தச் சந்நிதி, சாஸ்திரம் என்று பேசமாட்டாயே!'' என்றான் இடல்கான்.

''பேசவிடாமல் செய்வான் அரங்கன் என்று நினைக்கிறேன்.

கோயிலைவிட்டு வெளியே வந்த நடந்தனர், ரதம்தொலைவில்...

மாணிக்கம் தயங்கினாள்.

''என்ன மாணிக்கம்?''

''ஒன்றுமில்லை பிரபோ! அதோ தெரிகிறதே மொட்டைக் கோபுரம்... அது முடிவு பெறாமலே போனது!''

''வெள்ளைக் கோபுரம்!''

''அப்படி இப்போது வழங்குகிறார்கள். அதன் பேரில் நின்று பார்த்தால் காவிரி அழகு தெரியும். நான் காவிரியை நேசிப்பவள். அவளை முழுமையாகத் தரிசிக்க வேண்டும். நம் இன்பமும் கா விரி வெள்ளம் போல் பாய்ந்தோட வேண்டுமல்லவா?''

நீ மட்டும் தனியாகவா?''

''ஐய்யய்யோ! பயமாக இருக்கிறது. நீங்கள் துணை வருவது நல்லது. காவிரியைப் பார்க்க மதம் குறுக்கிடாதே! நதிகள் எல்லா மதத்துக்கும் சொந்தமானவை?''

''எனக்கும் அப்படி ஓர் ஆசையுண்டு. கா விரியைப் பார்க்க வேண்டும் என்றல்ல, திருச்சி முழுவதையும் காண வேண்டும். என்று வா, போகலாம்!''

''அரங்காநாதா! பாதி பலித்தது!'' என்று வேண்டிக் கொண்டே மாணிக்கம் முன்னே நடக்க, இடல்கான் பின் தொடர்ந்தான்.

இருவரும் மொட்டைக் கோபுரமாம், வெள்ளைக் கோபுரத்து மீது ஏறினர். உச்சியை அடைந்தனர்.

காற்று அளவுக்கு மீறி சோ என்று வீசியது. மாலை நேரமும் வருகை தந்து கொண்டிருந்தது.

போபுர உச்சியில் நின்று கொண்டு கவனிக்கிறார் கள்.

திருச்சிராப்பள்ளி முழுவதுமாகத் தெரிவதைக் கண்டு வியந்து போனான் இடல்கான்.

காவிரியையும், வடபால் செல்லும் கொள்ளிடத்தையும் பார்வையிடுகிறார்கள். திருவரங்கம் ஒரு தீவு போல் காட்சியளிப்பதை விளக்கிக் கொண்டே வந்த மாணிக்கம், ஓர் ஓரத்துக்கு நடந்து வந்து ''இந்தக் கோபுரத்தை முழுமையாகக் கட்டி முடிக்காமல் விட்டுவிட்டான் ஒரு மன்னன்' என்றாள் மாணிக்கம்.

''ஏன்?'' என்று வியப்புடன் தன்னை மறந்து கேட்ட இடல்கானை, ''அதற்கு ஒரு நரபலி தேவைப்பட்டது. அது முடியாமல் போய்விட்டது'' என்று கூறிய மாணிக்கம், சற்றும் தயங்காமல் அப்படியே பிடித்து இடல்கானை வேகம் கொண்ட மட்டும் தள்ளினாள்.

அவ்வளவுதான்...

'ஓ... என்கிற இரைச்சலுடன் கோபுர உச்சியிலிருந்து வீழ்ந்த இடல்கானின் எலும்பு தேறவில்லை. அடுத்த கணமே சூழ்ந்திருந்த இஸ்லாமிய வீரர்கள் பயந்தும், ஆத்திரம் கொண்டும் மாணிக்கத்தைப் பிடிக்க ஓடி வந்தனர். ஆனால் மாணிக்கம்...

கோபுரத்து அடுத்த பக்கமாக ஓடி.. ''ஓ.. அரங்கநாதா! என் சபதம் நிறைவேறிவிட்டது'' என்று கூறிக் கரம் கூப்பி வணங்கி, கீழே விழுந்தாள்.

திருவரங்கமே கூடிவிட்டது.

கனகம் கதறிக் கதறியழுகிறாள்.

உண்மையறிந்த மக்கள், 'ஆ! இவள் வெறும் மாணிக்கமல்ல, அரங்கநாத மாணிக்கம்'' என்றனர்.

செய்தியறிந்து திருச்சியிலிருந்த சோழப் படைகளும் ஹொய்சளர் படைகளும் திரண்டு புறப்பட்டுவிட்டன.

ஆடில்கான் அரண்டு தலை தப்பினால் போதும் என்று ஓட்டம் பிடித்தான். இனி சூழ்ந்திருந்த இஸ்லாமியப் படைகளால் என்ன செய்ய முடியும்?

திருவரங்கம் அல்லோலகல்லோலப்பட்டது. முடிவில்...

மறைத்து வைக்கப்பட்டிருந்த அரங்கநாதப் பெருமான் மூர்த்தத்துக்கு வெளிச்ச விமோசனம் கிடைத்தது.

மாணிக்கத்தை வாழ்த்தாதார் யார்? அந்த மொட்டைக் கோபுரத்தை மாணிக்கக் கோபுரம் என்றும் அழைக்காதார் யார்?

***அமுதசுரபி – தீபாவளி மலர்-1989***